காச்மீரசைவம்

பெ. திருஞானசம்பந்தன்

பொன் விழா வெளியீடு

டாக்டர் S. இராதாகிருஷ்ணன்
மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக் கழகம்

பொன்விழா வெளியீடு

பொதுப் பதிப்பாசிரியர்

டாக்டர் வ. ஆ. தேவசேனபதி

காச்மீர சைவம்

காச்மீர சைவம்

ஆசிரியர் :

பெ. திருஞானசம்பந்தன்

டாக்டர் S. இராதாகிருஷ்ணன்

மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம்

சென்னைப் பல்கலைக் கழகம்

1978

© சென்னைப் பல்கலைக் கழகம், 1978

PRICE Rs. 7·00

அச்சிட்டோர் :
அவ்வை அச்சுக்கூடம்,
சென்னை-13.

அணிந்துரை

சென்னைப் பல்கலைக்கழகத்தின் மெய்யுணர்வு ஆராய்ச்சித் துறை 1927 செப்டம்பர் மாதத்தில் நிறுவப் பெற்றது. 1964 ஆகஸ்ட் மாதத்தில் இத்துறையைப் பல்கலைக்கழக மானியக்குழு மேல் நிலைக் கல்வி மையமாக ஆக்கியது. 1976 முதல் இதன் பெயர் டாக்டர் S. இராதாகிருஷ்ணன் மெய்யுணர்வு மேல் நிலைக் கல்வி நிறுவனம் என்பதாயிற்று.

தொடங்கப்பெற்ற நாள் முதல் இத்துறையின் குறிக்கோள் (1) இந்திய தரிசனங்களையும் (2) ஏனைய தரிசனங்களையும் ஆராய்வ தேயாகும். சென்ற ஆண்டில் இக்குறிக்கோளை உளங்கொண்டு சிறப்புச் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்யப் பெற்றன.

இந்திய மெய்யுணர்வுத்துறை பலவகைத்தாயிருப்பதைப் போலவே சைவமும் பலவகைத்து. இவ்வகைகளில் பெரும் பாலானவை வழக்கற்றுப் போயின. இன்று நமக்கு எஞ்சியுள்ளவை பின்வருவன.

(1) தமிழகத்தில் பெரு வழக்கிலும் கடல் கடந்த கீழை நாடு களில் சில இடங்களிலும் காணப் பெறுவதான சைவ சித்தாந்தம்.

(2) கன்னடம், தெலுங்கு, தமிழ் வழங்கும் மாநிலங்களில் பயிலப்பெறும் வீரசைவம்.

(3) காஷ்மீரத்தைத் தாயகமாகக் கொண்ட காஷ்மீர சைவம்.

(4) வேதாந்த சூத்திரங்களுக்குப் பேருரை வழங்கிய ஸ்ரீகண்ட (நீலகண்ட) சிவாசாரியர் அருளிச்செய்த சிவாத்வைதம்.

இவற்றுள் காஷ்மீர சைவத்தைத் தமிழக மக்கள் தெரிந்து கொள்வதற்காக, காஷ்மீர சைவத்தின் மூலநூல் ஒன்றன் தமிழ் மொழி பெயர்ப்பையும், காஷ்மீர சைவத்தின் அடிப்படைக் கொள்கைகளைச் சுருக்கமாக விளக்கும் தமிழ் நூல் ஒன்றையும் வெளியிட வேண்டுமென்று எங்கள் நிறுவனம் முடிவு செய்தது. காஷ்மீர சைவத்தை விளக்கும் சொற்பொழிவுகளை நிகழ்த்தவும் அவற்றை நூல் வடிவில் எழுதித் தரவும் எங்கள் நிறுவனம் விடுத்த வேண்டுகோளைப் பேராசிரியர். பெ. திருஞானசம்பந்தன் அவர்கள்

அன்புடன் ஏற்றனர். காஷ்மீர சைவத்தின் அடிப்படைக் கொள்கைகளை விளக்கிப் பேராசிரியர் நிகழ்த்திய மூன்று சொற்பொழிவுகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவருகிறது.

பேராசிரியர் பெ. திருஞானசம்பந்தன் அவர்கள் ஆங்கிலம், வடமொழி, தமிழ் ஆகிய மும்மொழிகளில் புலமை பெற்றுள்ளதுடன் சைவத்தில் ஆழ்ந்த பற்றும் புலமையும் உடையவர்கள். சைவத்தின் அகல நீள ஆழங்களையும் பரப்பையும் தெரிந்து கொள்ளும் வகையில் சொற்பொழிவுகளை நிகழ்த்தியும், நூலாக எழுதியும் சிறப்பித்த அவர்களுக்கு எங்கள் நிறுவனம் பெரிதும் கடமைப் பட்டுள்ளது.

1977 செப்டம்பர் மாதத்தில் இத்துறை ஐம்பது ஆண்டுகள் நிரம்பப்பெற்றது. இதன் பொன்விழாக் கொண்டாட்டத்தை யொட்டி எங்கள் நிறுவனத்தில் சென்ற ஆண்டு முதல் நிகழ்ந்த சொற்பொழிவுகளைப் பொன்விழா வெளியீடுகளாக அமைத்துள்ளோம். பொன்விழா வெளியீட்டில் ஒன்றாக இந்நூல் வருவது பெருமகிழ்ச்சிக் குரியது.

சிறப்புச் சொற்பொழிவுகளை அமைக்கவும் வெளியிடவும் பொருள் உதவி செய்துவருவதோடு ஊக்கமும் ஆக்கமும் தந்து வருகிற தமிழக அரசுக்கும், பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் மால்கம் S. ஆதிசேஷையா அவர்களுக்கும், பல்கலைக்கழக ஆட்சிக் குழு/அலுவலக உறுப்பினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இத்துறையை உயர்த்திப் பத்து ஆண்டுகள் வரை பொருள் உதவி தந்ததோடு அமையாது, பின்னரும் இந்நிறுவனத்தின் முன்னேற்றத்தில் பரிவு காட்டிவரும் பல்கலைக் கழக மானியக் குழுவிற்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

மெய்யுணர்வுத் துறை தொடங்கப் பெற்றபோது அதனை விரிவாகவும் உயர்வாகவும் அமைத்த பேராசிரியர் காலஞ்சென்ற S. S. சூரியநாராயண சாஸ்திரி அவர்களுக்கும், முப்பத்தைந்து ஆண்டுகளாக முழு மூச்சாக உழைத்து அதனைச் சிறப்புறச் செய்த நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் டாக்டர் T. M. P. மஹாதேவன் அவர்களுக்கும் நிறுவனம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

அச்சுத் தாள்களைச் சரிபார்க்க உதவிய டாக்டர் வை. இரத்தின சபாபதி அவர்களுக்கு நிறுவனத்தின் நன்றி உரித்தாகுக. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த அவ்வை அச்சுக்கூடத்தாருக்கு எங்கள் நன்றி.

வ. ஆ. தேவசேனாபதி
பொதுப் பதிப்பாசிரியர்

முகவுரை

இந்திய தத்துவத்தைத் தமிழ்மொழி வாயிலாகப் பயிலும் முதுகலைப் பட்டப்படிப்பு மாணவருக்குப் பயன்படும் வகையில் அவர்கள் பாடத்திட்டத்தில் ஒரு பகுதியாக அமைந்துள்ள 'காச்மீர சைவம்' பற்றி மூன்று சொற்பொழிவுகள் நிகழ்த்துமாறு டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவன இயக்குநரான டாக்டர் வ. ஆ. தேவசேனுபதி அவர்கள் என்னைப் பணித்தார்கள். அப்பணியை மேற்கொண்டு 1978-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெற்றன. அவையே இந்நூல் வடிவைப் பெற்றுள்ளன.

இப்பணியை மேற்கொள்ளுமாறு பணித்த சென்னைப் பல்கலைக் கழகத்தாருக்கும் சிறப்பாக எனக்கு உவப்பான இத்துறையில் பணி செய்யுமாறு ஊக்குவித்த இயக்குநர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இப்போது பணியாற்றிக் கொண்டிருக்கும் தமிழ், சம்ஸ் கிருதம் ஏனைய இந்திய மொழிகள் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆட்சி யாளர்கள் இப்பணியை நான் மேற்கொள்ளுமாறு இசைவு தந்ததற் காக அவர்களுக்கும் என் நன்றி உரித்து.

சென்னை
23—3—1978

பெ. திருஞானசம்பந்தன்.

பொருளடக்கம்

			பக்கம்
	அணிந்துரை	...	iii
	முகவுரை	...	v
1.	வரலாறு	...	1
2.	பரம்பொருளும் அதன் வெளிப்பாடும்	...	8
3,	சீவாத்மா		22
4.	பந்தமும் மோக்ஷமும்	...	34
5.	பிற்சேர்க்கை :—		54
	(i) நூல் மேற்கோள்கள்		
	(ii) அரும்பத உரை		

1. வரலாறு

சைவம் மிகத் தொன்மையான ஒரு சமயம். ஆரியர் வருகைக்கு முன்பே இது இந்நாட்டில் நிலவி வந்ததற்குச் சான்ருக மொகஞ் சதரோ நாகரிக காலத்தில் கிடைக்கப்பெற்ற பொருள்களுள், யோக வடிவைத் தாங்கியதாயும் த்ரிசூலம் போன்ற ஒன்றைக் கொண் டுள்ளதுமான ஒருருவத்தை எடுத்துக்காட்டுவோர் உண்டு. வேத காலத்திய உருத்திரக் கடவுளின் சில இயல்புகள் புராண காலத்திய சிவனுடைய இயல்புகளோடு ஒன்றிவிட்டன என்று கூறுவர் பண்டார்கர் முதலிய அறிஞர்கள். ருக் வேத காலத்திய ரிஷிகள் உருத்திரனை 'பிஷக்தமன்' (வைத்தியநாதன்) என்று போற்றினர். யஜுர் வேதத்தின் நடுப் பகுதியில் சதருத்ரீயத்தில் 'பசூனும் பதி:', உயிர்களுக்கெல்லாம் தலைவன் என்று போற்றப்படுகின்ற சிவனைக் காண்கிரேம். பவன், சர்வன், ஈசானன் என்றெல்லாம் அவன் போற்றப்படுகின்ருன். சுவேதாசுவதர உபநிடதம் பதி, பசு, பாசம் பற்றிப் பகர்கினறது. மகாபாரதத்தில் உபமன்யு முனிவரால் கிருஷ்ணன் சிவயோகம் பற்றி உபதேசிக்கப்படுகிருன். கி. மு. இரண்டாம் நூற்ருண்டில் வாழ்ந்த பதஞ்சலி முனிவர் தனது மகா பாஷ்யத்தில் சிவன், ஸ்கந்தன், விசாகன் ஆகியோர் பூசிக்கப்பட்ட தையும், சிவபாகவதர்கள் என்ற ஒரு வகையினர் இருந்தனர் என்ப தையும் குறிப்பிடுகிருர்.

தமிழ்ச் சங்க இலக்கியத்தில் 'ஆலமர் செல்வன்', 'பிறவா யாக்கைப் பெரியோன்', 'நீல மணி மிடற்ருேன்', 'திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்' என்ற பெயர்களில் சிவன் குறிக்கப்படு கின்ருன். 'அஷ்டமூர்த்தி' காளிதாசனுலும் சீத்தலைச்சாத்தனுராலும் குறிக்கப்படுகின்றது. புராணங்கள் சிவன் பெருமையை விரித்துரைக் கின்றன.

ஏழாம் நூற்ருண்டில் வாழ்ந்த ஞானசம்பந்தர் அப்பர் ஆகியோ ரின் காலம் தொடங்கி சைவம் தென்னுட்டில் புத்துயிர் பெற்று

வளரத் தொடங்கியதெனினும், அவர்கள் காலத்திற்கு முன்பே காரைக்காலம்மையார், திருமூலர் ஆகியோர் நூல்களிலேயே சைவ சமயக் கோட்பாடுகளை நாம் தெளிவாக உணர்கிறோம்.

இந்திய நாட்டில் சைவத்தின் மூன்று குறிப்பிடத்தக்க பிரிவுகளாகக் கொள்ளத்தக்கவை, ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தென்னாட்டில் நிலவிவந்த சைவ சித்தாந்தம், ஒன்பதாம் நூற்றாண்டு தொடங்கி நிலவுகின்ற காச்மீர சைவம், பன்னிரண்டாம் நூற்றாண்டு தொடங்கி நிலவிவரும் வீரசைவம் ஆகியவை.

பொதுவாக சைவம் வேதங்களையும் ஆகமங்களையும் பிரமாண நூல்களாகக் கொண்டுள்ளன. சித்தாந்த சைவர்கள் வேதத்தைப் பொது நூல் எனவும் ஆகமத்தைச் சிறப்பு நூல் எனவும் கொண்டுள்ளனர். சிவாத்துவைதத்தைப் பரப்பிய ஸ்ரீகண்டரும், திருமூலரும் வேதத்திற்கும் சிவாகமத்திற்கும் வேறுபாட்டைக் கண்டிலர். சிவாகமங்களை வேதமாகிற பசுவின் பாலாகக் கண்டனர். 'ஓதும் வேதாந்தம் என்றுச்சியில் பழுத்த ஆரா இன்ப அருங்கனி பிழிந்து சாரங் கொண்ட சைவ சித்தாந்தம்' என்றார் குமரகுருபரர். இச் சிவாகமங்கள் இருபத்தெட்டு என்பர். அவையாவன காமிகம், யோகஜம், சிந்த்யம், கரணம், அஜிதம், தீப்தம், சூக்ஷ்மம், சகஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம், விஜயம், நிசுவாசம், சுவாயம்புவம், ஆக்னேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகபிம்பம், ப்ரோக்தம், லலிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுலம் ஆகியன. இவற்றுள் பத்தை வித்யேசுவரர்களுக்கும் பதினெட்டை உருத்திரர்களுக்கும் சதாசிவர் உபதேசித்தார் என்பது ஒரு மரபு. இப்பெயர்ப் பட்டியலில் மாறுபாடு இருத்தல் கூடும்.

இவற்றுள் கூறப்பெறுது திருமூலரால் கூறப்படுபவை தேவியாமளமும் காலோத்தரமும் ; உமாபதி சிவம் சதரத்னசங்கிரகத்தில் மேற்கோளாக எடுத்தாண்ட பதினேறு ஆகமங்களில் மேலே குறிப்பிடப்பெற்றவற்றுள் இடம் பெருத பராக்யம், விசுவசாரோத்தரம், சர்வஞானேத்தரம், காலோத்தரம், தேவீகாலோத்தரம் ஆகியவை உள்ளன.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இருபத்தெட்டு சிவாகமங்களுள் முதற் பத்து (சுப்ரபேதத்திற்கு பதில் மகுடாகமத்தைக் கொண்டு) த்வைத தந்திரங்கள் (ஆகமங்கள்) என்றும், அடுத்த பதினெட்டு (சில பெயர் வேறுபாடுகளுடன்) த்வைதாத்வைத தந்திரங்கள்

என்றும், காச்மீர சைவத்தில் பிரத்யபிஜ்ஞா தத்துவத்தை விளக்கும் தந்த்ராலோகத்தின் உரையாசிரியராகிய ஜயரதர் குறிப்பிட்டுள்ளார். இவற்றுள் காமிகம், மகுடம் போன்ற ஒரு சில ஆகமங்கள் அத்வைத சைவவாதிகளான காச்மீர சைவர்களால் மேற்கோள்களாக ஆளப் பட்டுள்ளபோதிலும் 'அத்வைத தந்திரங்கள்' என்று அவர்களால் போற்றப்படுபவை அறுபத்துநான்கு. அவை, ஒவ்வொரு பிரிவிலும் எட்டு தந்திரங்களைக் கொண்டவையாக எட்டு பிரிவுகளில் அடக்கப் பட்டுள்ளன. அப்பிரிவுகளாவன—பைரவம், யாமளம், மதம், மங் கலம், சக்ராஷ்டகம், பகுருபம், வாகீசம், சிகாஷ்டகம் என்பவை. இவற்றின் விரிவை டாக்டர் காந்திசந்திர பாண்டேயின் அபிநவ குப்தர் பற்றிய ஆங்கில நூலில் (பக். 78–80) காண்க.

மேலே கூறப்பட்ட த்வைத த்வைதாத்வைத, அத்வைத தந்தி ரங்களோடு நான்காவதாக 'குலதந்திரம்' என்ற பிரிவு அபிநவ குப்தரால் சுட்டப்பெறுகிறது. இது அஸ்ஸாம் பகுதியில் தோன்றிய தாகவும், இதைத் தோற்றுவித்தவர் மீனசித்தர் எனப்படும் மச்சந்தர் எனவும், அவருக்குப் பின்னர் வந்தவர்கள் சுமதிநாதர், சோமதேவர், சம்புநாதர், அபிநவகுப்தர் எனப்படுவர் எனவும் அறிகிறோம்.

எட்டாம் நூற்றாண்டிற்கு முன்பு காஷ்மீரத்தில் சைவமும் பௌத் தமும் பின்பற்றப்பட்டுவந்தன. பௌத்த விஹாரங்களைக் கட்டு வித்த மக்களும் மன்னர்களும் சிவன் கோவில்களையும் விஷ்ணு கோவில்களையும் கட்டுவித்தனர் என்று கல்ஹணரின் ராஜதரங் கிணியைப் பதிப்பித்த டாக்டர் ஸ்டீன் கூறுகிறார். எட்டாம் நூற் றாண்டில் லலிதாதித்ய மன்னரால் அபிநவகுப்தரின் மூதாதையரான அத்ரிகுப்தர் கன்னோஜ் நகரத்தினின்றும் அழைத்து வரப்பட்டார் என்றும் அதன் பிறகே சிவாகமங்கள் காஷ்மீரத்தில் அறிமுகப்படுத் தப்பட்டன என்றும் கூறப்படுகிறது. அசோகரால் பௌத்தம் காஷ் மீரத்தில் பரப்பப்படுதற்கு முன்னரே அப்பகுதியில் பல தெய்வ வழி பாடு இருந்ததெனவும், அர்த்தநாரியான சிவனே அத்தெய்வங்களுள் முதன்மையாக வழிபடப்பட்டவர் எனவும் கல்ஹணரின் நூலி லிருந்து ஊகிக்கப்படுகிறது. சைவமும் பௌத்தமும் ஒருங்கிணைந்து வாழ்ந்த காரணத்தால் ஒன்று மற்றொன்றின் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இருந்தன. குமாரிலபட்டர் போன்றோரின் செயலால் எட்டாம் நூற்றாண்டு தொடங்கி பௌத்தம் நிலைகுலையத் தொடங்கியது. ஆதிசங்கரரும் ஒன்பதாம் நூற்றாண்டில் காஷ்மீரப்

பகுதியில் விஜயம் செய்து த்வைதபரமாக வழங்கிவந்த சைவத்திற்கு ஒரு புது திருப்பத்தைத் தந்தார்.

காஷ்மீர தேசத்தில் வாழ்ந்த அறிஞர் பெருமக்களால் தங்கள் நூல்களின் வாயிலாக பரப்பப்பட்ட காரணத்தால் இது 'காஷ்மீர சைவம்' என்று வழங்கப்படுகிறது. 'த்ரிக சாஸ்திரம்' என்பதே இத்தத்துவ நெறிக்கு உரித்தான பெயர். 'த்ரிகம்' என்பது 'சிவன், சக்தி, அணு (உயிர்)', அல்லது 'பதி, பாசம், பசு' என்ற முப் பொருள், அல்லது 'பரை, அபரை, பராபரை' என்ற சக்திகள், அல்லது அபேதம், பேதாபேதம், பேதம்' என்ற நிலைகள் ஆகியவை பற்றிக் கூறுவதால் அப்பெயர் பெற்றதெனப் பலவாறு கொள்ளப் படுவதுண்டு.

கைலாசத்தில் வீற்றிருந்தருளும் ஸ்ரீகண்ட சிவன் ஒருகால் துர்வாச முனிவரை விளித்து சைவ சாஸ்திரங்களைப் பரப்புமாறு பணித்தார் எனவும், துர்வாசர் மானசிகமாக மூன்று புத்திரர்களைத் தோற்றுவித்து முதற் புத்திரரான திரியம்பகரிடம் அபேத சைவ சாஸ் திரத்தையும், இரண்டாமவரான ஆமர்த்தகரிடம் பேத சைவ சாஸ் திரத்தையும், மூன்றுமவரான ஸ்ரீநாதரிடம் பேதாபேத சைவ சாஸ்தி ரத்தையும் ஒப்படைத்து பரப்புமாறு கூறினர் என்றும் ஒரு வரலாறு உண்டு. திரியம்பகர் பரப்பிய அபேத சைவமே 'த்ரிகம்' எனப் படும் அத்வைத சைவம் என்று கூறப்படுகிறது.

இத்த்ரிக தரிசனத்தை முப்பெரும் பிரிவுகளாகப் பிரிப்பதுண்டு. அவை (1) ஆகம சாஸ்திரம் (2) ஸ்பந்த சாஸ்திரம் (3) ப்ரத்ய பிஜ்ஞா சாஸ்திரம் என்பன. இம்மூவகை சாஸ்திரங்களும் (நூல்கள்) த்ரிக தத்துவத்தை விளக்குவனவேயன்றி அதன் முப்பிரிவுகள் என்று கொள்ளுதல் கூடாது.

(1) ஆகம சாஸ்திரம் : 'ஆகமம்' என்ற சொல் வழிவழியாக மரபுபற்றி வந்தவற்றைக் குறிக்கும். இதில் ஞானம், கிரியை இரண்டுமே பேசப்படுபவை. இச்சாஸ்திரங்களுள் குறிப்பிடத் தக்கவை—மாலினீ விஜயம், ஸ்வச்சந்தம், விஞ்ஞான பைரவம், உச்சுஷ்ம பைரவம், ஆனந்த பைரவம், மிருகேந்திரம், மதங்கம், நேத்ரம், நைசுவாசம், சுவாயம்புவம், ருத்ரயாமளம் ஆகியவை. இவற்றுள் பெரும்பாலானவை த்ரிக தரிசனம் தோன்றுவதற்கு முன்பே இருந்தன. அவை த்வைதக் கொள்கைக்கேற்ப பெரும்

பாலான மக்களால் அறியப்பட்டு வந்தன. இப்போக்கை மாற்ற எழுந்தது 'சிவசூத்திரங்கள்' என்ற முதனூல். இக்கருத்து சிவசூத்ர விமர்சனியில் கூறப்பட்டுள்ளது.'[1]

சிவபெருமானுல் இயற்றப்பட்டமையால் இவை 'சிவசூத்திரங்கள்' எனப் பெயர் பெற்றனவென்றும், இவை ஒரு மலைப் பாறையில் வடிக்கப்பெற்றிருந்ததாகவும், வசுகுப்தரின் (9ஆம் நூ.) கனவில் சிவபெருமான் தோன்றி அத்வைத பரமாக 'சிவரஹஸ்யாகம சாஸ்திர சங்கிரகம்' என்று பின்னர் அழைக்கப்பட்ட இந் நூலை மக்களிடம் பரப்புமாறு பணித்தார் என்று ஒரு செய்தி கூறப் படுகிறது. இச்சூத்திரங்களுக்கு 'விருத்தி' (ஆசிரியர் அறியப்படவில்லை) ஒன்றும், பாஸ்கரரால் எழுதப்பட்ட விமர்சினியும் உள்ளன.

ஸ்வச்சந்தம், நேத்ரம், விஞ்ஞான பைரவம், மதங்கம் ஆகிய தந்திரங்களுக்கு அத்வைத பரமான உரைகள் எழுதப்பட்டுள்ளன என்றும் உண்மையிலேயே அவை த்வைத பரமான சைவ நூல்களாகவே அதுவரை வழங்கிவந்தன என்றும் ஜகதீச சந்திர சாட்டர்ஜி "காச்மீர சைவம்" பற்றிய தனது ஆங்கில நூலில் (1914) குறிப்பிட்டுள்ளார்.[2] க்ஷேமராஜர் இதை தமது உரைநூலில் தெளிவாகக் குறிப்பிடுகிறுர்—'ஸ்வச்சந்த தந்திரத்திற்கு வழிவழியாக பேத வியாக்யானம் தரப்பட்டு வந்துள்ளது. அதனுல் விளைந்த அறியாமையைப் போக்க எழுந்தது, அத்வைதாமிருதத்தைப் பெருக்கும் எனது உத்யோதம் என்ற உரை.'[3] மாலினி விஜயதந்திரம் என்ற நூலும் இவ்வாறே அத்வைதக் கொள்கைக்கேற்ப ஆளப்பட்டது.

(2) ஸ்பந்த சாஸ்திரம்: ஆகம சாஸ்திரத்தை விளக்க எழுந்ததே இது. இதில் முதன்மையான நூல் 'ஸ்பந்த சூத்திரங்கள்'. இவை வசுகுப்தராலேயே எழுதப்பட்டன என்று க்ஷேமராஜர் கூறியபோதிலும் கல்லடரே இதன் ஆசிரியர் என்று கருதப் படுகிறது. கல்லடரால் எழுதப்பட்ட விருத்தியுடன் கூடிய இந் நூலுக்கு 'ஸ்பந்த ஸர்வஸ்வம்' என்று பெயர். ஸ்பந்த சூத்திரங்களுக்கு எழுதப்பட்ட உரைகளாவன—ராமகண்டரின் விவிருதி, உத்பல (வைஷ்ணவரின்) பிரதீபிகை, க்ஷேமராஜரின் ஸ்பந்த சந்தோஹம், ஸ்பந்த நிர்ணயம் ஆகியவை.

(3) பிரத்யபிஜ்ஞா சாஸ்திரம்: இச்சாஸ்திரமே தத்துவ விளக்கமாக அமைந்த விசார சாஸ்திரமாகும். இத்துறையில் தருக்க

ரீதியான தத்துவ விளக்கம் தரப்படுகின்றது. வசுகுப்தரின் மாணவ ரான சித்தர் சோமானந்தரே இதற்கு வழிகாட்டி. சுவபக்ஷம், பர பக்ஷம் இரண்டையும் எடுத்துக் கூறும் முறை இவருடையது. இத் துறையில் அமைந்தது இவரது 'சிவதிருஷ்டி'யாகும். 'திருஷ்டி' என்பதும் 'தரிசனம்' என்பதும் ஒன்றே. அவரே இதற்கு 'விருத்தியும்' எழுதியிருக்கின்றார். அடுத்த நூல் அவருடைய மாணவரான உத்பலரின் 'ஈசுவர பிரத்யபிஜ்ஞா' என்பதாகும். இந்நூல் காஷ்மீரத்திற்கப்பாலும் புகழ் மிக்கதாயிருந்ததால் மாதவா சாரியர் தனது 'சர்வதர்சன சங்கிரகம்' என்ற நூலில் 'த்ரிக சாஸ்தி ரத்தை' 'பிரத்யபிஜ்ஞா தர்சனம்' என்றே வழங்குகிறார். இதற்கு உரைநூல்களாக அமைந்தவை, உத்பலரின் விருத்தி, அபிநவகுப்த ரின் பிரத்யபிஜ்ஞா விமர்சினீ அல்லது லகு விருத்தி, பிரத்யபிஜ்ஞா விவிருதி விமர்சினீ ஆகியவை.

இவையன்றி இத்தத்துவங்களை விளக்கும் தோத்திர நூல்களும் உள்ளன. உத்பலரின் சிவஸ்தோத்ராவளீ பிரசித்தமானது. சைவர்கள் அனுட்டிக்க வேண்டிய நெறிமுறைகளும் சில நூல்களில் விளக்கப்பட்டுள்ளன.

இவற்றினின்றும் வேறுபட்ட முறையில் சைவத்தின் எல்லா அம் சங்களையும் விளக்கும் முறையில் எழுதப்பட்டது, அபிநவகுப்தரின் 'தந்த்ராலோகம்.' எளிய முறையில் எழுதப்பட்ட நூல்களுள் அபி நவகுப்தரின் பரமார்த்தசாரமும், **க்ஷேமராஜரின் பிரத்யபிஜ்ஞா ஹ்ருதயமும்** குறிப்பிடத் தக்கவை. அத்வைத வேதாந்தத்தில் சதா னந்தரின் வேதாந்தசாரம் எப்படி எளிய அறிமுக நூலாகக் கொள்ளத் தக்கதோ அப்படியே பிரத்யபிஜ்ஞா ஹ்ருதயமும்.

பின்னே வந்தவர்களுள் பரமார்த்தசார சங்கிரகத்திற்கு உரை எழுதிய யோகராஜரும் (12-ஆம் நூ.) தந்தராலோகத்திற்கு உரை எழுதிய ஜயரதரும், விஞ்ஞான பைரவத்திற்கு உரை எழுதிய சிவோ பாத்யாயரும் (18-ஆம் நூ.) குறிப்பிடத்தக்கவர்கள்.

வசுகுப்தர் (9–ஆம் நூ.)

கல்லடர்
c. 850—900

சோமாநந்தர்
c. 850—900

[காச்மீர மன்னன்
அவந்தி வர்மன் 855—883]

உத்பலாசாரியார் (மா) → ராமகண்டர் (மா)
c. 900—950 (c. 900—925)

லக்ஷ்மணகுப்தர் (மா)
(c. 950—1000)

அபிநவகுப்தர் (மா)
(c. 993—1015)

க்ஷேமராஜர் (மா)
(12 ஆம் நூ.)

யோகராஜர் (மா)
(12-ஆம் நூ.)

[குறிப்பு : மா = மாணாக்கர்]

2. பரம்பொருளும் அதன் வெளிப்பாடும்

यस्योन्मेषनिमेषाभ्यां जगतः प्रलयोदयौ ।

तं शक्तिचक्रविभवप्रभवं शङ्करं स्तुमः ॥[4]—*ஸ்பந்த காரிகை, 1.*

கல்லடரால் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் 'ஸ்பந்த காரிகை' என்ற நூல் 'த்ரிக சாஸ்திரத்தின்' முதல் நூலான 'சிவசூத்திரங்களுக்கு' விளக்கமாக அமைந்தது. கடவுள் வாழ்த்தான இக்காரிகையில் பரம்பொருளான சங்கரன் துதிக்கப்படுகிறான். 'எவன் கண் திறந்தால் உலகம் தோன்றுகிறதோ, எவன் கண்ணை மூடினால் உலகம் மீண்டும் அவனிடம் ஒடுங்குகின்றதோ அவனைத் துதிக்கிறேன். அவனது இச்சா சக்தி முதலான சக்திகளால் பிரபஞ்சத்திலுள்ள சராசரமனைத்தும் தோற்றுவிக்கப்பட்டு உள்பொருள்களாகக் காட்சியளிக்கின்றன. இவையனைத்திற்கும் தோற்றுவாய் அவனே. அச்சங்கரனைத் துதிக்கிறேன்.'

சங்கரன் எக்காலத்தும், பஞ்சகிருத்யங்களை நிகழ்த்திக்கொண்டிருக்கும்போதும், ஒரே தன்மையன். அவனுடைய சொரூபத்தில் என்றும் மாற்றமில்லை. அப்பரம் பொருளை 'பரமார்த்த சத்' என்று வடமொழியில் வழங்குவர். அவன் கண்ணைத் திறக்கிறான் மூடுகிறான் என்பதெல்லாம் உபசார வழக்கே. இச்சா மாத்திரமாய் செயல்கள் நிகழ்கின்றன என்பதை அவை குறிப்பனவாகக் கொள்ள வேண்டும். சத்தியினின்றும் வேறுபட்டவனல்ல சங்கரன். பல்வேறு உருவும் வண்ணமும் தன்மையும் கொண்ட பரமேசுவரனுடைய சக்தியால் தோன்றிய இப்பிரபஞ்சம் அவனின்றும் வேறுபட்டதல்ல. இப்பிரபஞ்சத் தோற்றமும் ஒடுக்கமும் அவனுடைய லீலை எனப்படும் திருவிளையாடல். அவனுடைய சக்திவிபூதியே இப்பிரபஞ்சம். மாயா வசத்தினால் பலவாகக் காணப்படுகின்றன, இப்பிரபஞ்சத்தின் சராசரங்கள். அவனுடைய விரிவே ஏனைய முப்பத்தைந்து தத்துவங்கள். அவனுடைய சொரூபம் என்ன என்பதைக் காண்போம்.

ஒவ்வொரு சமயமும் பரதத்துவத்தை, மேலான உண்மைப் பொருளை வெவ்வேறு கோணத்தில் கண்டாலும் அவை முற்றிலும் ஒன்றுக்கொன்று முரண்பட்டன என்று கொள்ளுதல் இயலாது; அனைத்துச் சமயங்களும் ஒரே இயல்பினதான பரம்பொருளைத்தான் சுட்டுகின்றன என்றும் கூறவியலாது. ஆயினும் ஒவ்வொரு சமயமும் பிற சமயங்களின் கருத்துக்களைத் தழுவியோ தனதாக்கிக் கொண்டோ வளர்ந்திருக்கிறது என்பதையும் மறுக்கவியலாது. மக்கள் சமூகப் பிராணிகள் என்பதை ஒப்புக்கொண்டால், ஒப்புரவு அவர்கள் வாழ்க்கை நெறி என்பதை ஏற்றுக்கொண்டால், மக்களால் உருவாக்கப்பட்ட சமயங்களும் கொடுத்தும் வாங்கியுமே நிலைபெற்றிருக்கின்றன என்பதை உணரலாம். மாற்றமே உயிர்த் துடிப்பின் அறிகுறி. இதைக் கருத்தில் கொண்டு பார்த்தால் காஷ்மீர சைவத்தில் கூறப்படும் பரம்பொருள் சொரூபம் பிற சில சமயங்களில் கூறப்படும் கருத்துக்களோடு ஒன்றியும் வேறுபட்டும் இருப்பதைக் காணலாம்.

உலகில் நாம் ஒரு பொருளைக் காண்கின்றோம். அது பற்றிய அறிவு நமக்கு முதலில் ஏற்படுகிறது. அது நம்மிடத்தில் உள்ள ஞான சக்தி. பிறகு அதன்மீது விருப்போ வெறுப்போ ஏற்படுகின்றது. அதுவே நமது இச்சா சக்தி. பின்னர் அதனைப் பெற முற்படுகிறோம், அல்லது தவிர்க்க முற்படுகிறோம். இதுவே நமது கிரியா சக்தி. மக்கள் அனைவரிடமே, ஏன் உயிர் வருக்கங்கள் அனைத்திடத்திலுமே, ஏதோ ஒரு வகையில் இவை இருப்பதைக் காண்கிறோம். இவை அனைத்திற்கும் மூலமான ஒரு பரம்பொருளிடத்தில் இம்மூன்று சக்திகளும் இருப்பதாக பல சமயங்களும் கூறுகின்றன. உயிர்களிடத்தில் இவை குறுக்கப்பட்டிருக்கின்றன, மாயை வசப்பட்டிருத்தலால். பரமேசுவரனிடத்தில் இவை பூர்ணமாக இருக்கின்றன அவன் நிர்மலனுகையால். உயிருக்குயிராயிருக்கும் அப்பரமாத்ம சொரூபம் 'சைதன்யம்.' இதைக் கூறுகின்ற முதல் சிவசூத்ரம் 'சைதன்யம் ஆத்மா.'[5] 'சச்சிதானந்தம் பிரம்ம' என்று உபநிடதம் பிரம்ம சொரூபத்தைக் கூறும். 'சத்யம் ஞானம் அனந்தம் பிரம்ம' என்று மற்றுமோரிடத்தில் உபநிடதம் கூறும். 'விஞ்ஞானம் பிரம்ம' என்று பிறிதோரிடத்தில் கூறும்.

க்ஷேமராஜர் பிரத்யபிஜ்ஞா ஹ்ருதயத்தின் கடவுள் வாழ்த்தில் 'சிதானந்த கனஸ்வாத்ம பரமார்த்தாவபாஸினே சததம் பஞ்சக்ருத்ய விதாயினே சிவாய நம:' என்று கூறுகிறார். இங்கே சொரூப

லக்ஷணம் தடஸ்த லக்ஷணம் ஆகிய இரண்டையும் காண்கிறோம். அத்வைதிகள் சொரூப லக்ஷணத்தையே பேருண்மையாகக் கொள்வர். அவர்கள் 'பிரம்ம ஸத்யம், ஜகந் மித்யா' என்ற கொள்கையினர். காஷ்மீர சைவர்கள் பிரபஞ்சம் பரமேசுவரனின்றும் வேறுபட்டதல்ல என்ற கொள்கையினர். ஆகவேதான் க்ஷேமராஜர் 'சிதானந்தகன சொருபனுனவனும்', ஸ்ருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோதானம், அநுக்ரஹம் என்னும் 'பஞ்சக்ருத்யங்களை என்றும் புரிந்துகொண்டிருக்கிறவனுமான சிவபெருமானுக்கு' வணக்கம் செலுத்துகிறார். 'அஸ்தி பாதி ப்ரியம் ரூபம் நாம சேத்யம்ச பஞ்சகம். ஆத்யம் த்ரயம் ப்ரம்மரூபம், ஜகத்ரூபம் ததோ த்வயம்'[6] என்ற கூற்று அத்வைதிகளால் ஆளப்படுவது. இங்கு சச்சிதானந்த பிரம்ம ரூபமும் நாமரூப பேதங்களைக் கொண்ட பிரபஞ்சரூபமும் வேறுபடுத்திக் காட்டப்பட்டிருப்பதைக் காணலாம். க்ஷேமராஜர் இரண்டையும் ஒருமைப்படுத்திக் காண்கிறார். மேலும் இங்கே 'நமச்சிவாய' என்ற பஞ்சாக்ஷரத்தையும் சிவனுடைய பஞ்சகிருத்யத்தையும் இணைத்துக் கூறியிருப்பது சைவ சித்தாந்திகள் நோக்கத்தக்கது. 'ஒடுக்கம் இளைப்பொழித்தல், மற்றைத் தோற்றம் மலபாகம் வரக், காத்தல் போகந் துய்ப்பித்தல், திரோதாயி தக நிறுத்தலாகும், போற்றவரும் அருள் அருளே'[7] என்ற பஞ்சகிருத்யத்தைக் குறிப்பது நடராசப் பெருமானின் ஆனந்தத் தாண்டவம். 'அஞ்செழுத்தே ஆனந்தத் தாண்டவமும்' என்று கூறும் உண்மை விளக்கம் என்னும் சித்தாந்த சாஸ்திரம்.

உமாபதி சிவம் கூறும் பதியிலக்கணத்தையும் ஈண்டு நினைவில் கொள்வோம்.

'.........பதி பரமே; அதுதான்
நிலவும் அரு உருவின்றிக் குணங்குறிகள் இன்றி
நின்மலமாய் ஏகமாய் நித்தமாகி
அலகில் உயிர்க்கு உணர்வாகி அசலமாகி
அகண்டிதமாய் ஆனந்த உருவாய் அன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிய பெரிதாய்த்
திகழ்வது தற்சிவம் என்பர் தெளிந்துளோரே.'[8]

அபிநவகுப்தர் பரம்பொருளின் இலக்கணத்தைக் கூறும்போது 'தத் பிரம்ம, பரம், சுத்தம், சாந்தம், அபேதாத்மகம், சமம், சகலம், அம்ருதம், சத்யம், சக்தம், விச்ராம்யதி பாஸ்வரூபாயாம்' என்று கூறியுள்ளார். 'பாஸ்வரூபம்' என்பது 'பிரகாசஸ்வரூபம்' என்று

பொருள்படும். 'ஞான சக்தி, கிரியா சக்தி, இச்சா சக்தி (ஸ்வாதந்திரிய சக்தி)' என்ற சக்திகளோடு பொருந்திய அவன் சுவயம் பிரகாசத்தில் தோய்ந்திருக்கிறன் என்கிறர். 'தனது மகா குகையினுள்ளே மூழ்கிக் கிடக்கும் பொருள்களனைத்தையும் ஞான சக்தி என்ற விளக்கால் எவன் பிரகாசிக்கச் செய்கிறனே அந்த சிவனை என்றும் துதிப்போம்' என்கிறர் பாஸ்கரர்.[9]

'சம்வித்' என்றும் 'சைதன்யம்' (சித்) என்றும் பேசப்படுகின்ற சிவன் பிரகாச-விமர்சமயமானவன் என்று கூறப்படுகிறது. நிஷ்க்ரியம், நிரஞ்சனம், சாந்தம் பிரம்மம் என்று அத்வைதம் கூறும். காச்மீர சைவத்தில் சாந்தநிலை ஒப்புக்கொள்ளப்படுவதில்லை. ஞானப் பிரகாசமான சைதன்யத்திற்கு 'விமர்சம்' முக்கிய இலக்கணம். விமர்சம் என்பது 'ஸ்பந்தத்தை' (அசைவை) கிரியையைக் குறிக்கும். ஞாதிருத்வம், கர்த்ருத்வம் என்பவற்றேடு 'ஸ்வாதந்திரியம்' என்ற ஒரு சக்தியும் சிவனுக்கு உண்டு

பரம்பொருள் 'பிரகாசமாக' இருக்கிறது ஆனல் செயலற்றிருக்கிறது என்று சொன்னல் அது 'பரம்பொருள்' என்று கருதுவதற்கே இடமில்லாமல் போகிறது. 'காத்தும் படைத்தும் கரந்தும்' விளையாடுகின்ற சிவபெருமானை 'சாந்தப் பிரம்மமாகக்' கொண்டு விட்டால் அசத்தான சடப்பொருளுக்கும் அவனுக்கும் என்ன வேறுபாடு என்று கேட்கிறர் உத்பல தேவர், 'அஜடப்ரமாத்ரு சித்தி' என்ற நூலில்.[10] ஸ்படிகத்திற்கு பிரகாசம் உண்டு, ஆனல் தொழிற்படாத ஒரு சடப்பொருள். ஸ்படிகம் போன்றதா பரம் பொருள்? கிரியாசக்தியாகிற விமர்சமின்றி பிரகாசம் மட்டுமுள்ள பரம் பொருளைக் கருதிப் பார்க்கக்கூட முடியாது. 'ஆகாச புஷ்பம் மணத்தைப் பரப்புகிறது' என்று சொன்னல் எப்படியிருக்கும்? அப்படித்தான் கிரியா சக்தியின்றி ஞான சக்தி மட்டுமே பெற்றுள்ள பிரம்மமும் உலகத்தை இயக்குகிறது என்று சொல்வது. 'கண்ணுடியில் நிழலை அசையச் செய்பவன்போல், பரமனும் நீக்கமின்றி ஆடி புவனத்தை ஆக்கி அசைத்தருளும்' திறத்தை குமரகுருபரர் கூறுவதைக் காணலாம்.[11]

உத்பல தேவர் சம்புவின் தன்மையை ஓரிடத்தில் குறிப்பிடும் போது, 'பேதம் நிரம்பியதான பிரபஞ்சத்திற்குக் காரணமான 'மாயை' எனப்படும் சுதந்திரச் சக்தியை உடைய மாயாவி; மும்மல அழுக்கு மண்டிய பிரபஞ்சமாகக் காட்சியளித்தாலும் சித்ருபனுகையினலே விசுத்தன்; மக்களறிவிற்கு எளிதில் புலனுகாவிட்டா

லும் பிரகாசமயமானவன்; சூக்குமமாக இருப்பினும் தன் சுதந்திர சக்தியினால் பிரபஞ்சாகாரமான தூலப் பொருளாகவும் தோன்று கிறான். இப்படி வேறுபட்ட விசித்திரமான சம்புவுக்கு வணக்கம்' என்கிறார்,'[12]

'பிரம்மம் பிரகாசிக்கிறது, அப்பிரகாசத்தினாலேதான் இப்பிரபஞ் சம் முழுதும் பிரகாசிக்கிறது' என்று கடோபநிடதம் கூறுகின்றது.[13] அது போன்றே பரமேசுவரன் ஞானப் பிழம்பாக, அறிவுச் சுடராக இருப்பவன் தன் விமர்ச சக்தியால் உயிர்ப் பொருளாயும் (சித்) உயிரில் பொருளாயும் (அசித்) காட்சி தருகிறான். இது அவனுக்கு இயல்பான விகாசம். இதை 'அக்ருத்ரிமா விஸ்புரணம்' என்பார் க்ஷேமராஜர். இதை 'சுத்த ஸ்வாபாவிகமான அஹம் (சைதன்யம்) என்பதன் விரிவு' என்றும் கூறலாம். 'அஹம்' என்னும் சைதன் யத்திற்கும் 'இதம்' (இது) என்னும் பிரபஞ்சத்திற்கும் இடைவெளி இல்லை. அதுவே இது இதுவே அது என்னும் அத்வைதம் இங்கே பேசப்படுகிறது. அதுவாயினும் இதுவாயினும் அவன் இயல்பில் வேறுபாடில்லை. இவ்விமர்சத்தை பராசக்தி, பராவாக், ஸ்வாதந்திரி யம், ஐசுவரியம், கர்த்ருத்வம், ஸ்புரணம், சாரம், ஹ்ருதயம், ஸ்பந்தம் என்று பல்வேறு பெயர்களில் அழைப்பார்கள்.[14]

ஆதிசங்கரர் அருளிய தக்ஷிணாமூர்த்தி அஷ்டகத்தில் 'அவ னிடமிருந்து 'ஸத்தையும் (Sat-tā) ஸ்புரத்தையும் (Sphurat-tā)' யாங்கணும் தொடர்கின்றன' என்றும் 'ஞாத்ருத்வம் கர்த்ருத்வம் ஸ்வாதந்த்ரியம் அவனுக்கே உரிய சக்திகள்' என்றும் கூறுகின்ற இடத்தில் த்ரிக தரிசனத்தின் தத்துவத்தைக் காண்கிறோம்.[15]

இத்தரிசனத்தில் மகேசுவரனே உலக சிருட்டிக்கு நிமித்த கார ணனும் உபாதான காரணனுமாவான். சிவாத்வைதிகளுக்கு இது உடன்பாடு. சத்கார்யவாதத்தைப் பின்பற்றும் சைவ சித்தாந்திகள் மகேசுவரன் உபாதான காரணன் என்ற கூற்றுக்கு உடன்பட மாட் டார்கள். குடத்திற்குக் குயவன் நிமித்த காரணன், உபாதான காரணம் மண் ஆவதுபோல, உலகத்திற்கு மகேசுவரன் நிமித்த காரணன் பிந்து அல்லது மாயை உபாதான காரணம் என்பர். காச்மீர சைவர் தங்கள் கருத்துக்கு அரணைக் கூறுவதைக் காண் போம். மகேசுவரனுக்கு அனந்த சக்தி உண்டு, சுதந்திரமாகச் செயல்படும் ஆற்றல் உண்டு என்பது ஒப்புக்கொள்ளப்பட்டால், அவனுக்குத் தனியே மாயை என்ற பொருளைக் கொண்டுதான் உலகைத் தோற்றுவிக்க வேண்டும் என்னும் நியதி ஏது? தன் இச்சா

சக்தியால் எதையும் எப்போதும் எவ்வகையிலும் செய்யலாமே. அவனுக்கு வேருக ஒரு பொருள் தேவைப்படுகிறதென்ருல் அவனது முழுமுதல் தன்மைக்கு, ஒப்புயர்வற்ற நிலேக்கு இழுக்காகுமே என்பர். மற்றும் குயவனுக்கு மண் வேண்டியிருக்கலாம். யோகி தன் தவ வலிமையால் எலியைப் பூனையாகவும், பூனையை நாயாகவும் மாற்ற வல்லவராகும்போது பரம யோகியான பரமேசுவரனுக்கு 'மாயை' எனும் பொருளின்றி சிருட்டிக்க இயலாதா? ஈசுவர பிரத்யபிஜ்ஞா விமர்சினியில் இதுபோன்ற திருட்டாந்தம் காட்டப் பட்டுள்ளது. குயவன் செய்த பாண்டம்போல் யோகி தன் இச்சா மாத்திரத்தால் களிமண் இன்றியே தோற்றுவித்த குடமும் தண்ணீர் பிடிக்க உதவத்தானே செய்கிறது என்று எடுத்துக்காட்டப் படுகிறது.[16]

பிரத்யபிஜ்ஞா ஹ்ருதயத்தில் க்ஷேமராஜர் பிரபஞ்சத் தோற் றத்தைக் குறிப்பிடுகையில் அதன் காரணமாக அமைவது சைதன்ய மாகிற பகவதீ என்று பெண்பாற் சொல்லான 'சிதி' என்பதால் உணர்த்துகிருர். இதுவே பராசக்தி; சுவதந்திரத் தன்மை வாய்ந் தது; சிவபட்டாரிகையினின்றும் வேறுபடுத்திக் காண இயலாதது; விமர்சமயமானது; அதற்கு மேலானது எதுவுமில்லே. இச்சக்தி தொழிற்படத் தொடங்கும்போது உலகம் தோன்றுகிறது; தொழிற் பட்டுக்கொண்டிருக்கும்போது உலகம் நிலேபேறுடையதாயிருக் கிறது; தொழில் மடங்கும்போது உலகம் ஒடுங்குகிறது. பிறர் கூறுவதுபோல் மாயை உலகிற்குக் காரணமாக மாட்டாது; ஏனெனில் அது அசத்துப் பொருள், பிரகாசமற்றது. தேசம், காலம், பொருள்கள் அனைத்தும் அச்சிச்சக்தியினலே தோற்றுவிக்கப் பட்டும் ஊடுருவப்பட்டும் உள்ளனவாகையால் அச்சக்தியே இவை யனைத்தும். பிறிதொரு பொருளோ கருவியோ இன்றி இச்சக்தி உலக மாய் விரிகிறது. பிறிதோர் நிலேயில் அவ்வுலகமே சக்தியில் ஒடுங்கு கிறது. ஆகவேதான் அதைச் சுதந்திரச் சக்தி என்கிரேம். சக்திக் கும் உலகிற்கும் சாமரஸ்யம் அல்லது ஒன்றுபட்ட நிலே கூறப்படு கிறது. என்றுமுள்ள பொருளுக்கு காரணகாரிய முறை முன்பின் கிரமம் கற்பித்தல் இயலாது.

உள்ள பொருளே ஒரு கண்ணுடியில் நிழலாகத் தெரிகின்றது. நிழலாகத் தெரிகின்ற பிரதிபிம்பம் அப்பொருளேயன்றி வேறில்லே. வேறெரு பொருள் கொண்டு உண்டாக்கப்பட்டதில்லே. தன்னேயே சுவராகக் கொண்டு தன்னிச்சா மாத்திரத்தாலே தீட்டப்பெற்ற சித்

திரம் இப்பிரபஞ்சம். பிரம்மம் மாயையோடு கூடி நின்று சிருட்டி செய்வது போலன்று; சைதன்ய பிரகாசத்தோடு ஏகாத்மபாவத்தைப் பெற்றதே இப்பிரபஞ்சம், கண்ணாடியில் தெரிகின்ற நகரம் போல.

ஆதிசங்கரரும் தக்ஷிணாமூர்த்தி அஷ்டகத்தில் இதுபோன்ற கருத்தை வெளியிட்டிருக்கின்றார்—'விதையினுள் இன்னதென்று விவரிக்க முடியாத சூக்குமமான (நிர்விகல்ப) சக்தியே பின்னர் முளை விடுகிறது; அது போன்றதே மாயையின் (மாகேசுவரீ சக்தியின்) கற்பனையில் (இச்சா மாத்திரத்தால்) எழுந்தது தேசம், காலம், கலை என்ற வெவ்வேறு வகையில் தீட்டப்பெற்ற சித்திரம் போன்ற இவ்வுலகம். மாயாவியோ மகாயோகியோ எப்படி தன்னிச்சை மாத்திரத்தால் ஒரு பொருளைத் தோற்றுவிக்கின்றாரோ அப்படியே மாயியாகிற மகேசுவரன் இப்பிரபஞ்சத்தைச் சிருட்டிக்கிறான். அந்த பரமகுருவான தக்ஷிணாமூர்த்திக்கு வணக்கம்.'[17]

பகவான் கண்ணனும் 'எல்லா உயிர்களிலும் வித்தாக நான் இருப்பதை அறிவாயாக, ஓ பார்த்தனே' என்கிறார்.[18]

அபிநவகுப்தர் பகவத்கீதைக்கு 'கீதார்த்த சங்கிரகம்' என்ற உரை எழுதியிருக்கின்றார். அது த்ரிக தர்சனத்தையொட்டிச் செல்கிறது.

> "யோ மாம் பச்யதி சர்வத்ர சர்வஞ் ச மயி பச்யதி
> தஸ்யாஹம் ந ப்ரணச்யாமி ஸ ச மே ந ப்ரணச்யதி"[19]

என்ற சுலோகத்திற்கு உரை எழுதுகின்ற ஆசிரியர், 'எவனொருவன் எல்லாவற்றிலும் நிறைந்தவனாகப் பரமாத்மாவைக் காணவில்லையோ அவனிடமிருந்து ஓடி ஒளிந்துகொள்கிறான் பரமாத்மா ; பகவத் ஸ்வரூபத்தை அவன் அறியாமையே அதற்குக் காரணம். பிரபஞ்சப் பொருள்களனைத்தையும் பிரகாசமயமான அவனிடத்தே பொருந்தியவையாக ஒருவன் காண வேண்டும். அப்படிக் காண இயலாதவன் பரமாத்ம சொரூபத்தை அறிய மாட்டான். அவனின்றி இவனில்லை, அவனுடைய பிரகாசம் எங்கும் ஊடுருவி நிற்பதாகக் காண்பவனே பரமாத்ம சொரூபத்தை உணர்ந்தவனாவான். இல்லையேல் அவன் சத்யப் பொருளாக மாட்டான். உயிர்தோறும் நின்று அறிவிப்போனாக (க்ராஹகன்) இருக்கின்றான் இறைவன். அவனால் அனைத்துயிர்களும் அறியுமாறு செய்யப்படுகின்றன (க்ராஹ்யன்) என்ற உணர்வு எழுந்தால் அதுவே சமதர்சனமும் யோகமும் ஆகும்.'

பிரகாச விமர்சமயமான இப்பரம்பொருளுக்கு ஐந்து சக்திகள் கூறப்படுகின்றன. அவை சித், ஆனந்தம், இச்சை, ஞானம், கிரியை என்பன. பரமசிவனிடத்தே சித்சக்தி ஓங்கியிருக்கும்போது சிவன் என்றும், ஆனந்த சக்தி ஓங்கியிருக்கும்போது சக்தி என்றும், இச்சா சக்தி ஓங்கியிருக்கும்போது சதாசிவம் என்றும், ஞானசக்தி ஓங்கி யிருக்கும்போது ஈசுவரன் என்றும், கிரியா சக்தி ஓங்கியிருக்கும்போது சுத்த வித்தை என்றும் பேசப்படுகிறான்.

சாந்தோக்ய உபநிடதத்தில் 'ஸதேவ சோம்ய இதம் அக்ர ஆஸீத், ஏகம் ஏவ அத்விதீயம்...ததைக்ஷத, பஹு ஸ்யாம், ப்ரஜா யேய, இதி தத் தேஜோ அஸ்ருஜத' என்ற பகுதியை ஆசார்யர்கள் ஆண்டிருக்கிறார்கள். இப்பகுதி த்ரிக தர்சனத்தில் மேலே குறிப் பிடப்பட்டுள்ள ஐந்து சக்திகளையும் குறிப்பதாக எடுத்துக்காட்டப் படுகிறது 'சத்' என்று சொல்லப்பட்டதினின்று சித்தும் ஆனந்த மும் பெறப்படுகின்றன. 'பஹு ஸ்யாம்' என்ற சொற்களிலே 'நான் பலவாக ஆகக் கடவேன்' என்ற பொருள் பெறப்படுவதால் 'பலவாக ஆதல்' பற்றிய இச்சை உணர்த்தப்படுகிறது; 'அஸ் ருஜத' என்ற சொல்லில் 'சிருட்டித்தல்' என்னும் கிரியா சக்தி தெளிவாகத் தெரிகிறது.[10]

இச்சக்திக்கு மூன்று அவத்தைகள் கூறப்படுகின்றன; அவை யாவன பரை, பராபரை, அபரை. 'பரை' என்னும் அவத்தையில் சித் சக்தியும் ஆனந்த சக்தியும் முழுமையாக அபிவ்யக்தி அடைந்தி ருக்கின்றன. இவை சிவனோடும் தம்மோடும் இணை பிரியாத நிலையில் இருக்கின்றன. பராபரை அவத்தையில் இச்சா சக்தி முகிழ்க் கிறது. அபரை என்னும் அவத்தையில் இச்சையின் தூண்டுதலால் ஞான சக்தியும் கிரியா சக்தியும் ஓங்கி நிற்கின்றன. இப்படிக் கூறும் போது இச்சக்திகள் வேறுபட்டனவாகக் கொள்ளத் தகாது. அனைத் தும் மகேசுவரனுடைய சக்தி நிலைகளே. மகேசுவரனும் அவனது சக்தியாகிற மாகேசுவரீ சக்தியும் பிரிப்பின்றி இருப்பன. 'அருளது சத்தியாகும் அரன்றனக்கு; அருளையின்றித் தெருள் சிவம் இல்லை; அந்தச் சிவம் அன்றிச் சத்தி இல்லை' என்று கூறுகிறது சிவஞான சித்தியார். இவ்வியைபை தமிழில் 'தற்கிழமை' என்றும் வட மொழியில் 'தாதாத்மியம்' என்றும் கூறுவர்.

பஞ்சகிருத்தியம் சுத்தாத்துவாவிலும் அசுத்தாத்துவாவிலும் நிகழ்த்தப்படுகின்றன. இவ்வைந்தொழில்களைப் புரிகின்ற காலத்தில் மேலே கூறப்பட்ட ஐந்து சக்திகளும் உளவாயினும் அவ்வப்போது

சில தலைதூக்கி நிற்கின்றன. சைதன்யத்தின் முதல் வெளிப்பாடு **சிவ தத்துவம்**. இதில் 'நான்' (அகந்தை) எனும் உணர்வே உளது. இந்நிலையில் அறிவோர்களாகக் (பிரமாதாக்கள்) கருதப் படுகின்றவர்கள் 'சாம்பவர்கள்' எனப்படுவர். **சத்தி தத்துவமும்** உடன் தோன்றுகிறது. இந்நிலையில் 'நான் இருக்கிறேன்' என்ற உணர்வு எழுகிறது. சத்சித்தான பரம்பொருளின் ஆனந்த சக்தி இப்போது மேலிடுகிறது. இந்நிலையில் அறிவோர்கள் 'சாக்தஜர்கள்' எனப்படுவர். அடுத்து இச்சா சக்தி மேலோங்கி நிற்கும்போது **சதாசிவ தத்துவம்** என்று அப்பரம் பொருளை வழங்குகிறோம். இந் நிலையில் 'நான் இதுவாக (பிரபஞ்சமாக) இருக்கிறேன்' என்ற உணர்வு எழுகிறது எனினும் 'நான்' என்பதே ஓங்கி நிற்கிறது. இதை 'சாதாக்ய தத்துவம்' என்றும் இத்தரிசனத்தார் கூறுவர். இந் நிலையில் அறிவோர்கள் 'மந்திர மகேசுவரர்கள்' எனப்படுவர். அவர்களுக்கு பிரபஞ்சம் முழுமையுமே அனுபவப் பொருளாகும். ஞானசக்தி மேலோங்கி நிற்கும்போது **ஈசுவர தத்துவம்** வெளிப்படு கிறது. இதில் 'நான்' என்பதும் 'இது' (பிரபஞ்சம்) என்பதும் சம நிலையில் உள்ளன. 'இதுவாக நான் இருக்கிறேன்' என்ற உணர்வு ஏற்படுகிறது. இந்நிலையில் அறிவோர்கள் 'மந்திரேசுவரர்கள்' எனப்படுவர். 'சுத்தவித்தை' மேலோங்கியிருக்கும் நிலையில் '*கிரியா சக்தி*' மேலோங்கியிருக்கிறது. இதில் சைதன்யம் 'அனந்தர்' என்று அழைக்கப்படுகிறது. இந்நிலையில் பிரபஞ்சம் என்ற பேத உணர்வு தலை தூக்குகிறது. இதில் அறிவோர்கள் 'மந்திரர்கள்' எனப்படுவர்.

சிவனும் அவனது சக்திகளும் கதிரவனும் அவனது கதிர்களும் போல்வன. கதிரவன் தோன்றி அவன் கதிர்கள் விரியும்போதுதான் உலகிலுள்ள பொருள்கள் விளக்கம் பெறுகின்றன. அவ்வாறே சிவ னுடைய சக்திகள் தொழிற்படும்போது பிரபஞ்சமாக அவன் காட்சி யளிக்கிறான். இதுவே அவனுடைய விமர்ச சக்தி எனப்படுவது. இப்பிரபஞ்சத்தின் தோற்றமும் ஒடுக்கமும் அவனுக்கு ஒரு விளை யாட்டு. தேரும் குதிரையும் உடைய பெரிய மகாராஜாவானாலும் அவனுக்கு விளையாடவேண்டுமென்று ஆசை தோன்றிவிட்டால் கல்லும் முள்ளும் நிறைந்த கானகத்தில் கால் தோய ஓடியாடி விளை யாடுகிறான். பிறகு களைத்து ஓய்வை நாடுகிறான். அதுபோல பர மேசுவரனும் அவன் பூரண சுவதந்திரன் ஆகையினாலே பல்வேறு உயிர்களாக, உயிரில் பொருள்களாகத் தோன்றவேண்டும் என்ற இச்சை ஏற்பட்டுவிட்டால் ஆனந்தக் களிப்பில் அவ்வப் பொருளாக

பிரபஞ்சத்தில் தோன்றி அறிவோனுயும் (சித்) அறியப்படு பொருளா யும் (சடம்) உலவுகிருன். இப்படி உல்லாசமாக அவன் ஈடுபடும் விளையாட்டே 'ஸ்பந்தம்' என்றும் 'க்ரீடை' என்றும் இச் சாஸ் திரம் கூறுகிறது.[21]

எப்படி ஒரே வண்ணமற்ற படிகக்கல் அதனைச் சார்ந்துள்ள வண்ண மலர்களால் அந்தந்த வண்ணத்தை உடையதாகத் தோன் றினுலும் அம்மாற்றம் அவ்வுபாதிகளையே சார்ந்தன, படிகம் அப் படியே நிர்மலமாகத்தான் இருக்கிறது என்பதை நாம் உணர்கி ருேமோ, அப்படியே ஈசுவரனும் தேவராய், மனிதராய், விலங்காய், மரமாய் வெவ்வேறு உருவங்களில் காணப்பட்டபோதிலும் தன்னிட மிருந்து அவை வேறுபட்டவையல்ல என்பதை அவன் உணர்கிருன். வேறுபட்ட இடமோ காலமோ அவனுக்கும் அவனது தோற்றமாகிற பிரபஞ்சத்திற்குமிடையே உள்ள அத்வைத நிலையை பாதிக்க மாட்டா. ஏனெனில் அவன் பரிபூரணன், சித்சொருபன், ஸ்வதந் திரன், நித்யன். அவனுடைய சைதன்ய பிரகாசமின்றி தேசமும் காலமும் பிறிதல்ல.[22]

சந்திரன் ஓடுகின்ற புனித கங்கையில் ஓடுவதுபோலவும், தேங்கி நிற்கின்ற அழுக்கு நிறைந்த குட்டையில் நிலைத்திருப்பதுபோலவும் தோன்றினுலும் சந்திரனுக்கு இயல்பான ஸ்வஸ்வரூபத்தில் எந்த வித மாறுபாடுமின்றி யிருப்பதுபோல ஈசுவரன் பல்வேறு பிறவிகளை மேற் கொண்டு, சொர்க்கம் நரகம் முதலாய பல்வேறு இடங்களில் சுக துக்கங்களை நுகர்ந்துவந்தபோதிலும் நிர்மலனுய் நிர்லேபனுய் தன் ஸ்வரூபத்தில் எவ்வித மாறுபாடுமின்றி இருந்துவருகின்ருன். பிறத் தல், இருத்தல், மாற்றம், வளர்ச்சி, தேய்தல், மறைதல் ஆகிய ஆறு நிலைகளுக்கு உட்பட்டவையாக உயிர் வருக்கங்கள் காணப்பட்ட போதிலும் இவையனைத்தும் உடல், கரணங்கள் முதலாய உபாதிக ளால் ஏற்படுவனவேயன்றி இவையெல்லாம் சித்சொரூபனுன ஈசுவர னுக்கு இல்லை. எவ்வித உபாதியுமற்ற தூய முற்றறிவும் பேராற் றலும் பெற்ற பரம்பொருளே உபாதிகளின் சேர்க்கையால் சிற்றறி வும் குறைந்த ஆற்றலும் கொண்ட உயிராகக் காணப்படுகிருன். அவனுடைய அறிவோடும் ஆற்றலோடும் தொடர்பு கொண்டிருப் பதனுலேயேதான் உயிர்கள் அறியவும் செயற்படவும் முடிகின்றன, 'ஞானப் பேரொளியாகிற அவனைச் சார்ந்தே உலகிலுள்ள அனைத் தும் ஒளி பெற்று விளங்குகின்றன,' என்று கடோபநிடதம் கூறுகின்றது.

சுதந்திர பகவானுன மகேசுவரன் தனக்கு இயல்பாயுள்ள சக்தி யின் பெருக்கால் பிரபஞ்சத்தை நான்கு அண்டங்களாகப் பகுத்து வெளிப்படுத்தினுன். அவை சக்தி, மாயை, பிரகிருதி, பிருதிவீ என்பன என்று அபிநவகுப்தர் கூறுகிருர்.[23] 'சக்தியே அனைத்துலக மாய் விரிகிறது; சக்தியை உடையவன் மகேசுவரன். சக்தி, சக்தி மான் என்று இரு பதார்த்தங்கள் சொல்லப்படுகின்றன' என்று ஸ்ரீ சர்வமங்கள சாஸ்திரம் கூறுகிறது. 'பரம புருஷனே இவை அனைத்துமாய் இருக்கின்ருன்; இவை முன்பும் இருந்தன, இனியும் இருப்பன. அப்படி பிரபஞ்சத்தைக் கடந்து நின்றும் அவன் என்று முள ஈசனுகவே இருக்கிருன்' என்று சுவேதாசுவதர உபநிடதம் கூறுகிறது.[24]

'சக்தி அண்டம்' என்பது அக்யாதி அல்லது உண்மையை மறைக்கும் ஆற்றல் பெற்றது. உள்ளதை இல்லதென எண்ணச் செய்யும். இது பந்தமாக இருந்து தொழில் புரியும். சதாசிவ தத்துவம், ஈசுவர தத்துவம், சுத்தவித்யா தத்துவம் ஆகிய முக்கூட்டை உள்ளடக்கியது. இதைக் கோசம் எனவும் அண்டம் எனவும் கூறுவர். இதற்கு சதாசிவன் ஈசுவரன் இருவரும் அதிபதிகள்.

இரண்டாவது 'மாயை' எனப்படும் அண்டம். இது மும்மல இயல்பினதாய் மோக மயமாய் இருப்பது. இது புருஷ தத்துவம் வரை பந்த ரூபத்தில் இருக்கிறது. இது பிரகிருதி, பிருதிவீ எனப் படும் இரு அண்டங்களையும் உள்ளடக்கியிருப்பது. இவ்வண்டாதி பதி உருத்திரன்.

மூன்ருவது 'பிரகிருதி' எனப்படும் அண்டம். இது சத்துவம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணமுடையது. சுகம், துக்கம், மோகம் என்ற வகையில் பசுக்களாகிற சீவர்களுக்கு பந்தமாகச் செயற் படுவது. பகவான் விஷ்ணு இவ்வண்டாதிபதி.

நான்காவது 'பிருதிவீ' எனப்படும் அண்டம். மனிதன் முதல் தாவரம் ஈருக உள்ள பிரமாதாக்களைக் கட்டுக்குட்படுத்தும் தூலகஞ் சுகமாகும். இவ்வண்டாதியன் பிரம்மா. இவ்வாறு பரமேசுவரனின் விரிவே நால்வகை அண்டங்களாகப் பிரகாசிக்கிறது.

'நீரிலிருந்தே அலைகள் பரவுவதுபோல, தீப்பிழம்பிலிருந்து ஜ்வாலைகள் எழுவதுபோல, சூரியனிடமிருந்து ஒளிக்கதிர் பாய்வது போல பைரவனுகிற என்னிடமிருந்தே பிரபஞ்ச வேறுபாடுகள் வெளியிடப்படுகின்றன' என்று கூறுகிறது விஞ்ஞான பைரவம்.

'சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த தனிமுழு முதலுமாய் அதற்கோர் வித்துமாய் இருந்த இவர்தம் திருவுருவை' பூந்துருத்தி நம்பிகாடநம்பி போற்றியிருப்பதை இத்தரிசனக் கண்கொண்டும் காணலாம்.

ஆத்மா சரீரம் என்று சார்வாகரும், பிராணன் என்று வைதிகருள் சிலரும், புத்தி என்று யோகாசாரரும், சூன்யம் என்று மாத்யமிகரும் கூறுகின்றனர். த்ரிக சாஸ்திரம் சைதன்யமே ஆத்மா என்று கூறு கின்றது. 'நான் நடந்தேன், நான் செய்தேன், நான் அறிந்தேன், நான் ஏதுமறியாது தூங்கினேன்' என்றெல்லாம் சொல்லும்போது 'நான்' என்ற சைதன்யப் பொருளே தலைதூக்கி நிற்கக் காண்கின் றோம். இந்த 'நான்' உலகத்திலே நாம் காணும் 'அகம்பாவம்' அல்ல. இயல்பான 'அஹம்' விமர்சமய பிரமாத்ருத்வம் (அறி வோன் தன்மை) இதனால் உணர்த்தப்படுகிறது. சரீரம் முதலான உபாதிகளை நீக்கிவிட்டுப் பார்த்தால் எஞ்சியிருப்பது சைதன்யம் தான். ஆகவே ஆத்மா என்று மிருத்யுஜித் பட்டாரகம் சொல்லு கிறது.[25] யோகவாசிட்டமும் 'அறியப்படுகின்ற ஒவ்வொரு பொருளை யும் (ஞேயம்) இதுவல்ல இதுவல்ல என்று யுக்தியின் அடிப்படையில் ஒதுக்கிக்கொண்டே போனால் எஞ்சியிருப்பது 'சித்' ஒன்றே. அதுவே நான் என்று பாவிக்க வேண்டும்' என்று கூறுகிறது.[26]

சித்சக்தியே முத்தொழிலாகிற தோற்றுவித்தல், நிலைபெறுத்தல், அழித்தல் என்பவற்றிற்கு காரணம் என்று சைவர்கள் கூறுவர். இச்சக்தியை சிவபட்டாரிகை அல்லது சம்வித்பட்டாரிகை என்று த்ரிகதரிசனத்தார் கூறுவர். இவர்கள் இம் முத்தொழிலுக்கு வேறு வகையாகப் பொருள் கொள்வர். சிவனே சீவனாக நின்று உலகில் உள்ள பொருள்களை இது நீலம், இது உயரம் என்றவாறு அறிகிறது. நான் மகிழ்ச்சியாயிருக்கிறேன், துயருற்றிருக்கிறேன் என்று உள்ளத் தால் உணர்கிறது. இது 'ஸ்திதி' எனப்படும். இத்தகைய குறுகிய வட்டத்தில் அறிவு சிதறுண்டு பலப்பலவாக விகற்பித்து எழுகின்ற போது அதை 'சிருட்டி' என்பார்கள். மெய்யறிவு பெற்ற நிலையில் புறப்பொருள்களெல்லாம் எனது வெளிப்பாடே என்றும் இவை யனைத்தும் யானே என்றும் அனைத்தையும் 'விழுங்கி' தன்னிடத்தில் ஒடுக்கும்போது அதை 'சம்ஹாரம்' என்று கூறுவர். இம்முத்தொழிலை யும் நடத்தும் சிவசக்தியை நான்காவதான (துரீய) சக்தி என்று கூறுவர். இம்முத்தொழிலும் எப்போதும் நிகழ்ந்துகொண்டே இருப்பதால் இச்சக்தி சுருங்குதல் பெருகுதல் என்ற நிலைகளுக்குட்

பட்டதாகக் கொள்ளமுடியாது. இது நிறைந்ததாயும் குறைந்த தாயும், இரண்டுமாயும், இரண்டு மற்றதாயும் எவ்வித கிரமுமின்றி என்றும் பிரகாசித்துக் கொண்டே இருக்கிறது.

பரமேசுவரன் தன் சக்தியால் உலகை உண்டும் (சம்ஹாரம் செய்தும்) உமிழ்ந்தும் (சிருட்டி செய்தும்) வருகின்ற செயலை திருமூலர் 'விசுவகிராசம்' (உலகை உண்ணுதல்) என்னும் தலைப்பில் திரு மந்திரம் எட்டாம் தந்திரத்தில் கூறியிருப்பதை ஒப்புநோக்கிக் காணலாம்.

பரன் எங்கும் ஆரப் பரந்துற்று நிற்கும்
திரன் எங்குமாகிச் செறிவெங்குமெய்தும்
உரனெங்குமாய் உலகுண்டு உமிழ்க்கும்
வரமிங்ஙன் கண்டுயான் வாழ்ந்துற்றவாறே. (2590)

'தத்' என்று உபநிடதங்களால் சுட்டப்படுகின்ற பரம்பொருள் 'சத்' என்று ருக்வேதத்தில் குறிப்பிடப்படுகிறது. 'ஸதேவ சோம்ய இதம் அக்ர ஆஸீத்' என்ற மந்திரத்தைக் காண்க. அதுவே குறைவிலா நிறைவான பொருளானதால் 'பரம்'பொருள் எனப்படு கிறது. அனாதி நிர்மலனானதால் 'சுத்தன்' என்றும் சுட்டப்படுகிறான். பலவாயுள்ளவை இறுதியில் ஓய்ந்து அப்பொருளில் அடங்குவதால் 'சாந்தம்' என்றும் சொல்லப்படுகிறது. இரண்டாவது உண்மைப் பொருளின்மையால் அபேதமாகக் கருதப்படுகிறது. உயர்வு தாழ்வு வேண்டுதல் வேண்டாமை ஆகியவை இன்மையால் 'சமம்' எனவும் படுகிறது. எல்லாப்பொருள்களையும் உள்ளடக்கி நிற்பதால் 'சகலம்' என்று கூறப்படுகிறது. என்றுமுள பொருளாதலால் 'அமிருதம்' என்றழைக்கப்படுகிறது. 'எது முதலிலும் இறுதியிலும் இடையிலும் இருக்கிறதோ அதுவே சத்தியம்' என்று பர்த்ருஹரி கூறியவாறு இது 'சத்தியப்' பொருளாயும் இருக்கிறது. இப்பரம் பொருளின் இயல்பு எதில் அடங்கியிருக்கிறது என்றால் இச்சை ஞானம் கிரியை என்ற சக்திகளின் திரட்சியிலே, அச்சக்தி மயமாயிருக்கிற நிலையிலே அடங்கியிருக்கிறது. மேலே கூறப்பட்ட முச்சக்தியான பராசக்தி மயமாக இல்லை என்றால் அப்பொருள் இருந்தும் இல்லாதது போலத் தான், ஆகாச புஷ்பம் இருக்கிறது என்பதைப்போல. இம்மூன்று சக்திகளுமே பரமசிவனின் திரிசூலம். இச்சக்திகளின் துணை கொண்டே எக்காலத்தும் எவ்விடத்தும் அறிதலும் செயற்படுதலும் நிகழ்கின்றன. பிரமன் படைக்கிறான், விஷ்ணு காக்கிறான், ருத்திரன் அழிக்கிறான், கண் பார்க்கிறது, காது கேட்கிறது, புத்தி அறிகிறது

என்பவை யெல்லாம் உண்மையில் இவற்றின் அறிவுமல்ல செயலு மல்ல. பரம்பொருளான சிவன் ஒருவனே வாலறிவன் (பரப்பிரமாதா) ஆதலால் அவனுடைய அறிவும் செயலுமே தேவர்கள், மனிதர்கள், மந்திரர்கள், மகேசுவரர்கள் ஆகிய அனைவரிடத்திலும் காணப் படுகிறது. 'சிவன் சக்தியோடு கூடியிருக்கும் போதுதான் தொழில் புரிய சக்தியுடையவனுகிருன். இல்லையேல் அவன் துளி அசையக் கூட (ஸ்பந்தம்) முடியாது' என்கிருர் ஆதிசங்கரர் செளந்தரியல கரியில். சைதன்யரூபனுன சிவன் சக்தியுருவம் தாங்கி தொழிற்பட்டு மனிதர்கள் வாழும் உலகமாய் விளங்குகிருன். இப்படிச்சொல் வதால் சிவன் வேறு சக்தி வேறு நான் வேறு என்பதல்ல. ஒரே பொருள் மூன்ருக் விளக்கம் பெறுகிறது. 'த்ரிக' சாஸ்திரம் என்று சொல்லப்படுவதற்கு இதுவும் ஒரு காரணம். ஒன்றே மூன்ருக விரிகிறது. இதை 'பிரசரயுக்தி' என்பார்கள். இவனே சித், ஆனந்தம், இச்சை, ஞானம், கிரியை என்னும் சக்தி சக்கரத்திற்கு நாயகன். படைத்தும் காத்தும் கரந்தும் விளையாடுகின்ற (திவ் = விளையாடுதல்) 'தேவன்' எனப்படுகிருன். நாம் தூங்குகின்றபோது மூலப்பொருள் எதுவுமின்றி நகரம், கோட்டை, காடு, யானை முதலான பொருள் களைக் காண்கிறேமல்லவா? கண் முதலான கரணங்களைக் கொண்டு காட்சி முதலிய அனுபவங்கள் சொப்பனத்தில் நமக்கு ஏற்படுவ தில்லை. காணப்படுகின்ற பொருள்களும் நம் அருகில் இருப்பதில்லை. ஆகவே அவை நமது அறிவு (சைதன்யம்) என்பதினின்றே தோன்றி யவை. அதே போல விழிப்பு நிலையில் நாம் காணும் இப்பிரபஞ்சமும் அப்பரமசைதன்யனுன சிவத்திடமிருந்தே தோன்றின. சீவாத்மா வாகிற ஒன்றே கண், காது, வயிறு, கை, கால் முதலான பல்வேறு அளவிலும் வண்ணத்திலும் செயலிலும் மாறுபட்டுக் காண்பது போல, பரமாத்மாவும் பல்வேறு யோனி பேதங்களாய், பல்வேறு சக்தி உடையனவாய் காணப்படுகின்ருன். அவனே ஒவ்வொருவர் இதயத்திலுமிருந்துகொண்டு அறிவோனுய் (பிரமாதா), செய் வோனுய் (கருத்தா) நுகர்வோனுய் (போக்தா) இருக்கும் பூர்ணு ஹந்தாசொரூபன்.

3. சீவாத்மா

சைதன்ய சொரூபனை பரமேசுவரன் தனது சுதந்திரத்தன்மை யின் காரணமாக அபேதவியாப்தியை மறைத்துக்கொண்டு பேதவி யாப்தியை மேற்கொள்கிறான். அப்போது அவனது பரிபூர்ணமான இச்சை, ஞானம், கிரியை ஆகிய சக்திகள் குறுக்கப்பட்டவைபோல் தோன்றுகின்றன. அந்த நிலையில் குறுகிய சக்திகளைக்கொண்ட சீவான்மாவாகக் கருதப்படுகின்றான். அவனை 'சம்சாரி' என்று அழைக்கின்றோம். ஈசுவரனின் இச்சா சக்தியே குறுகிய நிலையில் 'ஆணவமலம்' எனப்படுகிறது. அகண்ட ஞானசக்தியே மாயையின் கூறுகளான அந்தக்கரணம், புத்தி, இந்திரியங்கள் ஆகிய உபாதி களின் காரணமாக பேதஞானத்தைத் தோற்றுவிக்கும் மாயீய (மாயையைச் சார்ந்த) மலமாகப் பேசப்படுகிறது. பிரபஞ்ச சிருட்டி முதலான அரும்பெரும் செயல்களை ஆற்றிவரும் பரமனின் கிரியா சக்தியே கர்மேந்திரியங்கள் வாயிலாகச் சிறு செயல்களையே செய் விக்கும் கார்மமலமாகக் கருதப்படுகிறது. பரமசிவனின் சர்வகர்த் ருத்வம், சர்வக்ஞத்வம், பூர்ணத்வம், நித்யத்வம், வியாபகத்வம் என்னும் சக்திகள் சீவனோடு தொடர்புள்ள குறுகிய நிலையில் கலை, வித்தை, அராகம், காலம், நியதி என்ற தத்துவங்களாக விளங்கு கின்றன. சுருங்கச்சொன்னால் சக்தி முழுமையாகப் பிரகாசிக்கும் போது சிவனென்று சொல்லப்படுகின்றவனே சக்தி தரித்ரனாகக் காணப்படும்போது 'சம்சாரி' என்றழைக்கப்படுகிறான்.

உலகியல் நிலையில் தர்மம் என்றும் அதர்மம் என்றும், சொர்க்க மென்றும் நரகமென்றும், பிறப்பென்றும் இறப்பென்றும், சுக மென்றும் துக்கமென்றும், வருணமென்றும் ஆசிரமமென்றும் ஆத்மா விற்குத் தொடர்பில்லாத இவற்றுடன் யான், எனது என்னும் செருக்கின் காரணமாக அறியாமை மேலீட்டால் உயிர் உழல்கிறது. உண்மையிலேயே பரமார்த்தசாரமான சிதானந்தகனமான இவ் வாத்மாவிற்கு இவையனைத்தும் உரியவையல்ல.

கருமேகங்கள் சூழ்ந்தாலும், புகைப்படலம் மண்டினாலும், புழுதிப்படலம் பரவினாலும் ஆகாசம் அதனுடைய நித்தியத்தன்மையையோ, பரந்து கிடக்கும் தன்மையையோ இழப்பதில்லை. அதில் எந்த அழுக்கும் படிவதில்லை, வண்ணம் தோன்றுவதில்லை. அது அகண்ட நிர்மல ஆகாசமாகவே இருக்கிறது. எந்த நிலையிலும் ஆகாசம் ஆகாசமென்றே உணரப்படுகிறது. அதே போன்று அஞ்ஞானத்தால் ஏற்பட்ட மாயாவிகாரங்களால் பிறப்பு இறப்பு மூப்பு முதலான பல மாற்றங்கள் உயிரென்று கூறப்படும் இறைவனுக்கு ஏற்பட்டபோதும், அவற்றால் அவனுடைய சொரூபத்திற்கு எவ்வித இழுக்கும் ஏற்படுவதில்லை. எல்லா உயிர்களிலும் அனுபவிப்போனாக இருக்கின்ற அப்பரமாத்மாவை சுகம், துக்கம், மோகம் என்பவை பாதிக்கமாட்டா. பரந்த தூய ஆகாசத்தை குடமோ அதைச் சார்ந்துள்ள நறுமணமோ, துர்நாற்றமோ, அழுக்கோ பாதிக்கமாட்டாதுபோல, பலவாய்க் காட்சியளிக்கும் சீவர்கள் ஒரே சின்மய பரம்பொருளாயிருக்கிறது. ஆணவம் முதலான கோசங்களால் சூழப்பட்டிருப்பதால் எங்கும் வியாபித்திருக்கும் சைதன்யம் அணுவென்றும், சீவன் என்றும், புருடன் என்றும், ஆத்மா என்றும் வழங்கப்படுகிறது. அனாதி விசித்திர கர்ம பல வாசனையினாலே பல பிறப்புகளில் பல உடல்களைத் தாங்கி பாப புண்ணியங்களுக்கேற்ப சொர்க்கம், நரகம், பூமி முதலான இடங்களில் சுகம், துக்கம், பிறப்பு, இறப்பு என்பவற்றால் இடர்ப்படுகின்றன. இவற்றை ஈசுவரனே அனுபவிக்கிறான் என்பது உபசார வழக்கே, உண்மையல்ல. மேலே கூறப்பட்ட கருத்தை அபிநவகுப்தர் பரமார்த்த சாரத்தில் (சு. 37) தெளிவு படுத்துகிறார்.

பரமேசுவரனுடைய ஸ்வதந்திர சக்தியே 'மாயை' என்று இத்தரிசனத்தில் வழங்கப்படுவது. எந்த ஒரு சக்தியால் 'பிரமாதா, பிரமேயம்' எனப்படும் பூமி இறுதியாக உள்ள தத்துவங்கள் வேறுபடுத்தப்படுகின்றனவோ, அதுவே 'மாயா' எனப்படுவது. உலகத்தை மோகத்திற்குள்ளாக்குவதாலும் மாயை எனக் கூறலாம். இது பிரம்மவாதிகள் கூறுகின்ற மாயையினின்றும் வேறுபட்டதென்பதை அறியவேண்டும். இம்மாயையே பசுவின் (உயிரின்) நிலையை மேற்கொண்டுள்ள சிவனுக்கு மறைப்பாகப் பயன்படுகிறது. இதுவே பதிசொரூபத்தை மறைக்கும் ஆணவாதி மும்மலமாகக் கொள்ளப்படுகிறது. இம்மாயையை ஏற்றுக்கொண்டதாலே பதியின் சுதந்திரத் தன்மை மறைக்கப்பட்டு பரதந்திரநிலை ஏற்படுகிறது. தூய அறிவினனான பதி மலவழுக்கு நிரம்பிய பசுவாகி காலம், கலை, நியதி,

அராகம், வித்தை என்பவற்றுல் கட்டுண்டு கிடக்கிறது என்கிருர் அபிநவகுப்தர்.[27]

உயிரோடு தாதாத்மிய நிலையிலுள்ளது ஆணவம் எனப்படும் மலம். அதை 'அக்யாதி' (அறியாமை) என்பர். செம்புக்கு களிம்பு எப்படியோ அப்படி உயிருக்கு அந்தரங்கமான (உள்ளார்ந்த) ஆவரணம் (மறைப்பு) இவ்வாணவம். இது நெல்லினுள் இருக்கும் உமிபோன்றது. 'மாயை' முதல் 'வித்தை' ஈருன தத்துவங்கள் ஆறும் 'கஞ்சுகஷட்கம்' (ஆறு சட்டைகள்) எனப்படும். அரிசிக்கு தவிடு போன்றது இது. இதை மாயீய மலம் என்பர். புறத்தே தோன்றும் உடல் போன்றவை வினைக்கீடாகப் பெறப்படுபவை யாதலால் இவை 'கார்ம' (வினையைச் சார்ந்த) மலமெனப்பெறும். இது நெல்லுக்கிருக்கும் முளைக்கும் சக்தி போன்றது. நல்வினை தீவினைகளின் பயனுகப் பெறப்படுபவை தனு கரண புவன போகங்கள். 'மும்மலம் நெல்லினுக்கு முளையொடு தவிடுமிப்போல் மம்மர் செய்து அணுவின் உண்மை வடிவினை மறைத்து நின்று பொய்ம்மை செய் போகபந்த போத்திருத்துவங்கள் பண்ணும்' என்று சிவஞானசித்தி (சூ. 2.86) செப்பும். இம் மும்மலங்களும் முறையே 'பரம்' ஆவரணம், 'சூக்ஷ்ம' ஆவரணம், 'பாஹ்ய' (புறம்) ஆவரணம் என்று அபிநவகுப்தரால் குறிக்கப்படுகின்றன. இம்மூன்று கோசங் களால் சுற்றப்பட்ட சைதன்யமே, பரமாகாசமே குடாகாசம் எனப் படுவதுபோல, ஆத்மாவென்றும் பசுவென்றும் அணுவென்றும் கூறப்படுகிறது.

சைவசித்தாந்தத்தில் உயிரும் இறைவனைப் போலவே அனுதி நித்தியப் பொருளாதலால் அங்கே மும்மலம் எப்படிப் பேசப்படு கின்றது என்பதை ஒரு சிறிது காணலாம்.

'நெல்லிற்கு உமியும் நிகழ் செம்பினிற் களிம்பும்
சொல்லிற் புதிதன்று தொன்மையே'

என்பது சிவஞான போதம்[28]

அரிசி தோன்றும் போது உமியோடு கூடத் தோன்றுகிறது; உமியை நீக்கிய பின்னர் அரிசி தூய்மை பெற்று விளங்குகிறது. செம்பு என்று உண்டோ அதற்கு களிம்பும் அன்றே உண்டு; செம்பைப் புடமிட்டு இரசகுளிகையைச் சேர்க்கும்போது களிம்பு நீங்கி சுடர்விட்டு ஒளிர்கிறது. அதுபோன்றே உயிரென்று உண்டோ அன்றே ஆணவமலம் உளதாகிறது. ஆயினும் ஞானத்தால் அவ்

வறியாமை நீங்கப்பெற சுத்த சிவமாம் தன்மையைப் பெறுகிறது. ஆணவமல நீக்கம் என்பது ஆணவத்தின் அழிவைக் குறிப்பதல்ல அதன் சக்திகள் மடங்கப் பெறுவதையே குறிக்கும். கட்டுண்ட நிலையில் உயிரிடத்தே இறைவனது இன்பம் விளையவொட்டாது தடுத்து நின்ற ஆணவமலம் முத்தி நிலையில் அங்ஙனம் செய்ய வியலாது வாளா இருக்கும்.

'அநாதியே ஆணவமலத்தால் கட்டுண்டு கேவலநிலையில் கிடக்கும் ஆன்மாக்கட்கு இறைவன் முதற்கண் சூக்குமதேகத்தையே கூட்டுவிப்பான். சூக்கும தேகத்தினால் சிறிது அறிவும், இச்சையும் செயலும் விளங்கப்பெற்ற ஆன்மாக்கள், தத்தம் தகுதி நிலைக்கேற்ப நல்லனவும் தீயனவுமாகிய செயல்களை அறிந்தும் இச்சித்தும் செய்ய முயலும். அம்முயற்சியே அவைகட்கு வினையாய் அமையும். அவ்வினைக்கேற்ற தூல தேகத்தை இறைவன் அவைகட்குக் கூட்டு விப்பான். அதன் பின்னர்க் காரண காரியத்தொடர்ச்சியாய்ப் பிறப்புக்கள் தொடர்ந்து நிகழும். [29]

'இல்லாத ஒன்று தோன்றாது, உள்ளதே தோன்றும்' என்ற சத்காரிய வாதத்திற்கேற்ப நல்வினை தீவினைகளாகிற காரிய வினை களுக்குக் காரணமாக ஒன்று இருத்தல் வேண்டும் என்றும் அதுவே 'காரணவினை' அல்லது 'மூலகன்மம்' என்றும் அதுவும் நித்தியப் பொருளே என்றும் சித்தாந்திகள் கொள்வர்.

உலகத்திற்கு நேரே முதற்காரணமாய் இருப்பவை தத்துவங்கள்; தத்துவங்கள் மாயையின் காரியங்களாதலால் உலகிற்கு முதற் காரணம் மாயை எனக் கொள்ளப்படும். உலகம் மூவகைப்படும். அவற்றை சுத்தப் பிரபஞ்சம் (தூய உலகம்), மிச்சிரப் பிரபஞ்சம் (கலப்புலகம்), அசுத்தப் பிரபஞ்சம் (மாசுலகம்) என்பர். இவற்றிற் குக் காரணமான மாயையும் சுத்தமாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை எனப்படும். உலகில் பல்வேறு வகையாகக் காணப்படும் பொருள்களாய்ப் பரிணமிக்கக்கூடிய பலவகைச் சக்திகளின் தொகுதியே 'மாயை' எனப்படும். உயிர்களைப் பற்றியுள்ள ஆணவ மலத்தின் வன்மை மென்மைகளுக்கேற்ப அம்மாயை சுத்தமாயிருந்து மயக்கத்தைத் தராமலும், மிசிரமாயிருந்து சிறிது மயக்கத்தைத் தந்தும், அசுத்தமாயிருந்து பெரிதும் மயக்கத்தைத் தந்தும் வருகின்றது. 'ஆணவம்' என்னும் ஒரு மலத்தையே உடைய விஞ்ஞானகலருக்கு (மெய்ஞானத்தினால் கலை அல்லது மாயாகாரியம் இல்லாதவர்) மாயை சுத்தமாக இருந்து மயக்கத்தைத் தராது. பிரளய

காலத்தில் மாயாகாரியம் இல்லாது ஆணவம் கன்மம் இருமலங்களையே உடைய பிரளயாகலருக்கு மாயை மிசிரமாக இருந்து சிறிதே மயக்கத்தைத் தரும். மும்மலங்களை உடைய சகலர்களுக்கு மாயை அசுத்தமாக இருந்து மயக்கத்தைப் பெரிதும் தரும்.

காச்மீர சைவத்திலும் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்ற மூவகை உயிர்கள் பேசப்படுகின்றன. சுத்த வித்யாதத்துவத்திற்குக் கீழே மாயாதத்துவத்திற்கு மேலே உள்ள விஞ்ஞானகலர் 'நான் இதைச் செய்கிறேன்' என்ற அபிமானமற்றவராய் பேத உணர்வற்ற சுத்தபோதசொரூபராவர். பிரளயகாலத்தில் உலகம் ஒடுங்கிய நிலையில் உள்ள 'பிரளய கேவலிகளுக்கு' 'நான்' (சைதன்யம்) என்ற உணர்வும் 'இது' (பிரபஞ்சம்) என்ற உணர்வுமின்றி சுழுப்திநிலையில் உள்ளது போன்றதும், யோகியரின் சமாதி நிலையில் உள்ளது போன்றதுமான ஒருவகைச் சூன்ய உணர்வு ஏற்படுகிறது. 'ஸ்வதந்திரத்தன்மை' கொண்ட 'சிதிசக்தி'யே சிவனுடைய ஞானசக்தி, கிரியாசக்தி, மாயாசக்தி என்றழைக்கப்படுகின்றது என்பதை முன்னர் கண்டோம். அதே சிவன் தன்னைக் குறுக்கிக்கொண்டு பசுநிலையில் இருக்கும்போது அம்மூன்று சக்திகளும் முறையே சத்வகுணம், ரஜோகுணம், தமோகுணம் என்ற முக்குணம் வாய்க்கப்பெற்ற 'புருஷன்' என்றழைக்கப்படுகிறான். எந்த நிலையை மேற்கொண்டபோதிலும் அதே பரமசிவன் தன் தன்மையை இழப்பதில்லை. உயிர்கள் பலவாக நாம் கருதுவதும் பொருள்களைப் பலவாக நாம் கருதுவதும் மாயாகாரியமே. நாம் சமுத்திரத்தை நோக்கும்போது அது ஒரு எல்லையற்ற அகண்ட விரிந்த பொருளாய் காணப்படுகிறது. எனினும் கணந்தோறும் அதன் மீது அலைகள் எழுவதும் வீழ்வதுமாக இருப்பதையும் காண்கிறோம். இவ்விரு காட்சிகளும் உடன் தோன்றுவன. எப்போதுமே நாம் இக்காட்சியைக் காணலாம். பரந்து விரிந்த கடல் போன்றவன் பரம சைதன்யனான பரமசிவன். அக்கடல்மீது எழுந்து மறையும் அலைகள் போன்றவை பிரபஞ்சத்தில் தோன்றி மறைவது போல் நாம் காணும் உயிர்களும் பிற பொருள்களும். எப்படி அலைகள் கடலினின்றும் வேறுபட்டன வல்லவோ, பல்வேறுபட்ட அலைகளாக அதே சமயத்தில் காட்சி தருகின்றனவோ, அதுபோல பல்லுயிர்களும் பல்பொருள்களுமாகக் காணும் பேத உணர்வை நாம் பெற்றிருக்கிறோம். இந்த பேத உணர்வு மாயையினால் ஏற்பட்டது. உண்மையில் சித்சக்தியின் அம்சங்களே இவை. இவ்வுணர்வு தடையற்ற சுதந்திரத்தன்மை வாய்ந்த நித்தியமான ஒரே சக்தியை

மறைத்து, பல உயிர், பல பொருள் என்று நம்மை எண்ணுமாறு செய்கிறது, கடலின் அகண்ட ஒருமைத் தன்மையை மறந்து பல் வேறுபட்ட அலைகளின் வேறுபாட்டிலே அவற்றின் தோற்ற மறைவிலே நாம் மகிழ்வது போல. இக் கருத்து 'தத்வசந்தோஹம்' என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.[20]

த்ரிக தர்சனத்தின் கொள்கைப்படி உயிர்கள் எண்ணுவதும் செயற்படுவதும் பரமசிவனின் இச்சாசக்தி, கிரியாசக்தியைச் சார்ந்தே நிகழ்வன. 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்ற கூற்று 'அணு'வாகிற சீவனுக்கும் பொருந்தும், உயிரற்ற பொருளுக்கும் பொருந்தும். 'ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே' என்றவாறு உலக இயக்கம், உயிரின் இயக்கம் எல்லாம் அவன் செயலே. இதற்குச் சான்றாகக் காட்டப்படுகிறது பகவத்கீதையிலிருந்து ஒரு மேற்கோள்.

'அர்ஜுனா, எல்லா உயிர்களின் இதயத்தானங்களில் ஈசுவரன் நிலைபெற்றிருக்கிறான்: யந்திரத்தில் ஏற்றப்பட்ட பொருள்கள் போல மாயையால் எல்லா உயிர்களையும் சுழற்றுகிறான்'.[21]

அபிநவகுப்தர் இதற்கு விளக்கம் கூறும்போது முற்றறிவும் பேராற்றலும் உடைய ஈசுவரனே தானாகிற ஆத்மாவாக இருக்கிறான் என்று 'விமர்சித்தால்' கர்மாக்கள் சீவனைச் சாரா என்று குறிப்பிடுகிறார்.[22]

சீவாத்மா என்ற நிலையிலும் நான்கு நிலைகள் பேசப்படுகின்றன. சீவாத்மாவும் பரமசிவனே என்பது த்ரிக சித்தாந்தமாகையால் பரமசிவனுடைய தொழில்களான ஸ்ருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்பவற்றிற்கேற்ப சீவநிலையில் விழிப்புநிலை (ஜாக்ரத்), கனவு நிலை (ஸ்வப்னம்), உறக்கநிலை (சுஷுப்தி) என்ற மூன்று நிலைகள் கூறப்படுகின்றன. ஈசுவரனுடைய சொரூபமாகக் கொள்ளப்படுகிற ஆனந்தகனமான நிலை துரிய (நான்காவது) நிலை எனப்படுவது. பரமசிவன் எதிலும் எந்நிலையிலும் நீக்கமற நிற்பவனாதலால் இத்துரிய நிலை மற்ற மூன்று நிலைகளிலும் உள்ளுறையாய் இருந்து வருகிறது என்று கொள்ளப்படுகிறது. விழிப்பு முதலான நிலைகளால் சூழப்பட்ட போதிலும், சிவபரம்பொருள் அவ்வப்பொருளாய் நின்று அனைத்தையும் அனுபவிக்கின்றபோதிலும் அப்பூரணசொரூபம் மறைந்திருக்கிறதேயன்றி அனைத்தையும் கடந்து நிற்கும் ஆற்றல் பெற்றதால் அது என்றும் எங்கும் இருந்தே வருகிறது.

விழிப்பு நிலையில் பிரபஞ்சம் பரம்பொருளின் 'விராட்சொருபமாக' இருக்கிறது. ஐம்பொறிகளும் ஐம்புலன்களை விஷயமாகக் கொண்டிருக்கின்ற இந்நிலையில் பலவகைப்பட்ட ஞானம் சீவர்களுக்கு ஏற்படுகிறது. கனவு நிலையில் புறக்கரணங்கள் சப்தம் முதலான விஷயங்களில் செல்வதில்லை. ஆயினும் அந்நிலையில் விசித்திரமான பொருள்களைக் காண்கிறோம். அது எப்படி சாத்தியமாகிறது? சிவனே சீவபிரமாதாவாக நின்று தனது 'பிரகாசஸ்வாதந்திரியத்தினால்' வீடு, நகரம், வனம், விலங்கு என்பதாக காணாத காட்சிகளைக்கூட காணவைக்கின்றான். இதை பரம்பொருளின் 'தேஜோவஸ்தை' என்று கூறுவர்.

'சர்வேசுவரனானவன் சர்வமயமாக இருந்துகொண்டு சொப்பனத்தில் போக்தாவாகப் பிரகாசிக்கிறான்' என்று வேதாந்த நூல் கூறுகிறது. சுழுப்தி நிலையில் பரம்பொருள் 'பிராஜ்ஞன்' என்ற நிலையில் இருக்கிறது இந்நிலையில் அறிவோன் அறியப்படுபொருள் என்ற பாகுபாடு இல்லை. இதை மகாசூன்ய நிலை என்றும் கூறுவர். இங்கே பரமசிவனே அனைத்தையும் பற்றிய அறிவை உடையவனாக விளங்குகிறான். விழிப்பு நிலையில் புறப்பொருளைப்பற்றிய 'இது நீலம்' என்பது போன்ற அறிவு, 'நான் சுகமாயிருக்கிறேன்' என்ற அக உணர்வு ஆகியவை உள்ளத்தின் அடித்தளத்தில் சம்ஸ்காரமாக மட்டுமே படிந்துள்ளன. இது எப்படித் தெரிகிறதென்றால், ஆழ்ந்த உறக்கத்தின் பின் விழிப்பு நிலை ஏற்பட்டபோது முன்னர் அனுபவித்த அனுபவங்கள் நினைவுக்கு வருவதைக் காண்கிறோம். 'தூக்கத்தில் சுகமாக இருந்தேன்' அல்லது 'தூக்கத்தில் துக்கவேதனை யடைந்தேன்' என்ற உலக வழக்கு இதற்குச் சான்று. ஆகவே சுழுப்தியில் பரமசிவன் 'சின்மயமாக' விளங்குகிறார், ஞானகனப்பிரகாச மூர்த்தியாகத் திகழ்கிறார். ஸ்பந்த சாஸ்திரம் இதுபற்றிக் குறிப்பிடும்போது, 'அறிவு (ஞானம்) அறியப்படுபொருள் (ஞேயம்) என்பதான பரம 'சக்தியோடு கூடி' விழிப்பு, சொப்பனம் ஆகிய நிலைகளிலும், சின்மயமாக மட்டுமே' இருந்து சுழுப்தி, துரியம் ஆகிய நிலைகளிலும் பரம்பொருள் விளங்குகிறது' என்று கூறுகிறது.[33]

'பசு'வினது பாசங்களின் வாசனையும் தீர்ந்துபோகும்போது சுத்தபூர்ணானந்த துரியநிலை ஏற்படுகிறது. மூன்று நிலைகளிலும் ஊடுருவி நிற்கும் இந்நிலையில் பரம்பொருள் ஞானகனப் பிரகாசானந்த மூர்த்தியாகத் திகழ்கிறார். இதில் பரமாத்வயஸ்வபாவம் ஓங்கி நிற்கிறது. மேலே கூறப்பட்டவை அபிநவகுப்தரின் கருத்துக்களாகும்.[34]

சீவன் சம்சாரியாகி போகத்தை அனுபவிக்கிறான். போகம் என்பது குறுகிய நிலையில் தன் விஷயமாகவே ஏற்படும் அனுபவம். இது எப்படி நிகழ்கிறது என்பதைப் பார்ப்போம். பதித்தன்மையே தன் மாயாசக்தியின் வலிமையால் பசுத்தன்மையை அடைகிறது என்பதைக் கண்டோம். இம்மாயா சக்தியினால் தோற்றுவிக்கப் பட்டதே சீவனுடைய புரியஷ்டகம் எனப்படுவது. புரி என்பது சரீரத்தைக் குறிக்கும். அதில் எட்டு பொருள்கள் அடங்கியுள்ளன. அவையாவன சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரசம், கந்தம் என்ற ஐந்து தன் மாத்திரைகளும், மனம், அகங்காரம், புத்தி என்ற மூன்று தத்துவங் களுமாகும். இப்புரியஷ்டகம் 'தேகபந்தம்' என்று சொல்லப் படுகிறது. சூக்ஷ்மதேகம் அதன் விளைவாகிற ஸ்தூலதேகம் இரண்டுமே புரியஷ்டகம் என்று கொள்ளப்படுகின்றன. தன் வசமான சிவன் புரியஷ்டகத்தில் உட்படுத்திக்கொண்டு பரவசமான ஆத்மாவாகக் காட்சியளிக்கிறான். சுவதந்திரன் பரதந்திரன் ஆகிறான். பிறவிதோறும் பெருகுகிற கருமவினைகளின் வாசனைக்கேற்ப சுகம், துக்கம், மோகம் முதலியவற்றை அனுபவிக்கிறான். ஈசுவரனுடைய இச்சாமாத்திரத்திலே தோற்றுவிக்கப்பட்டவை சப்தம் முதலிய தன் மாத்திரைகள். அவையே ஆகாயம் முதலிய பஞ்சபூதங்களாகப் பரிணமிக்கின்றன. சரீர நாடிகளில் ஆகாசமும், பிராணன்களில் வாயுவும், உடலில் உள்ள பாசனக்னி தேஜஸாகவும், ரத்தம் முதலான நீர் அப்புவாகவும், எலும்பு, தசை முதலானவை பிருதிவி யாகவும் இருந்து தொழிற்படுமாறு செய்கிறான் ஈசுவரன். இவனுக்கு அனுபவங்கள் ஏற்படுவதற்குக் கருவிகளாக அமைந்தவை மனம், அகங்காரம், புத்தி என்பவை. அலைபாயும் மனம் ரஜோகுணத்திற் கும், தான் என்னும் செருக்காகும் அகங்காரம் தமோகுணத்திற்கும், பாகுபடுத்திக் காணும் இயல்புடைய புத்தி சத்வ குணத்திற்கும் நிலைக்களன்களாய் இருக்கின்றன. இப்புரியஷ்டகம் சீவனின் சம்சார நிலைக்கு உதவுவது.

மேலே கூறப்பட்ட கருத்து ஸ்பந்தகாரிகையிலும் அதற்கு ராமகண்டாசாரியரால் எழுதப்பட்ட உரையிலும் காணப்படுவ தாகும்.[35]

வசுகுப்தர் சிவ சூத்திரத்தில் பின்வருமாறு கூறுகிறார். 'ஈசுவரனே எவ்விதப் பயனையும் கருதாது தன் சொரூப விமர்ச நிலையில் தன் சொரூபத்தை மறைத்துக்கொண்டு விழிப்பு முதலான பல நிலைகளிலும் தனது 'பரிஸ்பந்த சக்தியின்' லீலையை மேற்கொள்கிறார். மூவுலகிலும்

நடம்புரியும் நர்த்தகனுகக் காட்சியளிக்கிறன் ஈசுவரன். 'சர்வாகமோபநிஷத்தாகிற பிரத்யபிஜ்ஞையில் கூறப்பட்டுள்ளது, 'அகிலமெல்லாம் உறங்கிக்கொண்டிருக்கும்போது சம்சார நாட்டியத்தை ஆடிக்கொண்டு பரமேசுவரன் ஒருவனே விழித்துக் கொண்டிருக்கிறன்'. இவன் ஆடுகின்ற அரங்கம் சீவாத்மா. இவ்வரங்கத்தில் பல பல யோனி பேதங்களில் இவன் பற்பல வேடம் புனைகின்றுன். இந்நாட்டியத்தைக் காண இருப்போர் யோகியரின் இந்திரியங்கள். யோகியர்களே தங்கள் இந்திரியங்களை உள் முகமாகத் திருப்பி சீவனுகிற அரங்கத்திலே நிருத்தமிடும் பரமனைக் காண வல்லவர்.'[36]

கிரணுகமத்தில் 'பசு' இலக்கணம் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:-

> 'பசு: நித்ய: ஹி அமூர்த்த: நிஷ்க்ரிய: நிர்குண: அப்ரபு: வ்யாபீ மாயோதராந்தஸ்தோ போகாபாய விசிந்தக:'

இதற்கு அபிநவகுப்தர் விளக்கம் கூறுகிருர்[37] —

'அணுத்வம் முதலான பாசங்களோடு கூடியதால் 'பசு' எனப்படுகிறது; அனுதியாகையாலே நித்யம்; 'அஹம்' என்ற பண்பினுலே குறிக்கப்படுவதால் உருவமற்றது, சர்வ வியாபியாயுமிருப்பது; அறியப்படுபொருளாய் இருப்பதால் ஞானக்ரியை அற்றது; மாயைக்குள்ளே சிக்கியது; அறிவோனுக இருப்பதால் குணங்களைக் கடந்தவனுகிறன் (நிர்க்குணன்); சைதன்ய சொருபனுயினும் பூர்ணத் தன்மையின்மையால் போகத்தில் மேலும் மேலும் விருப்புடையன் ஆகிறன் '

சீவன் சர்வமயமாக இருக்கிறன் என்று ஸ்பந்தகாரிகை கூறுகிறது. ஒவ்வொரு பொருளைப் பற்றி அறியும்போதும் சீவன் அப்பொருளோடு தாதாத்மிய நிலையை (அதுவேயாகும் நிலையை) அடைகிறது. குடத்தையோ ஆடையையோ காணும்போது அதனேடு அபேதமான ஞானம் உண்டாகிறது. நல்ல இசையைக் கேட்கும்போது சுகம் என்னும் மனேவிருத்தியோடு இரண்டற நிற்கிறது. புலியைக் கண்டால் அச்சம் என்னும் உணர்வோடு ஒன்றுகிறது. ஒரு பொருள் இருக்கிறது என்றுல் அது அறியப்பட்ட போதுதான் 'இருக்கிறது' என்னும் பாவனை ஏற்படுகிறது. அப்போதுதான் பொருள் பிரகாசிக்கிறதென்றுல் பொருள் பிரகாசத்தினின்றும் வேறுபட்டதல்ல என்பது பெறப்படுகிறது. ஆகவே சீவன் ஒரு பொருளை அறிகிறது என்றுல் சீவன் அதில் பதிந்து

பிரகாசத்தைக் கொடுப்பதால் அப்பொருள் சீவனுக்குச் சரீரம் போன்றது எனலாம். கை, கால், முகம், இவை எல்லாம் சரீரம் என்று சொல்லப்பட்ட போதிலும் அதுவும்கூட அறியப்படுகின்ற நிலையில்தான் சரீரம். சுழுப்தி நிலையில் சரீரம் கூட பக்கத்திலே கிடக்கும் கட்டை போன்றதுதான். ஆகவே அறியப்படுபொருள் என்ற வகையில் சீவனுக்கு இரு வகை சரீரம் உண்டு என்று கூறலாம். ஒன்று, பரமேசுவர சொரூபமாயிருக்கும் உண்மையை அறியாத நிலையில் குறுகிய சக்திகளோடு கூடிய சீவனின் அகங்காரத் திற்கு உறைவிடமாகிய தலை, கால் முதலியவற்றாலான பௌதிக, சரீரம். மற்றொன்று பொறிகளுக்குப் புலனாகிய சப்தம், ரூபம், ரசம், கந்தம், ஸ்பரிசம் முதலானவற்றாலாகிய பாவாத்மக சரீரம். உண்மை யில் இரண்டுமே அறிதற்கு விஷயமானவை. சார்ந்ததன் வண்ண மாகும் இயல்பினதாயுள்ள காரணத்தால் உயிர் எந்தெந்த பொருளை அறியமுற்பட்டாலும் அதோடு பேதமற நிற்கிறது. ஆகவே சீவன் சர்வ மயன் விசுவரூபன் என்று கொள்ளப்படுகிறது என்கிறார் ராமகண்டா சாரியார். எனினும் இப்படி அறிவதன் தத்துவத்தைப் பராமரிசிக்கும் ஆற்றல் இல்லாமல், அப்பொருள்களெல்லாம் தன்னினின்றும் வேறான ஒன்றிலிருந்து தோற்றுவிக்கப்பட்டன என்று கருதி, வேறுபாட்டுணர்வு கொண்டு, உடல், கரணம் போன்று தன்னையும் அநித்யமாகக் கருதி பிறப்பிறப்பாகிற தளையில் கட்டுண்டு உழல் கிறது. அதை சீவன் எனச் சொல்கிறோம். அந்த சீவன் தன்னை அறிவோனாயும் சுற்றியுள்ள பொருள்களை அறியப்படு பொருள் களாயும் வேறுபடுத்திக் காண்கிறது. பொருள்களை நுகரும்போது தன்னை நுகர்வோனாயும் பிற பொருள்களை நுகரப்படு பொருள் களாயும் வேறுபடுத்திக் காண்கிறது. பிரமாதா, பிரமேயம், போக்தா, போக்யம் என்று காண்பதெல்லாம் அறியாமையின் பாற்பட்டவை.

இந்த சீவன் சிவசூரியனின் கிரணங்களாகிற அருட்சக்தி படிந்த காலத்தில் மெய்யறிவு பெறுகிறது. தத்துவத்தைத் தெளிவாகக் காண்கிறது. உடல் முதலான சடப் பொருளினின்றும் சைதன்ய சொரூபனான 'நான்' வேறு என்ற உறுதிப்பாடு பிறக்கிறது. தன் உண்மையான சொரூபம் என்ன என்பதை அப்போதுதான் உணர் கிறது. சங்கற்பமாத்திரத்தாலே விசித்திரமான இப்பிரபஞ்சம் தன்னாலே தன் சுதந்திரசக்தியால் விளையாட்டாக ஒரு சித்திரம் போல் தீட்டப்பட்டதென்று உணர்கிறது. உணர்ந்த மாத்திரத்தே சீவன் சிவமாகிறது. இப்போது பிரபஞ்சம் சிவமாகக் காட்சியளிக்

கிறது. போக்தாவாக (நுகர்வோனுகை) இருப்பவன் சீவன் அல்ல ஈசுவரனே என்றும், அவனே போக்கியப்பொருளான பிரபஞ்ச மாகவும் இருக்கின்ருன் எனவும் அறிகிருன். அவனே சீவன் முக்தன்[25]. மேலே கூறப்பட்ட கருத்து ஸ்பந்த காரிகையில் காணப் படுவது.

சீவனின் அன்ருட அனுபவத்தில் பிரவிருத்தி, ஸ்திதி, சம்ஹாரம், (தோற்றம், நிலைபேறு, ஒடுக்கம்) எப்படி ஏற்படுகின்றன என்பதை ஸ்பந்தகாரிகையில் ஆசிரியர் விளக்குகிருர். புறக்கரணங்களும் அந்தக்கரணங்களுமாக இருக்கின்ற பதின்மூன்று கரணங்களும் சடப்பொருள்கள் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர். ஒரு பையன் மாங்கனி ஒன்றைத் தின்ன வேண்டும் என்று விரும்புகிருன். தான் விரும்பிய அப்பொருளைப் பெறுவதற்காக மாமரத்தை நோக்கிச் சென்று அதைப் பறிக்கிருன். பறித்தக் கனியைச் சுவைத்து உண்கிருன். உண்டபின் வேட்கை அடங்குகிறது. இவ்வெல்லாச் செயல்களும் சீவனின் இச்சையால் உந்தப்பட்டவையே. இதே போன்று பலம் பொருந்திய பகைவன் வருகிருன் என்று கேள்வி யுற்ற ஒருவன் அவனைத் தவிர்க்கக் கருதி புகலிடம் தேடி ஒளிந்து கொள்ள ஓடவும் நேரிடும். தக்க புகலிடத்தைச் சேர்ந்த பின்னர் அச்சம் நீங்கி அமைதி பெறுகிருன். இச்செயல்களும் சீவனின் இச்சையால் உந்தப் பெற்றவையே. முதற்கண் தோன்றுகின்ற இச்சையால்தான் மனிதன் மாங்கனியைக் கண்ணுல் காண்பதும் கையால் பறிப்பதும் நாவால் சுவைப்பதும் நிகழ்கின்றன. அது போன்றே பகைவன் வருகையைக் காதால் கேட்பதும், காலால் ஓடுவதும் நிகழ்கின்றன. கண், காது, நா, கை, கால் முதலிய கரணங்களனைத்தும் சடப்பொருள்கள் என்பதைக் கண்டோம். அப்படியாஞல் அவை எப்படி சேதனப் பொருள்போல் இயங்கு கின்றன ? சீவ சைதன்யத் தொடர்பிஞல்தான். சீவனின் சுதந்திரத் தன்மை யாகிற இச்சையினுலே கரணங்கள் தத்தமக்குரிய தொழில் களில் பிரவிருத்திக்கின்றன. மாங்கனியைப் பெறவேண்டும் என்னும் இச்சையே அதற்கேற்ற செயலைத் தோற்றுவிக்கிறது. இச் செயல் தோற்றமே சீவனின் 'பிரவிருத்தி' அல்லது 'சிருட்டி' எனப் படும். கனியைச் சுவைத்துக் கொண்டிருத்தல் என்பது 'ஸ்திதி' எனப்படும். சுவைத்த பின் வேட்கை தணிதல் 'சம்ஹாரம்' எனப் படும். இப்படி எத்தனையோ, சிருட்டி ஸ்திதி சம்காரங்கள் தினந்தோறும் உயிர்களால் செய்யப்பட்டு வருகின்றன. பரமசிவன் தன் பரிபூரண இச்சாசக்தியாகிற சுவாதந்திரிய சக்தியால் பெரு

மளவில் பிரபஞ்சத்தையே சிருட்டி, ஸ்திதி, சம்ஹாரங்களுக்கு உள்ளாக்கி வருகிருன். அதே பரமசிவன் உடல், கரணம் ஆகிய உபாதிகளில் தன்னைக் குறுக்கிக்கொண்டு குறுகிய இடத்தில் குறுகிய கால வட்டத்திற்குள் நல்வினை தீவினைகளுக்கிணங்க விரிந்துள்ள பிரபஞ்சக் கடலில் திவலை போன்ற சிறு பொருளில் நாட்டம் கொண்டு இச்சாசக்தியினுல் சிறு அளவில் சிருட்டி முதலான தொழில்களை சீவன் என்ற பெயரில் செய்து வருகிருன். சீவனுக்கு உள்ள ஞானக்கிரியா சக்திகளெல்லாம் பரமாத்மாவினுடைய சக்தி களின் தொடர்பாலேயே ஏற்படுகின்றன. எனினும் மும்மலச் சேர்க்கையினுல் சிறு விஷயங்களில் வேட்கையை வளர்த்துக் கொண்டு 'சக்தி தரித்திரனுய்' இருக்கின்ற காரணத்தால் அலைப் புண்டு சில சமயங்களில் அச்சிறு விஷயங்களையும் அடைய முடியாதவனுயிருக்கிருன். நான், நான் என்று இப்படி அலைப்புறு கின்ற (க்ஷோபம்) நிலையினின்றும் மீண்டு இயல்பான, மாயையைக் கடந்த பூர்ணுகந்தை ஞானத்தை உணர்ந்தால், சூரியனைக் கண்ட பனிபோல் இந்த அலைப்பு நிற்கும். 'சத' எனும் ஆனந்தப் பொரு ளாய் பிரகாசிப்பான்.

4. பந்தமும் மோக்ஷமும்

பொதுவாக இந்திய சமயங்களிலே 'அவித்யை' என்பது பந்தத்திற்குக் காரணம் என்றும் 'வித்யை' பந்தத்தினின்று விடுபடுதற்கு உபாயம் என்றும் சொல்லப்படுகிறது.

' ஞானத்தால் வீடு' என்றே நான்மறைகள், புராணம்
நல்ல ஆகமம் சொல்ல, 'அல்லவாம்' என்னும்
ஊனத்தார் என்கடவர்? அஞ்ஞானத்தால்
உறுவதுதான் பந்தம்; உயர் மெய்ஞ்ஞானத்தான்
ஆனத்தால் அது போவது; அலர்கதிர்முன் இருள்போல்
அஞ்ஞானம் விட, பந்தம் அறும்; முத்தி ஆகும் '

என்று சிவஞானசித்தியார் கூறும்.[39]

'அக்யாதி' அல்லது 'அஞ்ஞானம்' (அறியாமை) என்பதே பந்தமாகிறது. இந்த அஞ்ஞானம் என்ன என்பதில் மதங்கள் வேறுபடுகின்றன. தான் பரிபூரணன், பேரறிவையும் பேராற்றலையும் கொண்டவன் என்பதை அறியாது குறுகிய அறிவையும் ஆற்றலையும் கொண்டவனாகக் கருதுவதே பந்தம் என்கிறார் அபிநவகுப்தர். ஆத்மாவிற்குப் புறம்பான உடல், பிராணன் முதலான அசேதனப் பொருள்களுடன் ஒருவன் தன்னை இணைத்துக்கொண்டு 'நான் பருத்திருக்கிறேன்' என்றோ 'நான் சுகமாயிருக்கிறேன்' என்றோ கூறுவது அறியாமை. இதனால் உயிர்கள் பல என்ற தவறான கருத்து ஏற்படுகிறது. இந்த நிலையில் ஆத்மா தன் அகண்ட ஞானசக்தியையும் கிரியாசக்தியையும் அறியமுடிவதில்லை. பிரகாச சக்தியையும் விமர்ச சக்தியையும் இழந்து முக்குண இயல்புகளுக்கு உள்ளாகி சுக துக்க மோகங்களுக்கு ஆளாகி உழல்கிறது. இறைவனே இப்படி ஏன் இழிந்த நிலைக்குத் தன்னை உட்படுத்திக் கொள்கிறான் என்ற கேள்வி எழலாம். அதுதான் அவனுடைய சுதந்திரத்தன்மை. அத்தன்மை இருப்பதால் அவன் சும்மா இருக்க இயலாது. 'ஸ்பந்தம்' அல்லது அசைவு அவனது இயல்பு. சும்மா இருப்பதானால் கல்லுக்கும்

கடவுளுக்கும் வேறுபாடிராது. உலக அரங்கில் பல பல வேடந் தாங்கி உலா வருதல் அவனுக்கு ஒரு விளையாட்டு. அத்தகைய பரிபூரண சுதந்திரத்தன்மையை அவன் பெற்றிருக்கிறான். பிரம்ம வாதத்தில் கூறுவதுபோல் பரம்பொருள் 'நிஷ்கிரியம்' அல்ல. என்றும் பஞ்ச க்ருத்யத்தைச் செய்துகொண்டிருப்பவன் சிவன். தன்னுடன் ஒன்றியிருக்கும் மாயாசக்தியால் பேத உணர்வைத் தோற்றுவிக்கிறான். பிறர் கூறுகின்ற அநிர்வசனீய மாயையன்று இது. மகேசுவரனைச் சார்ந்ததாகையாலே இது சத்தியப் பொருள். சிவனுடைய இச்சாமாத்திரத்தால் தோற்றமளிக்கும் உலகமும் சிவகல்பனையால் விளைந்ததாகையால் அசத்தியமன்று. அதுவும் சத்துப்பொருளே. சைதன்யமே சித்-அசித்தாகிற இப்பிரபஞ்சமாகத் தோன்றுகிறது. இதை ஆபாசவாதம் என்பர். 'ஆபாசம்' என்பது பிரகாசித்தல் என்னும் பொருள் கொண்டது. மின்சார சக்தி ஒன்றே ஆயினும் பல விளக்குகளாகப் பிரகாசிப்பது போல அவனுடைய இச்சாவசத்தால் தொழிற்படும் க்ரியா சக்தியே பல்வேறு உள் பொருள்களாகக் காட்சியளிக்கின்றன. இது ஈசுவரப் பிரத்யபிஜ்ஞா விமர்சினியில் கூறப்பட்டுள்ளது.[40]

அறியாமையை இருளாக உருவகப் படுத்துவதுண்டு. அறிவோனும் அறியப்படுபொருளுமாக (பிரமாத்ரு-பிரமேயமாக) இருக்கும் இப்பிரபஞ்சம் உண்மையிலேயே சைதன்யரூபனை மகேசுவரனிடமிருந்து வேறுபட்டதன்றெனினும், என் உடல், என் மகன், என் வீடு என்றெல்லாம் தன்னிடமிருந்து வேறுபடுத்திக் காண்பதை 'அனுத்மாபிமானம்' என்பார்கள். 'சித்ஸ்வரூபனை நானே இப்படிப் பிரகாசிக்கிறேன்' என்று உள்ளபடியே எண்ணாமல் பொய்யான பேத உணர்வு ஏற்படுகிறதென்றால், அது அறியாமை இருள் பற்றியதே ஆகும். மற்றொரு வகை அறியாமை சைதன்யரூபனை ஆத்மாவுக்குப் புறம்பாக உபாதிகளாக உள்ள பொருள்களில் 'ஆத்மாபிமானம் கொள்ளுதல்'. 'நான் இளைத்திருக் கிறேன், பசித்திருக்கிறேன், துக்கித்திருக்கிறேன்' என்பதெல்லாம் உடல், பிராணன், புத்தி ஆகிய உபாதிகளில் ஆத்மதன்மையை ஏற்றுவதாகிற மற்றொரு வகை அறியாமை.

சிவசூத்ரவிமர்சினீ என்ற நூலின் முதல் உந்மேஷத்தில் (I. 1.) பரம்பொருளாகிற ஆத்மாவிற்கு 'சைதன்யம் ஆத்மா' என்ற வசுகுப்தர் தரும் இலக்கணம் விளக்கப்படுகிறது. பிறகு மூன்றாவது உந்மேஷத்தில் (III. 1.) 'ஆத்மா சித்தம்' என்ற சீவாத்ம இலக்கணம்

விளக்கப்படுகிறது. புத்தி, அகங்காரம், மனம் என்பவை 'சித்தம்' என்ற ஒரு சொல்லால் குறிக்கப்படுகின்றன. தனது சைதன்ய சொருபத்தை அறியாத நிலையில், சத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களோடு கூடி பற்பல யோனிகளில் உயிர் சஞ்சரித்துக் கொண்டிருப்பதால் அது ஆத்மா எனப்படுகிறது. இச் சொல் இங்கே 'அத்' 'தொடர்ந்து சென்று கொண்டே இருத்தல்' என்ற மூலப்பகுதியினடியாகப் பிறந்தது. சத்துவகுணம் அந்தக்கரண விருத்தியின் வாயிலாகத் தொழிற்படும்போது, பிரகாசித்தல் (நிச்சயித்து அறிதல்) என்னும் புத்தியின் செயல் காணப்படுகிறது. ரசோகுணம் அந்தக்கரணவிருத்தியின் வாயிலாகத் தொழிற்படும் போது சங்கற்ப விகற்பம் என்பதான, சஞ்சலத்தன்மை கொண்ட ஐயுறுதல் என்னும் மனத்தின் செயல் காணப்படுகிறது. தமோகுணம் அந்தக்கரண விருத்தியின் வாயிலாகத் தொழிற்படுகிறபோது ஆவரணமாகிற அகங்காரத்தின் செயல் காணப்படுகிறது என்பர் த்ரிக நூலார். முக்குணங்களும் சமமாய் வெளிப்பட்டு நிற்கும் குணதத்துவத்தைச் 'சித்தம்' என்கிறோம். அவ்யக்தமான பிரகிருதிமாயை வியக்தநிலையை அடையும்போது 'குணதத்துவம்' என்கிறோம்.

இத்தகைய அணுவாகிற ஆத்மாவிற்கு சுகம், துக்கம், மோகம் ஆகிற அனுபவங்கள் ஏற்படுவதற்குக் காரணம் முன்னே கூறப்பட்ட புரியஷ்டகத்தோடு ஆத்மா தொடர்பு கொண்டிருப்பதே யாகும். பேத உணர்வை ஏற்படுத்தும் இந்த அனுபவ ஞானமே பந்தம் என்பதாகும். இதை 'ஞானம் பந்த:' என்ற சூத்திரத்தில் (III. 2) வசுகுப்தர் கூறுகிறார். கட்டுண்ட நிலையில் 'சுவதந்திரசைதன்யம்' பரதந்திர சீவனுகிறான்.

த்ரிக சாஸ்திரத்தில் அஞ்ஞானம் இருவகைப்படும். ஒன்று 'பௌருஷ' அஞ்ஞானம், மற்றொன்று 'பௌத்த' அஞ்ஞானம். பௌருஷ அஞ்ஞானம் என்பது புருஷன் அல்லது சீவனோடு அனாதியே தொடர்புடையது. இதையே ஆணவமலம் என்று கூறுகின்றனர். இதனால்தான் சீவன் தன்னைக் குறுகிய சக்தியுடையோனாகக் கருதுகின்றான். ஆத்மாவில் ஆத்மாவிற்குப் புறம்பான தன்மையையும், ஆத்மா அல்லாததில் ஆத்மாவின் தன்மையையும் ஏற்றி இடர்ப்படுகின்ற நிலை சீவனுக்கு ஏற்படுகிறது. பரமசைதன்யத்திடமிருந்து தான் வேறுபட்டிருப்பதாக சீவன் கருதுகிறது. இவ்வறியாமை உயிரை யொட்டிய சூக்குமமான அஞ்ஞானம். உடல், மனம், புத்தி ஆகியவற்றினால் விளையும் அறியாமை யல்ல. இது சீவனின்

துரியாதீதம் உட்பட்ட எல்லா நிலைகளிலும் உடன் ஒட்டிக்கொண்டிருப்பது. சீவன் எவ்வளவு முயன்றாலும் இவ்வாணவமல நீக்கம் ஏற்படாது. சிவனுடைய சக்திபாதத்தினால் முத்தி ஏற்படுகிற நிலையில்தான் இம்மலநீக்கம் ஏற்படும்.

பௌத்த அஞ்ஞானம் என்பது புத்தியைப் பற்றியது. புத்தி, மனம், கரணங்கள் ஆகியவை ஒரு எல்லைக்குட்பட்ட ஆற்றல் உடையவை ஆகையால் இவற்றின் துணைகொண்டு பெறப்படுகின்ற அறிவு சிற்றறிவு என்று சொல்லப்படும். இங்கே அஞ்ஞானம் என்பது முழுமையான ஞானமின்மை என்று பொருள்படுமே யல்லாது ஞானமின்மையாகாது. கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறிதலே இப்பௌத்த ஞானமாகும். சீவனுக்கும் சிவனுக்கும் எந்த நிலையிலும் வேறுபாடில்லை என்ற அத்வைதக்கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டபோதும் 'பூர்ண அகந்தை' மறக்கப்பட்ட காரணத்தால் அவ்வஞ்ஞானத்தோடு தொடர்புகொண்ட சீவன் சம்சாரத்தில் சிக்குண்டு சீர்கெட்டுத் துன்புறுகிறது, நல்ல மனிதனும் தீயோர் நட்பினால் சீர்கெட்டுத் துன்புறுவதுபோல.

இச்சம்சார பந்தத்தினின்றும் விடுபட்டு மீண்டும் பிறவா யாக்கைப் பெரியோனாகிய பரமசிவனின் சொரூபத்தைப் பெறுவது எப்படி என்பது பற்றிச் சில உபாயங்களை எடுத்துக்கூறியிருக்கின்றனர் த்ரிக சாத்திர நூலோர்.

மும்மலங்களைக் களைந்து பிரகாச-விமர்சமயமான, போத-சுவாதந்திரிய மயமான, பரம்பொருள் நானே என்று அறிதலே முக்தி. முத்தியடைதல் என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைதல் அல்ல. தேசம், காலம், வடிவம் என்ற எல்லைக் கோடுகள் அதற்குக் கிடையாது. சிலர் கூறுவதுபோல் சக்ராதாரங்களைக் கடந்து மேலே த்வாதசாந்தத்தில் லயிப்பதுமல்ல. பின்னர் மோக்ஷம் என்பது என்ன? தனது இயல்பான சுதந்திரத்தன்மையைக் கட்டுப்படுத்திய ஆத்மாபிமானமாகிற அஞ்ஞானத்தை அகற்றி, தனது இயல்பான சொரூபத்தை அறியக்கூடிய அறிவைப் பெற்றவிடத்தே மோக்ஷம் (கட்டு நீக்கம்) ஏற்படுகிறது. குடம் இருக்கின்றவரை 'கடாகாசம்' என்று வழங்கப்பட்டுவந்த பொருள் குடம் உடைந்ததும் பழைய மகாகாசமாகவே இருப்பதுபோல புதிதாக எதுவும் இப்போது தோன்றிவிடுவதில்லை. சிற்றறிவினனான 'மாயா பிரமாதா' என்ற நிலை நீங்க தன் முழுமையான சக்தியோடு பிரகாசிக்கும்போது முக்தன் என்று கருதப்

படுகிருன். அபிநவகுப்தர் மேற்கண்டவாறு மோக்ஷஸ்வருபத்தை விளக்குகிருர்.[41]

தீயில் வறுக்கப்பட்ட விதை மீண்டும் எப்படி முளைப் பதில்லையோ அப்படி ஞானுக்னியால் எரிக்கப்பட்ட வினை வினைப் பயனைத் தரமாட்டா. வேண்டுதல் வேண்டாமை யிலாத நிலையில் பயன் கருதாது வினைகளைச் செய்துவந்தாலும் 'நானே சித்கன-ஸ்வ தந்திர–சர்வபிரமாதா, நான் எதையும் செய்பவனல்ல, பரமேசுவர னுடைய சுதந்திரசக்தியே செய்விக்கிறது' என்று அபிமானம் சிறிது மின்றி செயற்படும்போது, அவ்வினைப்பயன்கள் இவனைச் சாரா. அவன் சீவன்முக்தனுகக் கருதப்படுகிருன்.

தீக்ஷை எடுத்துக்கொண்டு அசுவமேதம் முதலான யாகங்களைச் செய்கின்ருன் ஒரு யஜமானன். அவன் அதற்காகப் பெரும் பொருளைச் செலவிடுகின்ருன். புரோகிதர்களுக்கு உரிய தக்ஷிணையும் தருகின்ருன். சொர்க்கபோகம் முதலான பயன்களைக் கருதி யஜமானனுல் யாகம் செய்யப்படும்போது மிகுந்த தன்னபிமானத் துடன் செய்யப்படுவதால் அந்தந்த யாகத்தின் பயனை யஜமானனே அடைகின்ருன். உண்மையிலே பார்க்கப்போனுல் யாக சம்பந்தப் பட்ட கிரியைகளையும் மந்திரங்கள் ஓதுவதையும் புரோகிதர்களே செய்கிருர்கள். அவர்களுக்கு சொர்க்கபோகம் கிடைக்காது. அவர்கள் வேள்விச்சடங்குகளைச் செய்யும்போது யஜமானனைக் குறித்தே செய்கின்றபடியால், தனக்கு என்ற அபிமானமின்றியே செய்யப்படுகின்ற யாகபலன் அவர்களைச் சார்வதில்லை. கிரியைகளைச் செய்யாத யஜமானனுக்கு அப்பயன் சென்றடைகிறது. அதே போன்று அபிமானம் சிறிதும் இன்றி வினைகளைச் செய்துவரும் ஞானிகளுக்கு வினைப்பயன் இல்லை. ஆகவே மீண்டும் பிறப்பிறப்பு இல்லை. அவர்கள்தான் சீவன்முக்தர்கள்.

சீவன்முக்தனுடைய இயல்பு என்ன என்பது பற்றி அபிநவ குப்தர் பரமார்த்தசாரத்தில் குறிப்பிடுகிருர். பரம்பொருள் மகேசு வரனே. கீதையில் சொல்லப்பட்டுள்ளவாறு 'எல்லா உயிர்களிலும் அவன் இருக்கிருன். எல்லா உயிர்களும் அவனுள் அடக்கம்' என்ற உண்மையை உணர்கின்றவனுக்கு பேத உணர்வு ஏற்படுவதில்லை. சரீராபிமானம் அற்றுவிடுகிறது. அவன் பெறவேண்டிய வீடு பேற்றினைப் பெற்றுவிட்டானுகையால் உலகியலில் காணப்படும் உயர்வு தாழ்வு, அதிகாரிபேதம் என்பவையெல்லாம் அவனுக்கு ஒரு பொருட்டல்ல. காணப்படும் உலகம் ஆத்மபிரகாச சுதந்திரத்

தன்மையின் விளக்கமே என்றறிந்தோருக்கு மரணம் கங்கைக்கரையிலோ சண்டாளன் வீட்டிலோ எங்கு நிகழ்ந்தாலும் ஒன்றே. வேண்டுதல் வேண்டாமை அற்றவனுகி துரியாதீத கைவல்ய நிலையை அடைகிருன். மரணத்தறுவாயில் அவன் நினைவிழந்து விட்டாலும், முன்பே அவன் குருவின் உபதேசத்தால் ஆணவம் முதலிய கஞ்சுகங்கள் கழன்றவனுய் இருப்பின் முக்தி எய்துவது உறுதி. உமி நீக்கப்பெற்ற அரிசி எப்படி மீண்டும் முளைக்காதோ அப்படி மலநீக்கம் ஏற்பட்ட சீவனுக்கு மீண்டும் பிறப்பில்லை. ஞானக்கினியால் பொசுக்கப்பட்டுவிட்ட காரணத்தால் அஞ்ஞானம் இல்லையாகிறது. அஞ்ஞானம் இல்லாதபோது மீண்டும் பிறப்பிறப்பு இல்லை. கஜேந்திரனுக்கு பழைய ஈசுவரபக்தி சம்ஸ்காரம் ஆழப் பதிந்த காரணத்தினுலே அதே பாவனையோடு உயிர் பிரியப்போகிற நேரத்தில் ஆதிமூலத்தை அழைத்தபோது அப்பரம்பொருள் தோன்றி அந்த யானைக்கும் முத்தி அளித்தது. உமாபதிசிவம் முள்ளிச்செடியையும் முத்தி பெறச்செய்தார். அது தொடர்ந்து நிகழ்ந்துவந்த ஈசுவர பாவனையால் ஏற்பட்ட விளைவே. முத்தி பெறுவதற்கு அனைவருக்கும் தகுதி உண்டு. குலம், ஆசிரமம், பால், திணை முதலிய பாகுபாடுகளுக்கு இதில் இடமில்லை.

இறுதிக் காலத்தில் உடற்பிணியால் தாக்குண்டு உடலைப் பற்றிய சிந்தனையில் ஈடுபட்டிருந்தாலும் பகவத்பக்தியால் ஏற்பட்ட வாசனுபலத்தால் முத்திப்பேற்றிற்கு எந்தவித இடையூறுமில்லை. ஞானி பிறரைப்போல் உண்டும் உடுத்தும் காலம் கடத்திவந்தாலும் ஒரு முறை பரமாத்மானுபவம் ஏற்பட்ட பிறகு மீண்டும் பந்தநிலை ஏற்படாது. மந்தமான சக்திபாதம் உள்ளவர்கள் யோக நிலையில் கந்தம், நாபி, இதயம், கண்டம், லம்பிகை, பிந்து, நாதம், சக்தி என்றவாறு கிரமமான யோகநெறியை மேற்கொண்டு முத்தி நிலையை எய்துவார்கள். இப்படிநிலைகளில் இடை நிலையில் மரணம் எய்தியவர்கள் அவர்கள் செய்து முடித்த யோக நிலைக்குத் தக்கவாறு திவ்ய லோகம் முதலான புவனங்களில் வாழ்ந்து இறுதியில் மனிதப்பிறவி எடுத்து யோகத்தைப் பூர்த்தி செய்து சிவத்தன்மையைப் பெறுவார்கள்.

த்ரிக தரிசனத்தில் முக்திநிலை என்பது நீரும் நீரும் கல்ப்பது போலவும், பாலும் பாலும் கலப்பது போலவுமாகும். சீவனும் சிவனும் சமநீர்மையை (சாமரஸ்யத்தை) அடைகின்றன. இந்த நிர்வாண நிலையில் சீவன் பரமேசுவர சொருபாவேசம் பெற்று பரிபூர்ணத்

தன்மை வாய்க்கப் பெற்றவனாய் சிவசமமாகி விடுகின்றான். விறகினுள் உள்ள தீ கடையப்பெற்று கொழுந்து விட்டு எரியத் தொடங்கிய பிறகு நாம் காண்பது தேஜோமயமான தீப்பிழம்பேயாகும். அத்தீ மீண்டும் கட்டைக்குள் புகுவதென்பதில்லை. அதுபோன்றே ஞானத் தீயால் தாத்துவிகக்கட்டை எரிக்கப்பட்ட பிறகு தேஜோமயமாய்க் காட்சியளிக்கும் ஞானி மீண்டும் தத்துவத் தொகுப்பாகிற சரீரத்தில் புகுவதென்பதில்லை என்று சுவச்சந்த தந்திரம் கூறுகின்றது.

முத்தியடைவதற்கு நால்வகை உபாயங்கள் கூறப்பட்டுள்ளன. அவை ஆணவோபாயம், சாக்தோபாயம், சாம்பவோபாயம், அனுபாயம் என்பன. உயிர்களின் மெய்யுணர்வு வளர்ச்சிக்கேற்ப ஏதேனும் ஒன்றைத் தொடங்கி இப்படிமுறையை அவர்கள் மேற்கொள்ள வேண்டும். சைவசித்தாந்தத்திலும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்றும் தாச மார்க்கம், சற்புத்ர மார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கம் என்றும் பேசப்படுவதைக் காண்கிறோம். இதுபோன்று பக்தி நெறி, யோக நெறி, ஞான நெறி, ஆகியவற்றை மேற்கொள்ளச் சொல்லும் சமயங்களும் உண்டு.

ஆணவோபாயம் : த்வைத நிலையில் இருப்பவர்கள் முதற்படியாக ஆணவோபாயம் மேற்கொள்ளத்தக்கவர்கள். சாதகன் தன் கரணங்களை ஆத்மசாக்ஷாத்காரத்தின் பொருட்டு இந்நெறியில் பயிலுவிக்க வேண்டும். இதில் மனம், புத்தி, கரணங்கள் ஆகியவற்றை ஈடுபடுத்தி தூலதத்துவங்களை சூக்ஷ்மதத்துவங்களிலும், சூக்ஷ்மதத்துவங்களை பரதத்துவத்திலும் லயிக்கும்படிச் செய்ய வேண்டும். சிருட்டியைப் பற்றிக் கூறும்போது ஆத்மாவிலிருந்து ஆகாயம், ஆகாயத்திலிருந்து வாயு, வாயுவிலிருந்து அக்கினி, அக்கினியிலிருந்து நீர், நீரிலிருந்து பூமி என்று உபநிடதம் கூறுகின்றது. இதை மாற்றியமைத்து பூமியை நீரிலும், நீரை அக்கினியிலும் என்ற வரிசையில் சிவன் வரையில் இக்கலைகளை லயிக்கச் செய்யவேண்டிய முறை இவ்வுபாயத்தில் கூறப்படுகிறது. இந்த பாவனையின் முடிவில் நிர்விகல்ப சிவபதத்தை அடையலாம். இப்படி தியானித்தலே ஆணவோபாயம் என்று சொல்லப்படுவது. இப்படி தியானிக்கும் போது பேத நிலையில் நிற்கும் உயிர் பேதாபேத நிலை எய்தி முடிவில் அபேத நிலையை அடைகிறது. மந்திரங்களை ஒலித்தல் முத்திரைகளைப் பயன்படுத்துதல், தியானித்தல் ஆகிய செயல்களில் முறையே பிராணன், கரணங்கள், புத்தி ஆகியவை தொழிற்படுகின்றன. இப்படி பரதத்துவத்தில் லயித்தல் 'சமாவேசம்' எனவும் படும்.

ஆணவோபாயத்தை 'க்ரியோபாயம்' என்றும் சொல்வார்கள். ஏனெனில், மந்திர ஜபம், பிராணயாமம், இஷ்டதேவதையின் பூஜை முதலானவை இதில் இடம் பெறுகின்றன. யோகி பிராணன் அபானன் முதலியவற்றை ஒழுங்குபடுத்தி வரவேண்டும். ரேசகம், பூரகம், கும்பகம் என்று யோக நெறியில் கூறப்பட்டவாறு நாடிகளில் அவற்றைச் செலுத்தி சுழுமுனையில் கொண்டு நிறுத்தினால் மோக்ஷ மார்க்கத்திற்கு அது வழிகோலும். பாதம், நாபி, கண்டம், கண்டிகை, பிரம்மரந்திரம் என்ற இடங்களில் முறையே வாயு, அக்கினி, பூமி, நீர், ஆகாயம் என்னும் ஐம்பூதங்கள் இருப்பதால் அவற்றை வசப் படுத்தும் வகையில் தாரணைகளை மேற்கொண்டால் சித்திகளைப் பெறலாம். பஞ்சபூதச் சேர்க்கையினின்று விடுபட்டு சுத்த சுதந்திர சைதன்யமாதற்கு இது உபாயம். தேகசுத்தி, பூதசுத்தி, பிராண யாமம், பிரத்யாஹாரம், தாரணை, த்யானம், சமாதி ஆகியவற்றை மேற்கொள்வதன்மூலம் அந்தந்த தத்துவருபமான சித்தியை ஒருவன் அடையக்கூடுமே யல்லாது பரதத்துவப்பிரகாசம் அல்லது சிவப் பிரகாசத்தை அடைந்துவிட்டதாகக் கூறமுடியாது. மாயா மோகத்தை வென்று 'சிவோஹம்', 'அத்விதீயோஹம்' 'சர்வமிதம் அஹமேவ' (இவையனைத்தும் நானே) என்று சுத்தவித்யை ஏற்படு கிறபோதுதான் உண்மையான சமாதிநிலை கூடுகிறது. அப்போது தான் பரதத்வ சமாவேசம் ஏற்படுகிறது. ஆத்மதத்வம், வித்யா தத்வம் ஆகியவற்றைக் கடந்து பரதத்வபோதம் பெற்று பூர்ண விமர்ச சொருபமான 'அகந்தை' எனும் கதிரவனாக நின்று அறியப் படுபொருளாகக் காணப்படும் பிரபஞ்சமே கதிராக இருக்கும் அபேத நிலையை எய்துகிறான் சீவன். பிரம்மரந்திரம் முதல் கீழ்வாய் வரையிலும் தொழிற்படும் பிராணசக்தியாகிற பிரம்மத்தின் ஆசிரய மான மத்திய நாடியில் 'சைதன்யம்' சிறப்பாகப் பிரகாசிக்கிறது. மேலே கூறப்பட்ட உபாயத்தினால் இம்மத்திய நாடி பரிமளிக்கும் போது சிதானந்தப்பேறு கிட்டுகிறது. சீவன்முக்தி சித்திக்கிறது என்கிறார் க்ஷேமராஜர்.[42]

சிவஞான சித்தியார் சுபக்கத்தில் இரண்டாமதிகரணத்தில் கூறப்படுகின்ற 'சகமார்க்கம்' என்னும் யோகநெறி ஆருதாரங்களில் இறைவனை வழிபட்டு அவன் திருவுருவத்தை அடைதலைக் குறிக்கும். இதனை இவ்வுபாயத்துடன் ஒருவாறு ஒப்பிட்டுக் காணலாம்.

சாக்தோபாயம் எனப்படுவது மந்த்ர சக்தியின் வெளிப் பாட்டினைக் குறிக்கும். பூர்ணாகந்தை எனப்படும் பராசக்தியே

பிரபஞ்சமாகக் காட்சியளிக்கிறது என்று எண்ணும்போது (மனனம்) பேத உணர்வினின்றும் சீவன் காப்பாற்றப்படுவதால் (த்ராணம்) இவ்விரண்டையும் குறிக்கும் வகையில் 'மந்த்ரம்' என்ற சொல் ஆளப்படுகிறது. மந்த்ரம் என்பது வெறும் பீஜாக்ஷரங்களை உச்சரிப்பதோடு நின்று விடுவதில்லை. மந்த்ரம் என்பது மந்த்ர தேவதையைக் குறிக்கிறது; ஞானசக்தியைக் குறிக்கிறது. ஆகவேதான் இவ்வுபாயத்தை 'ஞானோபாயம்' என்றும் கூறுவர். இத்தர்சனத்தில் 'பரா வித்யா' என்பது அத்வய ஞானத்தைக் குறிப்பது. அதுவே மந்த்ர ரகசியம் எனப்படுவது. மந்த்ரங்கள் வர்ண உருவில் இருக்கின்றன; சக்தி சொரூபங்களாக இருக்கின்றன. அம்மாத்ருகா சக்தியை சிவ சொரூபிணீ என்றும் ஶ்ரீதந்த்ர சத்பாவம் என்றும் ஆகமம் கூறும். சிற்றறிவைக் கொண்டு ஓரளவு முயன்று ஒரு வரையறைக்குட்பட்டவாறு கடந்தகால எதிர்கால நிகழ்ச்சிகளையறிதல், திவ்யரூப தரிசனம், திவ்யசப்தஞானம் முதலான சித்திகளைப் பெறுவது ஆகியவற்றில் சிலர் திருப்தியடையக்கூடும். ஆனால் யோகியர் அவற்றை ஒதுக்கிவிட்டு சுத்தவித்தையை நாடி புருவங்களுக்கிடையே பிந்து முதல் பிரம்மரந்திரம் வரையிலான பகுதியில் உள்ள ஞானாகாசத்தில் சஞ்சரிப்பர். அப்பகுதியில் சக்தி, வியாபினீ, சமனா என்ற மூன்று ஆகாசங்கள் (கம் = ஆகாசம்) இருப்பதால் இதை 'கேசரீ' (சிதாகாசத்தில் சஞ்சரித்தல்) யோகம் என்பர். இந்த யோக நிலையை எட்டியவர்களுக்கு மாயையினால் தோற்றுவிக்கப்படும் பேத ஞானம் அகலும், அலைப்பு நிற்கும் சாந்த சித்ஸ்வரூபம் எனப்படும் 'மந்த்ர வீர்யமும்' பரபைரவீ சொரூபமான 'முத்ரா வீர்யமும்' (முத் = ஆனந்தம், ரா = தருதல்) ஏற்படும் என்று கூறுவர்.

ஊனூறல் பாயும் உயர்வரை உச்சிமேல்
வானூறல் பாயும் வகையறிவாரில்லை
வானூறல் பாயும் வகையறிவாளர்க்குத்
தேனூறல் உண்டு தெளியலுமாமே.[13]

திருமூலரின் இப்பாடல் இங்கே சிந்திக்கத்தக்கது. 'அஹம்' என்ற பீஜமே மந்த்ர வீர்யம் என்று கருதப்படுகிறது. வசுகுப்தர் சாக்தோபாயத்தை மேற்கண்டவாறு விளக்கியுள்ளார்.

இந்த முத்ராவீர்ய, மந்த்ர வீர்யங்களைப் பெறுதற்கு குருவின் உதவி தேவைப்படுகிறது. 'குரு' என்ற சொல்லிற்கு தத்வார்த்தங்களை உபதேசிப்பவர் (க்ரு = உரைத்தல்) என்பது பொருள்.

'மந்த்ரவீர்யத்தைப் பிரகாசிக்கச் செய்பவன் எனக்குச் சமமான குரு' என்று மாலினீவிஜயதந்த்ரத்தில் பரமேசுவரன் கூறியிருக்கிறான். குருவினால் மாத்ருகாசக்ர ஞானத்தைப் பெற்ற யோகிக்குத் தன் சரீரமே அவிர்ப்பாகம்; சைதன்யமாகிற அக்னியில் சிற்றறிவு (சரீர பிரமாதாவின் நிலை) வேள்விப் பொருளாக எரிக்கப்படுகிறது. இதைத் தான் கீதையிலும் கிருஷ்ணன் சொல்கிறான் – ஞானத்தால் மூட்டப் பெற்ற 'ஆத்மாவை அடக்குதல் என்னும் யோகத்தீயில் எல்லா இந்திரியச் செயல்களையும் பிராணச் செயல்களையும் அவிர்ப்பாகமாக யோகி சொரிகிறான்'. யோகியானவன் தான் இதுவரை பெற்ற தத்துவங்களைப்பற்றிய ஞானத்தை உணவாக விழுங்கிவிடுகிறான். அவை மறைந்தொழிகின்றன. இப்போது அவன் உட்கொள்ளும் உணவு பரஞானமாகிற சிவஞானம். இவ்வுணவை உட்கொண்ட பிறகுதான் அவனுடைய ஞானப்பசி தீர்கிறது. விசிராந்தியாய் ஸ்வரூப விமர்ச ஞானத்தைப் பெற்றவனாய் பூர்ணதிருப்தியைப் பெறுகிறான். இந்த சுத்தவித்தையைக் கைநழுவ விட்டால் பேதமய மான, விகற்பமயமான பிரபஞ்சத்தில் மீண்டும் உழலத் தொடங்கி விடுவான். ஆகையால் யோகி எச்சரிக்கையாக இருக்கவேண்டும். யோகி பெறுகின்ற நிலையை விளக்குகின்ற உத்பலதேவர் இந்த விசிராந்தி நிலையில் 'சம்வித் சைதன்யம்' என்றும் 'பூர்ணாகந்தா விமர்சஸ்வபாவம்' என்றும் 'சுவாதந்திரியம்' என்றும் 'முக்ய ஐசுவரியம்' என்றும் ஆகமங்களில் கூறப்படுவதான எல்லாவற்றிற் கும் ஆதாரமான பரமபிரமாதாவாக ஆகிறான் என்று கூறுகிறார்.[44] அந்த நிலையில் ஞானமாயும் ஞேயமாயும் இருக்கிற பரமேசுவர னுடைய சக்தி சமாதி நிலையிலுள்ள யோகியிடம் பிரகாசிக்கிறது.

சாம்பவோபாயம் என்பது ஒருவன் இச்சாமாத்திரத்தால் பரம்பொருள் சமாவேசத்தைப் பெறுகின்ற உபாயம். இதில் அறிவு பூர்வமாக முயன்று பரம்பொருளே இப்பிரபஞ்சம் என்ற உண்மையை அறியவேண்டிய நிலை இல்லை. எப்படி ஒரு கைதேர்ந்த பொற்கொல்லன் நவரத்தினங்களின் தரத்தை அவற்றைப் பார்த்த மாத்திரத்தில் எடை போட்டுச் சொல்லி விடுவானோ, அப்படி யோக நெறியில் நிற்கும் சாதகன் பரம்பொருள் தத்துவத்தைப் பற்றிய உண்மையை அநுசந்தானம் இன்றியே தன் இச்சாசக்தியாலே (Will power) உணரவல்லவனாகிறான். பொருளைப் பொறியால் அறிவதை 'ஜாக்ரத்' (விழிப்பு) நிலை என்கிறோம். பொருளின்றியே பொருளை மனத்தால் கருதுதல் 'ஸ்வப்னம்' (உறக்கம்) என்கிறோம். பொருளும் தோன்றாது கருதுதலும் (ஸ்மரணம்) இல்லாது இருக்கும்

நிலையை சுஷுப்தி என்கிறோம். இந்நிலையில் இது அது என்று வேறு படுத்திக் காணும் நிலை இல்லை. தெளிவாக அறியப்படாத மோக மயமானது இது இவை சாதாரண மனிதர்களுடைய நிலைகள். யோகி யரை வைத்துப் பார்த்தால் அவர்களது விழிப்பு நிலை தாரணாரூபமான அறிநிலை. ஞானப்பிரவாகம் அடுத்தடுத்து 'நானே வாயு', 'நானே சூன்யம்' என்பது போல விகற்பித்து வருதலே அவர்களது சுவப்ன நிலை. அறிவோன் அறியப்படுபொருள் என்று வேறுபாடு உணரப் படாத சமாதி நிலையை சுஷுப்தி நிலை எனலாம். இம்மூன்று நிலை களிலும் புசிப்போனாக (போக்தா) இருக்கும் யோகியை 'வீரேசன்' என்றழைப்பர். 'வீரன்' என்ற சொல் இந்திரியத்தைக் குறிக்கும்; ஆகவே 'வீரேசன்' என்பது இந்திரியங்களை அடக்கியாள்பவன் என்று பொருள்படும். 'இப் பிரபஞ்சம் என்னுள் இருக்கிறது; நானே எங்கும் இவை அனைத்துமாய் இருக்கிறேன்' என்று அத்வய பாவனையைச் செய்து சமாவேசம் அடைதல் (ஒன்றுதல்) தாரணை' என்று ஞானகர்ப்பம் என்ற நூல் கூறுகின்றது.

த்ரிக சித்தாந்தத்தில் அறியப்படுபொருளாகிய (பிரமேயம்) இப்பிரபஞ்சம் அறிவோனாகிய (பிரமாதா) மகேசுவரனின்றும் வேறுபட்டதல்ல என்று சொல்லும்போது, மும்மலங்களால் கட்டுண்டவனுக்கும் (பத்தன்) முக்தியடைந்தவனுக்கும் பிரமேயம் குறித்து என்ன வேறுபாடு இருக்க முடியும் என்ற வினா எழுகிறது. தத்வார்த்த சங்கிரகாதிகாரத்தில் இதற்கு விடை கூறும்போது ஆசிரியர் சொல்கிறார் — 'பிரமேயமாகிற பிரபஞ்சம் ஒரே நிலையில் தான் இருக்கிறது. முத்தன் தன்னினின்றும் வேறுபாடற்றதாக அதை அறிகிறான். தன்னைக் கட்டுக்குட்படுத்திக்கொண்ட சீவனோ தன்னினின்றும் பிரபஞ்சம் முற்றிலும் வேறுபட்டதாக அறிகிறான். முத்தன் அனைத்தையும் ஒன்றாகக் கருதுகிறான். நல்லது, கெட்டது, அழகானது, விகாரமானது, அமுதம், விஷம் என்ற வேறுபாட்டு ணர்வு அவனுக்கு இல்லை. சம்சாரிக்கு இவ்வுணர்வு உண்டு.

பரமேசுவரன் சுய சொரூபத்துடனேயே சீவனிடத்தே இருக் கிறான் என்றால் 'பண்டைய உண்மை நிலையை நினைவு கூர்தல்' எனப்படும் பிரத்யபிஜ்ஞைக்கு என்ன தேவை? ஒரு விதையை பூமியில் ஊன்றி, எருவிட்டு, மண்ணைக் கிளரி, நீரூற்றினால் காற்றும் வெப்பமும் துணை செய்ய விதை தானாக முளை விடுகிறது. பயன் கிட்டுகிறது. செடியான பின்னர் விதையே இருக்காது. இப்பயன் கிட்டுதற்கு செடி அதன் பழைய விதை நிலையை எண்ணவேண்டி

யிருப்பதில்லை. அதுபோல சீவன் முத்திப்பயனைப் பெறுதற்கு பிரத்யபிஜ்ஞை எதற்கு என்ற வினா எழுப்பப்படுகிறது. இதற்குத் தரப்படுகின்ற விடை பின்வருமாறு :— விதை, செடி என்ற எடுத்துக் காட்டு பருப்பொருள் பற்றியது. சீவன், முத்தி என்பவை உணர்வைப் பற்றியன. ஒன்று புறத்தே நிகழும் நிகழ்ச்சி ; மற்றது அகத்தே நிகழும் உணர்வு. ஆகவே எடுத்துக்காட்டு பொருந்தாது. ஒருவனுக்கு குழந்தை பிறந்திருக்கிறது என்றால் தந்தைக்கு அக்கணமே மகிழ்ச்சி ஏற்படுமா ? குழந்தை பிறந்த செய்தியை ஆள் மூலமாகவோ அஞ்சல் மூலமாகவோ பெற்ற பிறகே அவனுக்கு மகிழ்ச்சி பிறக்கும். இவ்வெடுத்துக்காட்டில் உள்ளுணர்வு பிறரால் உணர்த்தப்பட்ட நிலையில்தான் எழும் என்பதைப் பார்க்கிறோம். இதே மாதிரி சீவன் ஒருவன் முத்தி நிலையில் மகேசுவரனோடொத்த ஞான சக்தியும், கிரியா சக்தியும் பெற்றும் பேரானந்த அனுபவத்தைப் பெறவேண்டுமானால் 'நான் ஈசுவரனாயிருக்கிறேன்' என்று நினைவு கூர்தல் வேண்டும். இத்தகைய உள்ளனுபவம் ஏற்பட வேண்டும். இத்தகைய சித்தி பிரத்யபிஜ்ஞையினால்தான் பெறப்படுகிறது என்பதற்கு ஏதேனும் எடுத்துக்காட்டு உண்டா? ஓரெடுத்துக்காட்டு தரப்படுகிறது.

ஒரு காதலி நாயகன் ஒருவனுடைய நற்குணங்களைக் கேட்ட மாத்திரத்தில் அவனிடம் காதல் கொண்டுவிடுகிறாள். அவன் எங்கேயோ இருக்கிறான். இவள் இங்கே பிரிவாற்றாமையால் துன்புற்று நலிகிறாள். காதற் கடிதம் எழுதிப் பார்க்கிறாள். அவன் குணம் கேட்டு உவகை பூக்கிறாள். பிறகு ஏங்குகிறாள். இப்படித் துன்புறுகின்ற நிலையில் ஒரு நாள் எதிர்பாராத விதமாக அந்த நாயகனே அவள் முன் நிற்கிறான். நின்றும் அவனை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. தான் கருதிய குணங்களை உடையவன் அவன்தான் என்பதை அவள் எப்படி அறிந்து கொள்ள முடியும் ? அறியாத வரையில் அவனை நேரில் கண்டும் அவளுக்கு எப்படி மகிழ்ச்சி ஏற்படும்? அப்போது தூதி ஒருவள் அவனைச் சுட்டி காதலி கருதியிருந்த குணங்கள் அனைத்தும் பெற்றவன் இவனே என்று உணர்த்திய பின்னரே அவளுக்குப் பூரண மகிழ்ச்சி ஏற்படுகிறது. இங்கே மகிழ்ச்சி ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தது அவனது குணங்களைக் கருதிப் பார்ப்பதான 'பராமர்சம்' அல்லது 'பிரத்யபிஜ்ஞையே'[45].

இதே போன்று சீவனிடத்தில் விசுவேசுவர சொரூபம் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றபோதிலும் அவனுடைய முற்றறிவு

எதையும் செய்து முடிக்கும் பேராற்றல் முதலான பண்புகளைச் சரிவர நினைவுகூர இயலாத வரையில் பரிபூரணத் தன்மையை அடைய முடியாது. அறியாமைத் திரை அறியவொட்டாமல் தடுக்கிறது. ஒரு குரு நேரில் உண்மையை உணர்த்தும்போதுதான் 'தானே அந்த சர்வகர்த்ருத்வம் சர்வக்ஞத்வம் முதலான பண்புகளைப் பெற்ற பரமேசுவரன்' என்ற அறிவு விளங்கப் பெற்று முத்தி நிலையை அடைகின்றான். இக்கருத்து ஈசுவரப் பிரத்யபிஜ்ஞா விமர்சத்தில் கூறப்பட்டுள்ளது.

'ஸ்மரணம்' (remembrance) என்பதும் 'பிரத்யபிஜ்ஞை' (recognition) என்பதும் ஓரளவு ஒத்திருந்தபோதிலும் ஒரு வகையில் வேறுபட்டும் இருக்கிறது என்பதை அறிதல் வேண்டும். சில வருடங்களுக்கு முன் தசரா பண்டிகையின்போது அலங்கரிக்கப்பட்ட யானையின் மீது மைசூர் மகாராஜாவை ஒருவர் பார்த்திருக்கக்கூடும். இன்று அவர் அந்த யானையை மட்டும்தான் பார்க்க முடிகிறது. எனினும் அன்று அவர் கண்ட மகாராஜாவின் தோற்றம் அவர் கண் முன்பே நிற்கிறது. இதற்கு காரணம் முதல் அனுபவத்தின் சம்ஸ்காரம் அதனோடு தொடர்புள்ள யானையைப் பார்த்தபோது அநுபவ நிலைக்குக் கொண்டுவரப்படுகிறது. அன்று கண்ட மகாராஜா இன்று கண்முன் பிரத்தியட்சமாக இல்லையென்றாலும், இன்று மீண்டும் அவரை நினைவு கூர்ந்து (ஸ்மரணம்) ஒரு வகை அநுபவத்தைப் பெறுகிறார். பிரத்யபிஜ்ஞையிலோ என்றால் நினைவு கூர்தலாகிற தொழிலுக்கு அன்று கண்ட அவரே கண்முன் வந்து காட்சியளிக்க வேண்டியிருக்கிறது. அப்படி அல்லாத வரையில் தெளிவான அநுபவம் ஏற்படுவதில்லை. மேலே காட்டிய நாயகி-நாயக எடுத்துக்காட்டில் நாயகி தற்செயலாக அவள் எண்ணிக் கொண்டிருந்த நாயகனைச் சந்திக்க நேர்ந்திருந்தாலும், அவன்தான் அவள் கருதியிருந்த நற்பண்புகளமைந்த நாயகன என்று தூதியால் உணர்த்தப்படாத வரை அவனைக் கண்டுவிட்ட இன்ப உணர்வு எழாது. அதுபோல் இறைவனின் பேராற்றல்களை அறிந்திருந்தபோதும், குரு அவ்வாற்றல் பெற்ற இறைவனும் சீவனும் ஒன்றே என்பதை நேரடியாக அவன் உணருமாறு செய்தாலன்றி அபேத ஞானம் தோன்றாது. பேரொளியாய் (பிரகாசமாய்) இருக்கின்ற அவனே சித்தும் அசித்துமான பிரபஞ்சமாய் (விமர்சமாயும்) இருக்கிறான் என்பதை குருமுகமாக உணர்ந்தபோது சீவன் முக்தனாகிறான். பிறகு அவன் உலகில் வாழவேண்டியிருந்தாலும் யந்திரம்போல்

இயங்கிக் கொண்டிருப்பானேயன்றி அவன் செய்யும் வினைகளால் புண்ணிய பாவங்கள் விளைவதில்லை.

இப்படி குருமுகமாக உண்மை உணர்த்தப்படுவதோடு ஈசுவரனின் தீவிர சக்திபாதம் முக்தியடைதற்கு ஒரு எளிய உபாயமாகக் கருதப்படுகிறது. இதில் சீவன் எவ்வித சாதனத்தையும் மேற்கொள்ள வேண்டியதில்லை. ஆகவே இதை 'அனுபாயம்' (உபாயமின்மை) என்றும் சொல்வார்கள். ஈசுவரானுக்ரஹம் கிட்டிய மாத்திரத்தே ஆத்மசாக்ஷாத்காரம் ஏற்பட்டுவிடுகிறது. உயிர் செய்ய வேண்டிய முயற்சியெல்லாம் ஒரு சிறிதே என்றும் சொல்வதுண்டு. இக்கருத்திற்கேற்ப அனுபாயம் (ந + உபாயம்) என்ற சொல் 'ஒரு சிறிது' (ந) உபாயம்' என்றும் பொருள் கொள்ளப்படும். எப்படிப் பொருள் கொண்டபோதிலும், தீவிர சக்திபாதம் (விரைவான திருவருள் வீழ்ச்சி) இவ்வுபாயத்தில் இன்றியமையாது வேண்டப்படுகிறது. இதை 'ஆனந்தோபாயம்' என்றும் சொல்வதுண்டு.

இங்கே சிவஞானசித்தியாரில் எட்டாம் சூத்திரத்தை யொட்டிய ஒரு பாடலை ஒப்புநோக்கிக் காணலாம். ஒரு அரசனுடைய புதல்வன் அறிவு முதிர்ச்சியுறுத சிறு பருவத்தில் வேடர்கள் வசப்பட்டு அவர்களுடன் தங்கி அவர்களுடைய பழக்க வழக்கங்களை மேற்கொண்டு, தன் தந்தை யார், தான் யார் என்பதை அறியாமல் வளர்ந்து வருகிறன். சில வருடங்கள் கழித்து அவ்வரசன் தற்செயலாக அவனைக் கண்டு 'நீ என் மகன்' என்று உண்மை நிலையைக் கூறி, வேடர்களிடமிருந்து அவனைப் பிரித்து அரசருக்குரிய தன் தன்மையனுகும் வண்ணம் செய்து போற்றுவதுபோல, மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளாகிற வேடர்களின் பிடியிலிருந்துகொண்டு சீவனுகிற தன்னையும் தன்னுடன் இருந்து இயங்கி வரும் இறைவனையும் அறியாமல் பிறவித் துயரத்தில் சிக்குண்டு தவிக்கும் உயிரை ஆட்கொள்ளும் பொருட்டு, இறைவனே அருள் பாலிக்கும் குருவாக எழுந்தருளி ஐம்பொறிகளாகிற வேடர்களினின்றும் உயிரை மீட்டு அறியாமையாகிற மலத்தைப் போக்கி தன் வண்ணமாக்கி முக்தியின்பத்தைப் பெறச் செய்வான் என்று கூறுகிறது கீழ்வரும் அப்பாடல்.

மன்னவன் தன் மகன் வேடரிடத்தே தங்கி
வளர்ந்து அவனை அறியாது மயங்கி நிற்ப

பின் அவனும் 'என் மகன் நீ' என்று அவரிற் பிரித்து
பெருமை யொடும் தானுக்கிப் பேணுமாபோல்
துன்னிய ஐம்புலவேடர் சுழலிற்பட்டு
துணைவனையும் அறியாது துயருறும் தொல்லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்து அவரின் நீக்கி
மலமகற்றித் தானுக்கி மலரடிக்கீழ் வைப்பன்.

— சிவஞானசித்தியார் சுபக்கம், 8,1.

'சக்தி பாதம்' என்பது ஈசுவரனின் 'திருவருள்' என்று பொருள் படும். அவனருளின்றி எதுவும் நிகழாது என்பது சைவம் முதலான பல சமயங்களும் ஏற்றுக்கொண்டுள்ள கருத்து. கடோபநிஷத்தி லேயே இக்கருத்து காணப்படுகிறது.

'ஆத்ம ஞானம் அதுபற்றிப் பேசப்படும் சொற்களாலேயே பெறப்படுவதில்லை; புத்திக் கூர்மையினுலோ மிகுந்த வித்தையினு லோ கூட அதைப் பெற இயலாது. எவனுக்கு அவ்வறிவு கிட்ட வேண்டும் என்று பரம்பொருள் தேர்ந்தெடுக்கிறதோ (அருள் பாலிக்கிறதோ) அவனுக்கே அது தன் முழு சொருபத்தையும் காட்டுகிறது.

சைவ சித்தாந்தத்தில் 'ஒருவன் தான் செய்த நல்வினைப் பயனுகிய இன்பத்திலும், தீவினைப் பயனுகிய துன்பத்திலும் உள்ளம் வேறுபடாது இரண்டையும் சமமாக நுகரும் நிலையை எய்திய காலத்தில் சக்தி நிபாதம் உண்டாகும்' என்று கூறப்படுகிறது. திரோதானமாய் நின்று மறைப்பைச் செய்துவந்த சிவசக்தி, மலம் பரிபக்குவம் உற்ற நிலையில் அருட்சக்தியாக மாறி ஆன்மாவிடத்தில் பதிதலை சக்திநிபாதம் உணர்த்தும்.

இச் சக்திபாதம் தீவிரம், மத்யமம், மந்தம் என்று மூன்று வகை யாக த்ரிக சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது. முற்பிறவிகளில் ஏற்பட்ட சம்ஸ்காரங்கள் அல்லது இறையனுபவ வாசனைகள் முதிர்ந்திருக்குமானுல் அந்த சீவன் தீவிர சக்திபாதத்திற்கு அதிகாரி யாகிருன். இவ்வுணர்வு குறைந்திருந்தால் சில விசேட சாதனங் களையும் கிரியைகளையும் மேற்கொள்ள வேண்டியிருக்கும். குரு முகமாக உபதேசமும் தீக்ஷையும் தேவைப்படும். பிறகு காலக் கிரமத்தில் முக்தி கிட்டும். இவ்வதிகாரியிடத்தே செயற்படும் சக்தி பாதம் மத்யமம் எனப்படும். இறையுணர்வு மேலும் குறைந்து காணப்படும் சீவன், ஞான நூல்களைக் கற்றும் கேட்டும் படிப்படி

யாக பல வகைச் சாதனங்களையும் உபாயங்களையும் மேற்கொண்டும் அவ்வுணர்வு கிரமமாகப் பெருகிவர இறுதியில் முக்தியடைகிறுன். இவனிடத்தே செயற்படும் சக்திபாதம் மந்தமானது.

அபிநவகுப்தர் பரமார்த்தசாரத்தில் இதுபற்றிக் குறிப்பிடுகிருர். 'ஒரு பக்குவ ஆன்மா தனது இறுதிப் பிறப்பில் சிறந்த ஒரு குருவின் வாயிலாக பூர்ண சுவாதந்திரியத்தைக் குறிக்கும் 'பரமார்த்த மார்க்கம்' பற்றிய விளக்கத்தைப் பெற்ற உடனே சிவனேயாகி விடுகிருன்[46]. அதிதீவிர சக்திபாதத்தினுலேயே இது ஏற்படுகிறது. அதாவது பரமேசுவரனுடைய அநுக்கிரக சக்தி சீவனுடைய இதயக் கமலத்தில் படிகிறது. தாமிரம் சித்தருடைய ரச சேர்க்கையால் பொன்னுவதுபோல சீவன் சிவத்துவத்தைப் பெறுகிருன். இதில் ஜபம், தியானம், யாகம் ஆகியவை யெல்லாம் இடம் பெறுவனவல்ல. இந்த பரமேசுவரனுடைய சக்திபாதம் விரைவில் விசித்திரமான முறையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகிறது. அவன் சீவன்முக்தனுகி விடுகின்றுன்.' அத்தனைப் பக்குவமற்றவர்களுக்கு நீண்ட காலம் குருபதேசம் வேண்டியிருக்கும். சிலருக்கு அப்பிறவியின் இறுதியில் மரணத்திற்குப் பின்னர் முத்திநிலை கிட்டும். வேறு சிலர் தேவர் களாகவோ பிற உயிர்களாகவோ பிறந்து மீண்டும் மானிடப் பிறப்பில் இப்பேற்றினைப் பெறுவர்.

'புருஷகாரம்' என்று சொல்லப்படும் சீவனின் முயற்சியின்றியே சக்திபாதம் பயனளிக்கவல்லது. மனித முயற்சியும் மாயையின்பாற் பட்டதால், மாயையாகிற இருள் சுத்தப் பிரகாசமான சிவத்தன்மை யின்முன் நில்லாதாகையால் முயற்சி உபாயமாகாது என்று ஈசுவர பிரத்யபிஜ்ஞாவிமர்சம் கூறுகின்றது. ஏன், எப்படி, எப்போது என்ற தருக்க நெறிக்கு அப்பாற்பட்டது சக்திபாதமெனும் செயல். இதன் விளைவான முத்தியைக்கொண்டே இது நிகழ்ந்துள்ளது என்று நாம் அறியவேண்டும். பரங்கருணைத் தடங்கடலான பரமேசுவரனின் பஞ்சகிருத்தியங்களுள் ஐந்தாவதான இவ்வருட் செயல் அவனது இயல்பே யாகையால், சக்திபாதத்திற்குக் காரணம் காணவியலாது. அப்படிக் காரணம் காண முற்படுவது அவனது சுதந்திரத்தன்மைக்கு ஏற்றதாகாது.

சிதானந்தகனனுன அப்பரம்பொருளே தன்னை உடல், பிராணன், புரியட்டகம் முதலான விலங்குகளால் கட்டிக்கொள் கிறது. பிறகு 'சைதன்யரூபனுன நான் சுதந்திரனுக இருக்கிறேன்'

என்று 'விமர்சம்' செய்யும்போது அக்கட்டுகளிலிருந்தும் விடுபடு கிறது. அஞ்ஞானத்தால் ஏற்பட்ட ஆவரணம் (தளை) விமர்ச ஞானத்தால் களையப்படுகிறது. பரமசிவன் கட்டுண்ட நிலையில் தன் சொரூபத்தை மறைத்துக்கொண்டு விளையாடுகிறான். மீண்டும் தான் விரும்பிய காலத்தில் தன்னை அக்யாதியினின்றும் விடுவித்துக் கொள்கிறான். சிவனே அந்தந்த தத்துவத்தில் அத்தந்த பிரமாதா வாக அனுபவத்தை எய்துகிறான் என்றால் அது அவனுடைய சுதந்திரத்தன்மையைக் குறிக்கும். அவனே பந்தம் மோக்ஷம் என்ற இரு வேறுபட்ட விசித்திர விளையாட்டினை விளையாடுகிறான் என்று கூறுகிறார் அபிநவகுப்தர். ஆகவே சக்திபாதம் ஒரு சிலருக்கு விரைவில் ஏற்படுகிறது, வேறு சிலருக்கு காலம் தாழ்த்து ஏற்படு கிறது என்பதனால் ஒருதலைச்சார்பு என்ற குற்றச்சாட்டுக்கு அவர் இலக்காவதில்லை.

கண்ணிய சேதனன்கண் வந்த பேரருள்
அண்ணல் அடிசேர் உபாயமதாகுமே. (2421)

என்னும் திருமூலர் வாக்கு சக்திபாதம் முத்திக்குபாயம் என்பதை வலியுறுத்துகின்றது.

அருளிற் பிறந்திட்டு அருளில் வளர்ந்திட்டு
அருளில் அழிந்து இளைப்பாறி மறைந்திட்டு
அருளான ஆனந்தத்தாரமுதூட்டி
அருளால் என் நந்தி அகம் புகுந்தானே (1800)

என்கின்ற திருமந்திரம் சிவபெருமான் பஞ்சகிருத்தியம் அனைத்துமே அவனது அருட்செயல் என்பதை நினைவூட்டுகிறது. இது முத்தியில் சிறப்பாக வெளிப்படுகிறது. 'முடிகின்ற காலத்து முன்னின்றருளும்' என்றும், 'சிவனருள் கூடின் அச்சிவலோகமாமே' என்றும் கூறுகிறார் திருமூலர்.

'சக்திபாதம்' ஏற்படுகின்றபோது குருவருளும் சேர்கிறது. நான், எனது, நன்மை, தீது என்ற எண்ணங்கள் அப்போது எழுவதில்லை. எல்லாம் அவன் செயல் என்ற எண்ணம் தலை தூக்கும். தன் முனைப்பு கெடும். மும்மலங்களும் வலி இழக்கும். இக்கருத்தை திருமூலர் தெரிவிக்கின்றார்.

இருவினை நேரொப்பில் இன்னருட் சக்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்

தருவென ஞானத்தால் தன் செயலற்றுல்
திரிமலந் தீர்ந்து சிவனவனுமே. (1527)

குரு சீவனுடைய மலபரிபாகத்திற்கேற்ப சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற ஏதேனும் ஒரு மார்க்கத்தையோ ஒன்றுக்கு மேற்பட்டவற்றையோ வகுத்துத் தருவார். சீவனிடத்தில் சக்தி பாதம் மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என்ற வகையில் எந்த நிலையில் இருக்கிறது என்பதைக் கண்டு அதற்கேற்ப வழிமுறை களைத் தேர்ந்தெடுப்பார். அத்தகைய குருவே 'பாசத்தை நீக்கிப் பரனேடு தன்னையும் நேசத்து நாடி மலமற நீக்குவோர்' ஆவர். வேத விற்பன்னராயிருந்தாலும், சாஸ்திரங்களைக் கற்றுத் தெளிந்த ஞானியாயிருந்தாலும், சிறந்த கவிவாணராயிருந்தாலும் ஒருவ னுடைய மனம் குருவின் திருவடித் தாமரைகளில் படியாவிட்டால் பயனில்லை என்று சங்கரர் கூறியிருப்பது நாம் இங்கே நினைவுகூரத் தக்கது.

குரு மந்திரவீர்ய சக்தியைப் பிரகாசிக்கச் செய்பவர் என்றும் சிவனுக்கு சமமானவர் என்றும் மாலினீவிஜயதந்திரத்தில் சொல்லப் பட்டுள்ளது. அதே நூலில் பிறிதோரிடத்தில் பரமேசுவரனுடைய அனுக்கிரகசக்தியே குருவடிவில் காணப்படுவது என்று கூறப் படுவதைப் பார்க்கிறேம். கல்லாலின் புடையமர்ந்து குருவடிவம் தாங்கி மாணிக்கவாசகருக்கு அருள் புரிந்தமையைக் காண்கிறே மல்லவா ?

சீவன் செய்யவேண்டிய முயற்சி யாது? பரமேசுவரனைப் பூசித்தல் வேண்டும், துதித்தல் வேண்டும். அவனை எப்படி வழி படுவது என்பதை உத்பலதேவர் 'சிவஸ்தோத்ராவளியில்' குறிப்பிடு கிறார். ஓரிடத்தைக் காண்போம். 'உமாபதியே, உன்னை இந் நிறத்தன், இவ்வண்ணத்தன், இப்பண்பினன் என்றெல்லாம் பகுத்துக் கூற இயலாது. சித்ருபன், அனைத்திலும் இரண்டறக் கலந்திருப்பவன், அனைத்தையுமே நினது சொருபமாகக் கொண் டவன், ஆறத்துவாக்களிலுமுள்ள பொருள்களையும் தன்னகத்தே அடக்கி வைத்திருப்பவன்; அத்தகைய உன்னை நான் எப்போதும் பூசிப்பேனுக'[47], துதிப்பேனுக, என்று சீவன் வேண்டவேண்டும்.

உத்பலதேவர் கூறுகின்ற பக்திநெறிக்கும் சைவ சித்தாந்திகள் கூறுகின்ற பக்திநெறிக்கும் வேறுபாடு உண்டு. பின்னையதில் கூறப் படும் தாசமார்க்கம், சத்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம்

என்றவற்றுள் இறைவன், உயிர் என்ற வேறுபாடு இருந்துவரும். பிரத்யபிஜ்ஞா தரிசனத்தில் 'நான் சிவனே' என்று பேரபிமானம் கொண்டவனுகச் சீவன் காணப்படுகிருன். ஆகவே உருத்திரன், அனந்தர் முதலானேர் தத்தம் அளவில் சிருட்டி முதலியவற்றை சுத்தாத்துவாவில் செய்கின்றபோதும், சீவன் அவர்களுக்கெல்லாம் சின்மயகாரணனுக இருக்கும் சிவனை வழிபடவேண்டும். உண்மையில் சிவனே பிற தெய்வங்களை அதிட்டித்து நின்று பஞ்சகிருத்தியத் தொழிலைச் செய்கின்ருன். அதற்குரிய சுதந்திரசக்தி அவனிடமே உள்ளது. பிரமன் முதலியோர் சிருட்டிக்கடவுள் என்றும் நால் வேதம் பயின்ற பண்டிதன் என்றும் கூறப்படுவதெல்லாம் பார்க்கப் போனல் உண்மையல்ல. சிவனே அத்தகைய அபிமானத்தை அவர்களிடத்தில் தோற்றுவிக்கிருன். ஆகவே சீவன் வேண்டத் தக்கது — 'பரமாத்மாவும் விசுவாத்மாவும் சிதானந்த சொருபனுகவும் உள்ள சிவன் நானே' என்று உறுதியுடனும் உற்சாகத்துடனும் பக்திரசம் பொங்க பாவித்தலே. இதை 'சமாவேசானந்தம்' என்றும் கூறுவர். இவ்வேண்டுதலே 'தாசபாவம்' என்று இங்கே கூறப் படுவது.[48]

த்ரிக சாஸ்திரத்தில் பக்திக்கு இடமுண்டு. இதை உத்பலாசாரியருடைய சிவஸ்தோத்ராவளியில் காணலாம். ஆலங்காரிகர்கள் நவரசங்களில் பக்தியை ஒன்ருக ஏற்றுக்கொள்வதில்லை. ஆனல் பக்திரசாமிருதசிந்து என்ற நூலில் ரூபகோஸ்வாமி என்ற வைணவர் பக்தியை ஒரு ரசமாகக் கொள்ளவேண்டும் என்று நிறுவியிருக்கிருர். சைவர்களுள் உத்பலதேவர் பக்தியை ரசமாகக் காட்டியிருக்கிருர். ஆனல் இவர் கூறுகின்ற பக்தி த்ரிகதரிசனத்தின் அத்வைதக் கொள்கையை ஒட்டியது. இதில் தியானம், ஜபம், யோகம் ஆகியவை இடம் பெறும். பக்தியாகிற அமிருதரசத்தைப் பருகினவருக்கு சிவன் தன்னையொத்தவனுகத் தோன்றுவான்[49]. பக்தி அபேதசாதனமாகக் கருதப்படுகிறது. சிவனுகிய நானே பிரபஞ்சமாகவும் இருக்கின்றேன் என்று பக்தி சமாவேசத்தினுலே சாதகன் உணர்கின்ருன். இல்நூலிலிருந்து ஓரிரு துதிப்பாடல்களைக் காண்போம்.

'சம்சாரத்திற்கு நிமித்தமாயும், சம்சாரத்தைச் சங்கரிக்கின்றவனுயும், சம்சார உருவினனுயும், சம்சாரத்தினுல் தீண்டப்படாதவனுயும் இருக்கிற சம்புவிற்கு வணக்கம்'

'நின்பால் செலுத்தும் பக்தியாகிற சூரியனின் ஒளியின் சேர்க்கையால் எனது சித்தமாகிற சூர்யகாந்தக்கல்லினின்றும் ராகத்து

வேஷங்கள் முதலான குற்றங்கள் தீப்பொறிகள்போல் பறந்து செல்லட்டும்'.

'தர்மம், அதர்மம், கிரியை, ஞானம், சுகம், துக்கம் இவற்றிற் கிடையே இருந்தபோதிலும் பக்தர்கள் விவரிக்கவியலாத பரமானந்தத்தையே அனுபவிக்கிருர்கள்.'

'மூவுலகங்களுக்கும் (காரணனுயும்), திருநீற்ருல் வெண்ணிறமானவனும் (விபூதியெனும் ஐசுவரியம் உடையவனும்), முக்கண்ணனும் (இச்சாஞானக்கிரியா சக்திகளை உடையவனும்), (பேத உணர்வை வெட்டி வீழ்த்தும்) திரிசூலம் ஏந்தியவனும், நாகத்தை உபவீதமாக அணிந்தவனும் (போகம் துய்ப்போரின் செயல்களை சங்கரிப்பவனும்), சந்திரகலையை தலையிலணிந்தவனும் (சித்சக்தியை) முக்கிய சொருபமாக உடையவனுமான பரமசிவனை வணங்குகிறேன்.'[50]

5. பிற்சேர்க்கை

(i) நூல் மேற்கோள்கள்

1. 'Dvaitadarśanādhivāsitaprāye jīvaloke rahasyasampradāyo mā vicchedi ityāśayaḥ'

— Śivasūtravimarśinī, p. 2.

2. 'Kashmir Shaivism'

— Jagadish Chandra Chatterjee Part I, p. 9.

3. 'Gatānugatika prokta - bhedavyākhyā tamo'panut Tenādvaitāmṛtasphītaḥ Svacchandodyota umbhitaḥ'

— Uddyota Com. on Svacchanda tantra.

4. Yasyōnmeṣa-nimeṣābhyām Jagataḥ pralayodayau Tam śakticakravibhavaprabhavam Śaṅkaram stumaḥ.

5. Vasugupta's Śivasūtrāṇi, Sū. 1.

6. Dṛg-dṛśya viveka, 20.

7. Umāpati Śivam-Śivaprakāśam V. 18.

8. ,, ,, V. 13.

9. Mahāguhāntarnirmagnabhāvajātaprakāśakaḥ Jñānaśaktipradīpena yaḥ sadā tam stumaḥ Śivam

— Bhāskarī, Vol. I p. 193.

10. Utpaladeva's Ajaḍapramātṛ siddhi, V. 9.

11. Kumaraguruparar's Kandar kaliveṇbā, 73.

12. Māyāvine viśuddhāya guhyāya prakaṭātmane
Sūkṣmāya viśvarūpāya namaś citrāya Śambhave

— Śivastotrāvalī II, 12.

13. Tam eva bhāntam anubhāti sarvam, tasya bhāsā sarvam idam vibhāti.

— Kaṭhopaniṣad, V. 15.

14. Kṣemarāja's Parāpraveśikā p. 2.

15. Yasyaiva sphuraṇam sadātmakam asatkalpārthagam bhāsate.

— Dakṣiṇāmūrtyaṣṭakam, V. 3.

16. Yogināmapi mṛdbīje vinaiva icchāvaśena tat ghaṭādi jāyate tattatsthirasvārthakriyākaram.

— Īśvarapratyabhijñāvimarśinī II-iv, 10.

17. Bījasyāntarivāṅkuro jagad idam prāṅ nirvikalpam punar
Māyākalpitadeśakālakalanāvaicitryacitrīkṛtam.
Māyāvīva Vijṛmbhayatyapi mahāyogīva yaḥ svecchayā
Tasmai Śrī gurumūrtaye nama idam Śrī Dakṣiṇāmūrtaye

— Dakṣiṇāmūrtyaṣṭakam, 2.

18. Bījam mām sarvabhūtānām viddhi Pārtha sanātanam

— Bh. Gītā, VII. 10.

19. Yo mām paśyati sarvatra sarvam ca mayi paśyati
Tasyāham na praṇaśyāmi sa ca me na praṇaśyati

— Bh. Gītā, VI. 30.

20. K. C, Pandey — Abhinavagupta, pp. 238-239.

21. Somānanda's Śivadṛṣṭi, I. 37-38.

22. Nānāvidha varṇānām rūpam dhatte yathāmalaḥ sphaṭikaḥ
Suramānuṣapaśupādaparūpatvam tadvad Īśo'pi

— Abhinavagupta's Paramārthasāra. V. 6.

23. Nijaśaktivaibhavabharāt aṇḍacatuṣṭayam idam vibhāgena
Śaktir mayā prakṛtiḥ pṛthvī ceti prabhāvitam prabhunā

— Paramārthasāra V. 4.

24. Puruṣa evedam sarvam yad bhūtam yacca bhavyam
Utāmṛtatvasya Īśānaḥ Yad annena adhirohati

— Śvetāśvataropaniṣad, III. 15.

25. Paramātmasvarūpam tu sarvopādhivivarjitam
Caitanyam ātmano rūpaṁ sarvaśāstreṣu paṭhyate.

— Śivasūtravimarśinī, P. 7.

26. Yadyajjñeyam idam tattvam neti santyajya yuktibhiḥ
Prāpyāvaśiṣṭam cinmātram so'smi so'smīti bhāvaya

— Yogavāsiṣṭham.

27. Māyāparigrahavaśāt bodho malinaḥ pumān paśur bhavati
Kāla-kalā-niyativaśāt rāgavidyāvaśena sambaddhaḥ

— Paramārthasāra, V. 16.

28. Śivajñānabodham of Meykaṇḍār, Sū. 2 adhik-2.

29. Aruṇaivadivel Mudaliar — Siddhānta Vināviṭai p. 264.

30. Māyāvibhedabuddhiḥ nikhilabhāveṣu
Nityam tasya niraṅkuśavibhavam veleva vāridhe rundhe

— Tattva Śandoha, 5.

31. Īśvaraḥ sarvabhūtānām hṛddeśe arjuna tiṣṭhati
Bhrāmayan sarvabhūtāni yantrārūḍhāni māyayā.

— Bh. Gītā XVIII, 61.

32. Gītārthasaṅgraha, Com. on Bh. Gītā by Abhinavagupta XVIII, 61.

33. Jñānajñeyasvarūpiṇyā śaktyā paramayā yutaḥ
Padadvaye vibhur bhāti tadanyatra tu cinmayaḥ

— Spandaśāstra, Niś. 1, Kār. 18.

34. Jāgradviśvam bhedāt svapnas tejaḥ prakāśamāhātmyāt,
Prājñaḥ suptāvasthā jñānaghanatvāt tataḥ param turyam.

— Abhinavagupta's Paramārthasāra, 35.

35. Tanmātrodayarūpeṇa mano'hambuddhivṛttinā
Puryaṣṭakena samruddhas taduttham pratyayodbhavān
Bhuṅkte paravaśo bhogam tadbhāvāt samsared ataḥ

— Spandakārikā, 19-20.

36. Nartaka ātmā.
Raṅgaḥ antarātmā.
Prekṣakāni indriyāṇi.

— Vasugupta's Sivasūtrāṇi, 9-11.

37. Abhinavagupta's Īśvarapratyabhijñāvivṛtivimarśinī

— Vol. II. Adh. I, Vimarśa 4, P 63.

38. Yasmāt sarvamayo jīvaḥ sarvabhāvasamudbhavāt
Tatsamvedanarūpeṇa tādātmyapratipattitaḥ
Tena śabdārthacintāsu na sāvasthā na yā śivaḥ
Bhoktaiva bhogyabhāvena sadā sarvatra samsthitaḥ.
Iti vā yasya samvittiḥ krīḍātvena akhilam jagat
Sa paśyan satatam yukto jīvanmukto na samśayaḥ

— Spandakārikā, III, 1-3.

39. Śivajñānasiddhiyār, supakkam, 8, 27.

40. Eṣa Cānantaśaktitvāt ayam ābhāsayatyamūn
Bhāvān icchāvaśād eṣā kriyā nirmātṛtāsya sā

— Īśvarapratyabhijñāvimarśinī II, 136.

41. Mokṣasya naiva kiñcit dhāmāsti na cāpi gamanam anyatra
Ajñānagranthibhidā svaśaktyabhivyaktatā mokṣah.

— Paramārthasāra, V. 60

42. Madhyavikāsāt Cidānandalābhaḥ

— Pratyabhijñāhṛdayam, 17.

43. Tirumantiram, Kecari Yogam, 6.

44. Uktā saiva ca viśrāntiḥ sarvāpekṣānirodhataḥ
Svātantryam atha kartṛtvam mukhyam īśvaratāpi ca

— Ajaḍapramātṛsiddhi, 23.

45. Taistairapyupāyacitaiḥ upanatas tasyāh sthitopyantike
Kānto lokasamāna evam aparijñāto na rantum yathā
Lokasyaiṣa tathānavekṣitaguṇaḥ svātmāpi viśveśvaro
Naivāyam nijavaibhavāya tad iyam tatpratyabhijñoditā.

— Īsvarapratyabhijñāvimarśa, 4.2.2.

46. Yadā guruvaraḥ samyak kathayet tad asamśayam
Muktas tatraiva kāle'sau yantravat kevalam vaset.

— Kularatnamālikā quoted in Paramārthasāra, P. 163.

47. Tvām agādham avikalpam advayam
Svasvarūpam akhilārthaghasmaram
Āviśan aham umeśa, sarvadā
Pūjayeyam abhisamstuvīya ca.

— Śivastotrāvalī, 13, 20.

48. Nātha lokābhimānānām apūrvam tvam nibandhanam
Mahābhimānaḥ karhi syām tvadbhaktirasapūritah.

— Śivastotrāvalī, 9. 13.

49. Jayanti bhaktipīyūṣa rasāsavavaronmadāḥ
Advitīya api sadā tvaddvitīyaḥ api Prabho

— Śivastotrāvalī I, 5

50. Om Nātham tribhuvananātham
bhūtisitam trinayanam triśūladharam
Upavītikṛtābhoginam
Indukalāśekharam vande.

— Śivastotrāvalī XX. I.

(ii) அரும்பத உரை

அநுக்ரகம் : தெய்வ அருள்.

அபிவ்யக்தி : வெளிப்பாடு.

அணு : குறைந்த ஞான கிரியா சக்திகளையுடைய சீவான்மா.

அனுத்தரம் : (ந + உத்தரம்) தனக்கும் மேலான ஒருவன் இல்லாத பரமசிவன்.

அஹந்தா : அஹம் (நானே) இப்பிரபஞ்சம் என்று கருதும் பரம சைதன்யம்.

ஆத்மா : (அந் = உயிர்ப்பு; அத் = சஞ்சரித்தல்) என்பவற்றைச் செய்யும் சீவன்.

ஆபாசம் : மூலத்தை யொத்த நிழல்; சித்திரம் போன்ற பிரபஞ்சம்.

ஆவரணம் : மறைப்பு அல்லது தளை.

ஆவேசம் : மற்ெருரு பொருளின் தன்மையை ஏற்றல்.

உபாதி : சார்புப் பொருள்.

கலா : (கலை) குறுகிய கர்த்திருத்துவத்தின் தோற்றநிலை.

கேசரீ : வாமேசுவரீ சக்தியின் ஒரு நிலை. ஆகாசரூபமாக சைதன்யம் பிரதிபலித்தல் (கம் = ஆகாசம், சரீ = தொழிற்படுதல்).

கோசரீ : வாமேசுவரீ சக்தியின் மற்ெருரு நிலை; அந்தக் கரணத்தில் நின்று தொழிற்படுதல் (கோ = இந்திரியம், இந்திரியத்தின் ஆசிரயமான அந்தக்கரணம்).

சகலர் : ஆணவம், மாயீயம், கார்மம் என்னும் மும்மலங்களை உடைய சீவன்.

சக்தி : சிவனிடத்தே பிரிப்பின்றி இருக்கும் சுவாதந்திரியம்.

சக்திபாதம் : இறையருள் வீழ்ச்சி.

சம்சாரி : (சம் + ஸ்ரு) புதுப்புது உடலில் சென்று கொண்டேயிருக்கும் சீவன்.

சமாவேசம் : சீவசைதன்யம் சிவசைதன்யத்தில் லயித்தல்.

சம்வித் : (வித் = அறிதல்) முற்றறிவுடைய பரமசைதன்யம்.

சாமரஸ்யம் : சமநீர்மை அல்லது ஒன்றுதல்.

சுவாதந்திரியம் : பரமசிவன் தன்னிச்சையாகத் தொழிற்படுதற்குரிய சக்தி.

தந்த்ரம் : ஆகமம்.

திக்சரீ : புறக்கரணங்களோடு தொடர்புகொண்டு பல திசைகளிலும் செல்லும் வாமேசுவரியின் மற்றொரு நிலை.

திரோதானம் : மறைப்புச் சக்தி.

துரீயம் : விழிப்பு, கனவு உறக்கம் என்னும் மூன்று நிலைகளிலும் ஊடுருவி நிற்கும் நான்காவது நிலை. இது சாக்ஷி சைதன்யம் என்றும் கூறப்படும்.

த்ரிகம் : பதி, பாசம், பசு முதலானவற்றின் முக்கூட்டு.

பட்டாரிகை : சிவபட்டாரிகை எனப்படும் சிவசக்தி. பர்த்தா (தலைவன்) என்பதன் பெண்பாற் சொல்.

பராமர்சம் : (நானே பிரபஞ்சமாயிருக்கிறேன் என்று) எண்ணுதல்.

பாவனை : மீண்டும் மீண்டும் நினைத்தல்.

பிரகாசம் : சைதன்யம் பிரபஞ்சமாக வெளியீட்டினைப் பெறுதல்.

பிரகிருதி : 'புத்தி' முதல் 'பூமி' ஈறுன தத்துவங்களின் தோற்றுவாய்.

பிரத்யபிஜ்ஞை : பழம்பொருளை உணர்ந்து நினைவு கூர்தல்.

பிரமாதா : அறிவோன் ; சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர், மந்திரர், மந்திரேசுவரர், மந்திரமகேசுவரர், சிவன் என்ற எழுவகை அறிவோர்கள்.

பிரமேயம் : அறியப்படு பொருள்.

பிரளயாகலர் : உலகம் ஒடுங்கிய நிலையில் ஆணவம், கருமம், என்னும் இருமலத்தை உடையோர்.

புரியட்டகம் : ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம், புத்தி, அகங்காரம், மனம் என்ற எட்டு தத்துவங்களாலான சூக்கும சரீரம்.

பூசரீ : உலகப் பொருள்களில் பொருந்தியுள்ள வாமேசுவரி யின் நிலை.

பைரவர் : 'ப' பரணத்தை (காத்தலை)யும், 'ர' ரவணத்தை (சங்காரத்தை)யும், 'வ' வமனத்தை (சிருட்டியை)யும் செய்பவர்.

போதம் : அறிதல்.

மத்யம் : சைதன்யம், சுத்த அகந்தை, மத்யநாடி, பிரம்மநாடி.

மந்த்ர வீர்யம் : 'அஹம்' என்ற மூலமந்திரம்.

மாயை : சிவசக்தி, சிவனின் சுதந்திரத்தன்மை.

முத்திரை : (முத் = ஆனந்தத்தை, ரா = கொடுப்பது)

மோக்ஷம் : தளையினின்றும் விடுபடுதல்.

ராகம் : சிவனின் பூர்ணத்வம் குறுகி சிறுசிறு பொருள்களில் வைக்கப்படும் பற்று.

வாமேசுவரீ : (வாமம் = மாற்றுமுறை) பராசக்தி, அபேத நிலையை விடுத்து பேதநிலையைத் தோற்றுவிக்கும் சக்தி.

விகல்பம் : பேத அறிவு.

விஞ்ஞானகலர் : மெய்யறிவு பெற்று ஆணவமலம் ஒன்றே கொண்டவர்.

வித்தை : எல்லைக்குட்பட்ட சிற்றறிவு.

விமர்சம் : பரமசிவனின் கிரியாசக்தியோடு கூடிய ஞானம். இதனால் சிருட்டி நிகழ்கிறது.

விபூதி : விபவம், ஈசுவரனின் தன்மை, ஐசுவரியம்.

விஸ்புரணம் : ஸ்புரத்தை அல்லது பிரகாசித்தல் : சிவன் பிரபஞ்சமாகப் பரிமளித்தல்.

ஸ்பந்தம் : சக்தியின் அசைவு அல்லது செயற்பாடு. இது லீலை எனவும் கிரீடை எனவும் படும்.

ஆசிரியரைப்பற்றி

சிதம்பரம் தாலுக்கா குணமங்கலம் கிராமத்தில் திரு. பெரிய பெருமாள் பிள்ளைக்கு 22—12—1914இல் மகனாகப் பிறந்தார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1930 முதல் 1936 வரை பயின்றார். 1934இல் பி. ஏ. பட்டமும் 1936இல் எம். ஏ. (சம்ஸ்கிருதம்) பட்டமும் பெற்று அங்கேயே மகாமகோபாத்யாயர் குப்புசாமி சாஸ்திரியாரிடம் 1936 - 38 இல் ஆராய்ச்சி மாணவனாக இருந்தார். 1939 இல் எல். டி. பட்டம் பெற்றார். சென்னை மாநிலக் கல்லூரியில் பத்தாண்டுகள் (1939-49) துணைப்பேராசிரியராகவும் பத்தாண்டுகள் (1957-66 ; 69-71) சம்ஸ்கிருத முதுகலைப்பட்டப்படிப்புத்துறைத் தலைவராகவும் பணியாற்றியபோது ஒப்பிலக்கணம், வேதாந்தம், சாகித்யம் முதலானவற்றை எம். ஏ. மாணவர்களுக்குப் போதித்து வந்தார். 1962-63இல் சென்னை அரசியல் கீழ்த்திசை ஏட்டுச்சுவடி நிலையக் காப்பாளர் பொறுப்பையும் ஏற்றிருந்தார். 1949-54இல் திருவையாறு சம்ஸ்கிருதம் தமிழ் அரசர் கல்லூரி முதல்வராகவும், 1954-56இல் கீழ்த்திசை மொழிப்பள்ளிகள் கல்லூரிகள் ஆகியவற்றின் மாநிலக் கண்காணிப்பாளராகவும், 1966-69இல் கல்லூரிக் கல்வித் துணை இயக்குநராகவும் பணிபுரிந்துள்ளார். 1971இல் ஓய்வு பெற்றபின் சென்னைப் பல்கலைக் கழகப் பதிவாளராக 1971-74 ஆண்டுகளில் பணிபுரிந்து பின்னர் 1975 செப்டம்பர் முதல் சென்னை தமிழ், சம்ஸ்கிருதம் பிற இந்திய மொழியாராய்ச்சி நிறுவனத்தில் சம்ஸ்கிருதப் பிரிவின் இயக்குநராகப் பணிபுரிந்து வருகிறார்.

கோலாலம்பூரில் 1967 இல் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிலும், மொழி, சம்ஸ்கிருதம் பற்றிய பிற அகில இந்திய மாநாடுகளிலும் பங்கேற்றிருக்கிறார்.

இவருடைய நூல்களில் குறிப்பிடத்தக்கவை

1. வடமொழி இலக்கியச்சோலை (சில வானொலிப் பேச்சுகளின் தொகுப்பு, 1966).

2. மாதவாசாரியாரின் 'சைவ தரிசனம்' — ஆங்கில மொழி யாக்கம் (சென்னைப் பல்கலைக் கழகம், 1973).

3. உமாபதி சிவாசாரியாரின் 'சதரத்ன சங்கிரகம்' — ஆங்கில மொழியாக்கம் (சென்னைப் பல்கலைக் கழகம், 1973).

4. இந்திய எழிற்கலை — (சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவத் துறைப் பொன்விழா வெளியீடு, 1977).

5. க்ஷேமராஜரின் 'பிரத்யபிஜ்ஞா ஹ்ருதயம்' — தமிழ் மொழி யாக்கம், (சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவத்துறைப் பொன்விழா வெளியீடு, 1978)

இவர் நடத்திய அறக்கட்டளைச் சொற்பொழிவுகளில் குறிப்பிடத் தக்கவை.

1. காசி, அலகாபாத் சர்வகலாசாலைகளில் 'சைவசித்தாந்தம்' பற்றி ஸ்ரீ அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள் சிவஞான சித்தியார் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் (1973)

2. சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'பக்திக்கோட்பாடு' பற்றிப் பேராசிரியர் வெங்கடரத்னம் அறக்கட்டளைச் சொற் பொழிவுகள் (1967)

3. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 'பகவத்கீதை' பற்றி துர்க்கமணி சுந்தரேச அறக்கட்டளைக் கீதைச் சொற் பொழிவுகள் (1976).

1972 இல் தருமையாதீன மகாசந்நிதானம் சுவாமிகளால் 'மும் மொழிக் கொண்டல்' என்னும் பட்டம் வழங்கப்பெற்றது. இவர் ஆற்றிய சம்ஸ்கிருத சேவை குறித்து 1975இல் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஆசார்ய சுவாமிகளின் ஆசியுடன் ஆடை அணிவிக்கப் பெற்றது.

OTHER GOLDEN JUBILEE PUBLICATIONS

In English

BEING AND UNITY IN WESTERN PHILOSOPHY
by Herbert Herring

DVAITA VEDĀNTA
by S. S. Raghavachar

VIŚIṢṬĀDVAITA
by S. S. Raghavachar

RELIGION, LANGUAGE AND PHILOSOPHY
by N. H. Palmer

INDIAN AESTHETICS
by T. P. Meenakshisundaran

CHRISTIANITY AND TAMIL CULTURE
by Ignatius Hirudayam

PERSPECTIVES IN SAIVISM
by V. Ramakrishnan

LECTURES ON SOME ASPECTS OF INDIAN SOCIAL PHILOSOPHY
by T. P. Meenakshisundaran

CHRISTIAN POETS AND TAMIL CULTURE
by T. Dayanandan Francis

REFLECTIONS ON VEDANTA
by Herbert Herring

In Tamil

க. வச்சிரவேல் முதலியார்,
சிவஞானபாடியத் திறவு

வை. இரத்தினசபாபதி,
வீரசைவம்

பெ. திருஞானசம்பந்தன்,
இந்திய எழிற்கலை

சோ. ந. கந்தசாமி,
பௌத்தம்

பெ. திருஞானசம்பந்தன்,
பிரத்யபிஜ்ஞாஹ்ருதயம்

தி. தயானந்தன் பிரான்சிஸ்,
கிறிஸ்தவக் கவிஞர்களும் தமிழ்ப் பண்பாடும்

தா. ஏ. ஞானமூர்த்தி,
சமணம்

In English and Tamil

ISLAM, INDIAN RELIGIONS AND TAMIL CULTURE
by M. M. Ismail and S. M. Sulaiman